# கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்

# ஆண்டறிக்கை

**2024**

# உள்ளடக்கம்


**பல்கலைக்கழகத்தின் இலச்சினை** 96
**நோக்கக் கூற்று** 96
**பணிக் கூற்று** 96
**அடிப்படை பெறுமதிகள்** 97
**பல்கலைக்கழகத்தின் முன்னுரிமை இலக்கு** 97
**பல்கலைக்கழகத்தின் பிரதான பெறுபேறுகள் துறை** 97
**துணைவேந்தரின் ஆசிச் செய்தி** 97 – 99
**பல்கலைக்கழகம் பற்றிய அறிமுகம்** 100 - 101

1. **நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்** 102
1.1 பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் 102 - 103
1.2 பல்கலைக்கழக நிருவாக சபை 104 - 105
1.3 நிருவாக சபையின் உப குழுக்கள் 105
1.4 பல்கலைக்கழக மூதவை 106
1.5 மூதவையின் உப குழுக்கள் 107
1.6 நிறுவனக் கட்டமைப்பு 108
2. **2024 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்** 109
3. **மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரத் தகவல்கள்** 110
3.1 கல்விசார் செயலாற்றுகை 110
3.1.1 கற்கைப் பிரிவுகளுக்கமைய பட்டத் தேர்வு மாணவர் எண்ணிக்கை 110
3.1.2 இளமாணிப் பட்டப் பாடநெறிகள் 111
3.1.3 2024 ஆம் ஆண்டில் பட்டதாரிகள் பற்றிய விபரம் 111
3.1.4 பீடங்களுக்கமைய கல்வித் தரங்களுக்கான பங்களிப்பு 111
3.1.5 2024 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான மஹபொல மற்றும் மாணவர் உதவு தொகை பற்றிய விபரம் 112
3.1.6 மாணவர்களுக்கான செலவுகள் (2024) 112
3.1.7 2024 ஆம் ஆண்டில் மாணவர்களிடையே விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள விதம் 112
3.1.8 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் 113
3.1.9 2024 ஆம் ஆண்டில் முனைப்பான பாடநெறிகள் பற்றிய விபரம் 113
3.1.10 வெளிவாரி டிப்ளோமா பாடநெறிகள் 113
3.2 ஆளணி பற்றிய விபரம் 114
3.2.1 கல்விசார், கல்விசார் உதவி மற்றும் நிறைவேற்று ஆளணி பற்றிய விபரம் 114
3.2.2 நிர்வாக மற்றும் நிதிசார் அலுவலர்கள் பற்றிய விபரம் 114
3.2.3 கல்விசாரா ஆளணி பற்றிய விபரம் 115
3.2.4 ஆண்டினுள் ஆளணியில் ஏற்பட்ட மாற்றங்கள் 115
3.2.5 ஆளணியை சேவையில் ஈடுபடுத்தல் 116
அ) கற்கைப் பிரிவு மட்டத்தில் கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணியை சேவையில் ஈடுபடுத்தல் 116
ஆ) பீடங்கள் மட்டத்தில் கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணியை சேவையில் ஈடுபடுத்தல் 117
இ) நூலகத்திற்கான ஆளணியை சேவையில் ஈடுபடுத்தல் 117
ஈ) நிறைவேற்று மற்றும் கல்வி சாரா ஆளணியை சேவையில் ஈடுபடுத்தல் 118
3.3 பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள் 119
3.3.1 பல்கலைக்கழகத்தினால் காணிகள் மற்றும் கட்டிடங்கள் பயன்பாடு பற்றிய விபரம் 119
3.3.2 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 120

3.4 நூலக புத்தகங்கள் பற்றிய விபரம் 2023/2024 120

**4. பிரதான முடிவுகள் (வெளியீடுகள்) பகுதியில் 2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயலாற்றுகை** 121

4.1 பட்டதாரிகளை சேவையில் ஈடுபடுத்தல் 121

4.1.1. தொழில்சார் வழிகாட்டி மற்றும் ஆலோசனை 121

4.1.2 பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான மையம் (CGEE) 121

4.1.3 உடற் கல்வி 122 - 125

4.2 ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளை மேம்படுத்தல் 125

4.2.1 சீ. டி எஸ். குலதிலக்க ஆவணக் காப்பகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (CDSKARU) 125 - 126

4.2.2 2024 ஆம் ஆண்டில் ஆளணியினால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிப் பத்திரங்கள் / முன்னிலைப்படுத்தல்கள் 127 - 129

4.3 புத்தாக்கம் மற்றும் ஆக்கப்படைப்பு அலுவல்கள் 130

4.3.1 ஆராய்ச்சி, ஆக்கப்பூர்வமான பணிகள் மற்றும் அறிவுப் பகிர்வு நிலையத்தின் செயலாற்றுகை 130

4.3.2 கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் 130 - 132

4.3.3 கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி 132 - 133

4.3.4 பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு 133 - 134

4.4 பல்கலைக்கழகத்தின் தரச் சான்றிதழ் 134

4.4.1 தர உத்தரவாத நிலையம் 134

4.4.2 ஆளணியின் திறன் விருத்தி 135

4.5 தேசிய மற்றும் சர்வதேச பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு 136

4.5.1 சர்வதேச ஒத்துழைப்பு 136

4.5.2 கைத்தொழில் சார்ந்த ஒத்துழைப்புக்கள் 137

4.5.3 சமூக நல்லிணக்கத்திற்கான நிலையம் 137

4.6 நிதி நிலைபெறுதகு தன்மை 137

**5. பேண்தகு அபிவிருத்தியை இலக்குகளுடன் (SDGs) பல்கலைக்கழகத்தின் செயலாற்றுகை இயைந்திருத்தல்** 138 - 140

**6. கணக்காய்வுக் குழு அறிக்கை - 2024** 141

**7. 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நித் கூற்றுக்கள்** 142 - 183

**8. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்காக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** 184 - 192

**9. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்காக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – பதில்கள்** 193 - 198

## பல்கலைக்கழகத்தின் இலச்சினை

பல்கலைக்கழக இலச்சினையில் சித்தரிக்கப்பட்டுள்ள பிரதான படம் “சீனி மலர்” ஆகும். இது இலங்கையின் மிகவும் பிரபலமான பாரம்பரிய மலர் வடிவங்களில் ஒன்றாகும். வடிவமைப்பின் சட்டகம் ஒரு வட்ட வடிவத்தை எடுக்கிறது. கண்டியில் உள்ள அம்பெக்க தேவாலாயத்திலும், றுஹுணு கதிர்காம தேவாலாயத்திலும் உள்ள மரச் சிற்பங்களில் காணப்படும் இந்த பாரம்பரிய மலர் வடிவமைப்பின் சித்தரிப்பு, பாரம்பரிய கலை வடிவங்களின் சிறப்பால் வளர்க்கப்படும் மிகவும் சிக்கலான கலைப் படைப்புகளை உருவாக்கும் பல்கலைக்கழகத்தின் திறனைக் குறிக்கிறது. இலச்சினையில் உள்ள பழுப்பு மற்றும் இளம் மஞ்சள் நிறங்கள் அழகியல் கலைகளைக் குறிக்கின்றன. இலச்சினையின் உள் மற்றும் வெளிப்புற வட்டங்களுக்கு இடையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பல்கலைக்கழகத்தின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### நோக்கக் கூற்று

மானிட வர்க்கத்தின் கலாச்சார வாழ்க்கையை செழிப்படையச் செய்தல்

### பணிக் கூற்று

**பணி பற்றிய விரிவான விளக்கம்**

ஆக்கப்பூர்வமான கலைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கற்கைத் துறைகள் சம்பந்தமாக உலகில் மிகவும் இற்றைப்படுத்தப்பட்ட அறிவை, அந்தந்த துறைகளில் ஆராய்ச்சி மற்றும் ஆக்கப்பூர்வமான நடைமுறையில் சிறப்புத் தேர்ச்சியில் பிரசித்தமான, சிறப்பான தகைமைகளைக் கொண்டுள்ள கல்வி ஊழியர்கள் மூலம் நாம் சமூகத்திற்கு வழங்குவோம். அது தேசிய மற்றும் சர்வதேச மாணவர்களுக்கு சிறந்த கேள்வியைக் கொண்டுள்ள படைப்பாற்றல் கலைப் பல்கலைக்கழகமாக எங்களைப் பரிணமிக்கச் செய்யும். படைப்பாற்றல்மிக்க கைத்தொழில்கள் மற்றும் கல்வித் துறை ஆகிய இரண்டு துறைகளிலும் சிறப்பானவர்களாகுவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ள இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டக் கல்வி மூலம் உயர்தரமான தொழில் வல்லுனர்கள் - ஆராய்ச்சியாளர்களை நாம் உருவாக்குகின்றோம். ஆக்கப்பூர்வமான ஈடுபாடுகள் மூலம் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஊடாக எமது அறிவு அட்டவணையிடப்பட்ட சஞ்சிகைகள், சித்திரக் கண்காட்சிகள் மற்றும் திரைப்பட விழாக்கள் போன்ற தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தளங்களில் வெளியிடப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்றது. நிதி ரீதியாக சாத்தியமாக இருப்பதுடன், ஆக்கபூர்வமான பயன்பாட்டின்போது சமூக ரீதியாக புத்திசாலித்தனமாக இருக்க முடியுமான விதத்தை நாம் படைப்பாற்றல்மிக்க கைத்தொழில்களுக்கு நாம் உதாரணங்களைக் காண்பிக்கின்றோம். இலங்கையில் மட்டுமன்றி உலகம் பூராவும் கைத்தொழில் மற்றும் கல்வியின் போக்குகளைத் தயாரித்தல் மற்றும் கொள்கை உருவாக்குபவர்களான நாம் 2030 ஆம் ஆண்டாகும்போது ஆசியாவில் படைப்பாற்றல்மிக்க கலைகளுக்காக மிகவும் விரும்பப்படும் உயர்கல்வி நிறுவனமாக நாம் பரிணமிப்போம்.

## அடிப்படை பெறுமதிகள்

i. புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் அதே வேளையில் பாரம்பரியத்தை பாதுகாத்தல்
ii. படைப்பாற்றல் பயன்பாடு, ஆராய்ச்சி மற்றும் கல்வியில் சிறந்து விளங்குதல்.
iii. வெளிப்படுத்தல் புலமையை ஊக்குவித்தல்
iv. கலை அடையாளத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துதல்

### பல்கலைக்கழகத்தின் முன்னுரிமை இலக்கு

2020 ஆம் ஆண்டாகும்போது ஆசியாவில் படைப்பாற்றல் கலைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட அதிக கேள்வியைக் கொண்டுள்ள மற்றும் நிதி ரீதியாக பலம்மிக்க உயர்கல்வி நிறுவனமாகப் பரிணமித்தல்

### பல்கலைக்கழகத்தின் பிரதான பெறுபேறுகள் துறை

1. பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு
2. ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்
3. புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றல் பணிகள்
4. தேசிய மற்றும் சர்வதேச பங்களிப்புகள் மற்றும் ஒத்துழைப்பு
5. நிதி நிலைபெறுதகு தன்மை
6. சர்வதேசக் கண்ணோட்டம்

## துணைவேந்தரின் ஆசிச் செய்தி



கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் ஆறாவது துணைவேந்தராக, பல்வேறு அம்சங்களில் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் சவால்மிக்க காலப் பகுதியில் 2023 ஒக்தோபர் 12 ஆம் திகதி எனது கடமைகளை ஆரம்பித்தேன். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக, ஏனைய செயற்பாடுகள் உள்ளிட்ட கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைளுக்காக குறைந்த நிதி மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதற்கு அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளிடையே கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் கற்பித்தல், இடவசதிகள் போதாமை உட்பட 2023 இல் நடைபெற்ற கல்விசாரா ஆளணியின் பணிப் பகிஷ்கரிப்பு மற்றும் கல்விசார் மற்றும் நிர்வாகப் ஆளணிப் பற்றாக்குறையானது கற்பித்தலின் தரத்தை நேரடியாகப் பாதிக்கும் பிரச்சினைகளாகும். எனது தலைமையில் இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் போன்றே பட்டதாரி வேலைவாய்ப்பு தொடர்பில் வெற்றியை அடைவதற்கு மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகின்றது.

அதற்காக, கீழே விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகிறன.

**குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள்**

- பல்வேறு கலை கலாசார நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக இலங்கை சுற்றுலா சபை, கொழும்பு மாநகர சபை போன்ற அரச மற்றும் அரச சார்பற்ற தரப்புக்களுடன் நிலவுகின்ற கைத்தொழில் கூட்டாண்மைகளை பலப்படுத்தல் மற்றும் புதிய கூட்டாண்மைகளை ஏற்படுத்திக்கொள்ளல்.

- பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவின் ஒத்துழைப்புக்களை மேம்படுத்தல். 2024 இல் மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்தில் அரச நாடக விழா மற்றும் நெலும் பொக்குண (தாமரைத் தடாகம்) திறந்த அரங்கில் அரச இசை விருது வழங்கும் வைபவத்தை வெற்றிகரமாக அறிக்கையிட்டோம்.

- மாணவர்களிடம் காணப்படும் தகைமைகளை உலகளாவிய ரீதியில் அங்கீகரித்துக்கொள்வதற்காக கற்றல் மொழியை ஆங்கிலத்திற்கு மாற்றியமைத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தல் ஊடாக மாணவர்களுக்கு 21 ஆம் நூற்றாண்டின் திறன்களைப் பெற்றுக்கொடுத்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச கலாசாரத் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகள் (அவுஸ்திரேலிய நன்கொடையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவி மூலம்) மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்துடன் இணைந்து 3 ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் 2 கலாசார நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டன.

- பட்டப்பின் படிப்பு கற்கை பீடத்தில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களை சுயேச்சையாக மேற்பார்வை செய்யும் சர்வதேச அறிஞர்களுடன் சர்வதேச ஆராய்ச்சி ஒத்துழைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- இந்தத் துறையில் புகழ் பெற்ற சிலரை தன்னார்வ அடிப்படையில் வெளிவாரியான பேராசிரியர்களாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

- நவீன மற்றும் புத்தாக்க ஆராய்ச்சி விரிவாக்க உத்திகளை நடைமுறைப்படுத்தல்

- 3 ஆராய்ச்சி ஆவண திரைப்படங்கள் மேம்படுத்தப்பட்டு, நிர்மாணிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

    1. ‘‘கெட்ட பெரய (ஒரு வகை முரசு) / மேல் நாட்டு முரசு” உற்பத்தி செயல்முறை
    2. ”அங் கெலிய” ritual
    3. ‘‘ஓரங்கட்டப்பட்ட சோனகரின் இசை’’ மற்றும் அது பற்றிய தவறான புரிதல் (இலங்கையில்)

- கடதாசிப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளிலிருந்து டிஜிட்டல் செயற்பாடுகளுக்கு மாறுவதனூடாக வலுசக்தியை (அனல், நீர் மின்சாரம், புதுப்பிக்கத்தக்க சக்த் ஆகியவற்றிலிருந்து மானிட சக்தி வரையான அனைத்து வகையான வலுசக்தி) பாதுகாத்தல்.

**நீண்ட கால நடவடிக்கைகள்**

- பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல்

- பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற இடவசதிகள் சிக்கல்களை தவிர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை கையகப்படுத்தல் உட்பட கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான பௌதிக மற்றும் மனித வளங்கள் மற்றும் வசதிகளை பெற்றுக்கொள்ளல்.

- ஆளணியின் ஆராய்ச்சித் திறன்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதலை அதிகரித்தல்.

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்காக கல்விசார் ஆளணி, கல்விசாரா ஆளணி உட்பட ஏனைய அனைத்து ஆளணி அங்கத்தவர்கள் உட்பட பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் உள்ளிட்ட மாணவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கிறேன்.

**பேராசிரியர் ரோஹண நெத்சிங்க**
**படைப்பாற்றல் கலைகள் கற்கை பேராசிரியர்**
PhD (Monash University); MFA (Donetsk Conservatory (USSR), GradDipEd (Sec), BEd (H1) (Monash University); Dip in TAE, Dip in VET Prac, Dip VET (Chisholm TAFE, Australia).
**துணைவேந்தர்**
**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**

## பல்கலைக்கழகம் பற்றிய அறிமுகம்

கட்புலக் கலைகள் மற்றும் அரங்கேற்றக் கலைகளை ஊக்குவிப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்குப் போன்றே இந்த கற்கைத் துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வித் தகைமைகளை வழங்குவதற்கும் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இந்த முக்கிய நோக்கத்தை அடைந்துகொள்ளும்போது திறமையான புத்திஜீவிகளை வளர்த்தல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை விரிவுபடுத்தல் மற்றும் கைத்தொழில்துறை மற்றும் சமூகத்துடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தல் மூலல் கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகளில் கல்வியின் சிறப்பையும் பன்முகத்தன்மையையும் வளப்படுத்த பல்கலைக்கழகம் முயற்சி செய்கின்றது.

இலங்கை, கி.மு 3 ஆம் நூற்றாண்டு வரையான சிறந்த ஒரு வளமான கலை பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆரம்பகால ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பௌத்த விஹாரைகள் மற்றும் பூஜை நடைமுறைகளில் வேரூன்றியுள்ளன. பாரம்பரிய கலை வடிவங்களைப் பாதுகாத்து ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த ஆங்கிலேயர்கள், 1893 இல் இலங்கை தொழில்நுட்ப பாடசாலையை நிறுவியதுடன், பின்னர் 1906 இல் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி என மறுபெயரிடப்பட்டது. இந்த நிறுவனம் இலங்கையில் முறையான கலைக் கல்விக்கான அடித்தளத்தை வழங்கியவாறு சித்தரக் கலை, ஓவியக் கலை, புகைப்படக் கலை, சிற்பக் கலை, நெசவு, தோல் மற்றும் மட்பாண்ட வேலைப்பாடுகள் போன்ற பாடநெறிகளை வழங்கியது.

1949 இல், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கலை மற்றும் கலை நுட்பங்கள் கற்கைப் பிரிவு பிரசித்தி பெற்ற ஓவியர் மற்றும் கல்வியயாளரான திரு. ஜே.டீ.ஏ.பெரேரா அவர்களின் தலைமையின் கீழ் கொழும்பு 07,ஹோர்ட்டன் பிளேஸில் அமைந்துள்ள ஹேவூட் மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டது. தற்போது அதன் கலைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தவாறு இந்த இடத்தில் கட்புலக் கலைகள் பீடம் மற்றும் ஜே.டீ.ஏ.பெரேரா கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. 1952 இல் இந்தக் கற்கைப் பிரிவு அரசாங்கத்தின் கலை நிறுவகமாக உயர்த்தப்பட்டதுடன், அதில் சங்கீதம் மற்றும் நடனப் பிரிவுகளை உள்ளடக்குவதற்காக அதன் பாடத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1953 இல் அது அரசாங்கத்தின் நுண்கலை நிறுவகமாக பெயரிடப்பட்டதுடன் கல்வி அமைச்சின் கீழ் சுயாதீன கற்கைப் பிரிவாக மாற்றப்பட்டது. மாணவர்களிடையே இந்தப் பாடங்கள் மீதான ஆர்வம் அதிகரித்தமையின் காரணமாக சங்கீதம் மற்றும் நடனப் பிரிவுகள் பின்னர் கொழும்பு 07, அல்பிரட் கிரசன்ட் இற்கு கொண்டுவரப்பட்டது. 1960 இல் இந்த நிறுவகம் தேசிய கலை நிறுவகமாக பெயரிடப்பட்டு கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1965 ஆம் ஆண்டாகும்போது இந்த நிறுவகம் மேலும் மாற்றியமைக்கப்பட்டு மூன்று (03) கல்லூரிகளாக விரிவுபடுத்தப்பட்டது.

1. அரசாங்க சித்திரக் கல்லூரி,
2. அரசாங்க இசைக் கல்லூரி
3. அரசாங்க நடனம் மற்றும் பாலே நடனக் கல்லூரி

1974 ஆம் ஆண்டில், இந்தக் கல்லூரிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அழகியல் கற்கைகள் நிறுவகத்துடன் 1978 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ராமநாதன் அகாடமியை அதனுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது. அழகியல் கற்கைகள் நிறுவகம் கலை மற்றும் சிற்பம், இசை, நடனம் மற்றும் பாலே ஆகியவற்றுக்கான கற்கைப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டில் முதன் முதலாக நுண்கலை இளங்கலைப் பட்டத்தை வழங்கியதுடன் இதில் 63 மாணவர்கள் இருந்தனர். 1980 ஆம் ஆண்டில், அழகியல் கற்கைகள் நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதுடன், ராமநாதன் அகாடமி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது. அதே ஆண்டிலேயே அழகியல் கற்கைகளுக்கான மற்றுமொரு நிலையமான ஹொரணை ஸ்ரீபாலி கலைக்கூடம் அழகியல் கற்கைகள் நிறுவகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டதுடன், அது 1993 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு முதல் அழகியல் கற்கைகள் நிறுவகம் இலங்கையில் கலைகள் தொடர்பில் உயர் கல்விக்கான முதன்மையான நிறுவனமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

சிறப்பு அழகியல் கல்விக்கான அதிகரித்து வரும் கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, அழகியல் கற்கைகள் நிறுவகம் 2005 இல் பல்கலைக்கழக தரத்திற்கு உயர்த்தப்பட்டதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இலங்கையின் 15 ஆவது அரச பல்கலைக்கழகமாக மாறியது. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் 2005 ஜூலை 8 ஆம் திகதிய 1400/24 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் 2005 ஜூலை 1 ஆம் திகதி முதல் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் நிறுவப்பட்ட மூன்று கல்லூரிகளும் பின்வருமாறு மறுசீரமைக்கப்பட்டன:

- கட்புலக் கலைகள் பீடம்
- இசைக் கலை பீடம்
- நடனம் மற்றும் நாடகக் கலை பீடம்

தற்போது கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் மூன்று பீடங்கள், 24 கற்கைப் பிரிவுகள், பட்டப்பின் படிப்பு பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வளர்ந்து வரும் இளங்கலை, பட்டப்பின் படிப்பு மற்றும் தொலைக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக அதன் கல்வி சார்ந்த சலுகைகளை விரிவுபடுத்தியுள்ளது.

சவால்களுக்கு மத்தியிலும், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையின் ஒரே பல்கலைக்கழகமாகுமென்பதுடன் கலை, இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகிய கலைத் துறைகளைப் பாதுகாத்தல், புத்தாக்கம் மற்றும் ஊக்குவிப்பதற்கான அதன் பணியை உறுதிப்படுத்துகிறது. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கைத்தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்குவதன் மூலம் சமூகத்தில் அழகியல் மீதான ஆழமான பாராட்டை வளர்க்கும் அதே வேளையில், தேசிய மற்றும் சர்வதேச கலைப் பின்னணியை மேம்படுத்துவதில் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

# 1. நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்

## 1.1 பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் குழாம்

**வேந்தர்**

மாண்புடன் ஓய்வு பெற்ற பேராசிரியர் சுனில் ஆரியரத்ன



**துணை வேந்தர்**

பேராசிரியர் ரொஹான் நெத்சிங்க



**பீடாதிபதிகள்**

**பட்டப்பின் படிப்பு நிறுவகம்**

பேராசிரியர் கோலித்த பானு திசாநாயக்க
(2024.02.11 ஆம் திகதி வரை)



பேராசிரியர் கே.டப்ளியு.கே.எம்.எம்.டப்ளியு.ஐ. பர்டினென்டு
(2024.02.12. ஆம் திகதி முதல்)



**கட்புலக் கலைகள் பீடம்**



சிரேஷ்ட விரிவுரையாளர் ஜகத் ரவீந்திர
(2024.12.1
0 ஆம் திகதி வரை)

விரிவுரையாளர் ஐ.எம்.ரீ.இளங்கசிங்க
(2024.12.11 ஆம் திகதி முதல்)



**இசைக் கலை பீடம்**



சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சரத் பெர்னாந்து

**நடனம் மற்றும் நாடகக் கலை பீடம்**



பேராசிரியர் கே.எம்.எஸ்.குமாரதுங்க

**பதிவாளர்**



டீ.என்.குருசிங்க
பதிவாளர் (பதில் கடமை)
(2024.03.31 ஆம் திகதி வரை)



பீ.ஜீ.எஸ்.பீ.நாணாயக்கார
பதிவாளர் (பதில் கடமை)
(2024.04.01 ஆம் திகதி முதல் 2024.09.01 ஆம் திகதி வரை)



கலாநிதி சானி இம்புல்கொட
பதிவாளர்
(2024.09.02 ஆம் திகதி முதல்)

**நூலகர்**



கலாநிதி ஜீ.ஆர்.பத்மசிரி

**நிதி நிர்வாகி**



டப்ளியு.எம்.டப்ளியு.வன்னிநாயக்க

## 1.2 பல்கலைக்கழக நிருவாக சபை

பல்கலைக்கழக நிருவாக சபையானது அதன் நிறைவேற்று நிறுவனம் மற்றும் நிருவாக அதிகார நிறுவனமாகுமென்பதோடு, 2024 ஆம் ஆண்டில் அமைப்பு கழுள்ளவாறாகும்.

| | |
|---|---|
| **துணை வேந்தர் (தலைவர்)** | பேராசிரியர் ரொஹான் நெத்சிங்க |
| **பீடாதிபதிகள்** | *பட்டப்பின் படிப்பு பீடம்* |
| | பேராசிரியர் கோலித்த பானு திசாநாயக்க (2024.02.11 ஆம் திகதி வரை) |
| | பேராசிரியர் கே.டப்ளியு.கே.எம்.எம்.டப்ளியு.ஐ. பர்டினென்டு (2024.02.12 ஆம் திகதி முதல்) |
| | *கட்புலக் கலைகள் பீடம்* |
| | சிரேஷ்ட விரிவுரையாளர் ஜகத் ரவீந்திர (2024.12.10 ஆம் திகதி வரை) |
| | விரிவுரையாளர் ஐ.எம்.ரீ.இளங்கசிங்க (2024.12.11 ஆம் திகதி முதல்) |
| | *இசைக் கலை பீடம்* |
| | சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சரத் பெர்னாந்து |
| | *நடனம் மற்றும் நாடகக் கலை பீடம்* |
| | பேராசிரியர் கே.எம்.எஸ்.குமாரதுங்க |
| **மூதவையின் பிரதிநிதிகள்** | பேராசிரியர் வஜிர நளிந்த ஜயதிலக்க (2024.07.14 ஆம் திகதி வரை) |
| | கலாநிதி திரு.டீ.டப்ளியு.சல்கமுவ |
| | கலாநிதி திரு.எச்.எம்.எஸ்.எஸ்.ஹேரத் (2024.07.25 ஆம் திகதி முதல்) |
| **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்** | பேராசிரியர் திரு. நிமல் கீர்த்தி தங்கல்ல |
| | கலாநிதி சந்திரவன்ச பதிராஜ |
| | திரு. பிரசாந்த லால் டி அல்விஸ் (ஜனாதிபதி ஆலோசகர்) |
| | திரு.ரீ.தர்மராஜ் |
| | திரு. சுரேஷ் டொமினிக் |
| | திரு. அஜித் டி கொஸ்தா (2024.01.19 ஆம் திகதி வரை) |
| | பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச (2024.07.25 ஆம் திகதி வரை) |

| | |
|---|---|
| **பதிவாளர்**<br>(நிருவாக சபைக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் செயலாளர்) | திருமதி டீ.என்.குருசிங்க - பதிவாளர் (பதில் கடமை) (2024.03.31 ஆம் திகதி வரை)<br><br>திருமதி பீ.ஜீ.எஸ்.பீ.நாணாயக்கார, பதிவாளர் (பதில் கடமை) (2024.04.01 முதல் 2024.09.01 ஆம் திகதி வரை)<br><br>கலாநிதி திருமதி சானி இம்புல்கொட, பதிவாளர் (2024.09.02 ஆம் திகதி வரை) |

## 1.3 நிருவாக சபையின் உப குழுக்கள்

| | | |
|---|---|---|
| 01. | நிதிக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 02. | கணக்காய்வுக் குழு | (தலைவர் - பல். மானி. ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர், திரு.வீ. தர்மராஜ், பட்டயக் கணக்காளர்) |
| 03. | காணிகள் மற்றும் கட்டிடங்கள் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 04. | விடுமுறை மற்றும் அளிப்புக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 05. | பிணைமுறிகள் மீட்பு மீளாய்வுக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 07. | கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சியின் முகாமைத்துவ சபை | (தலைவர் - துணைவேந்தர்) |
| 08. | கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகத்தின் முகாமைத்துவ சபை | (தலைவர் - துணைவேந்தர்) |

## 1.4 பல்கலைக்கழக மூதவை

பல்கலைக்கழகத்தின் நிருவாகம் மற்றும் அறிவுறுத்தல், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விசாரணைகள் தொடர்பான மொத்த வழிகாட்டல்களையும் பல்கலைக்கழக மூதவை வழங்குகின்றது.

| | |
|---|---|
| **துணைவேந்தர் (தலைவர்)** | பேராசிரியர் ரொஹான் நெத்சிங்க |
| **பீடாதிபதிகள்** | *பட்டப்பின் படிப்பு பீடம்*<br>பேராசிரியர் கோலித்த பானு திசாநாயக்க<br>(2024.02.11 ஆம் திகதி வரை)<br><br>பேராசிரியர் கே.டப்ளியு.கே.எம்.எம்.டப்ளியு.ஐ. பர்டினென்டு<br>(2024.02.12 ஆம் திகதி முதல்)<br><br>*கட்புலக் கலைகள் பீடம்*<br>சிரேஷ்ட விரிவுரையாளர் ஜகத் ரவீந்திர<br>(2024.12.10 ஆம் திகதி வரை)<br>விரிவுரையாளர் ஐ.எம்.ரீ.இளங்கசிங்க<br>(2024.12.11 ஆம் திகதி முதல்)<br>*இசைக் கலை பீடம்*<br>சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சரத் பெர்னாந்து<br><br>*நடனம் மற்றும் நாடகக் கலை பீடம்*<br>பேராசிரியர் கே.எம்.எஸ்.குமாரதுங்க |
| **அனைத்து கற்கைப் பிரிவுகளின் தலைவர்கள்** | |
| **அனைத்துப் நிரந்தரமான பேராசிரியர்கள்** | |
| **நூலகர்** | கலாநிதி ஜீ.ஆர்.பத்மசிரி |
| **பீடங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பெயர் குறிப்பிடப்பட்ட இருவர்** | |
| **பதிவாளர் (பதவி வழி அடிப்படையில் மூதவையின் செயலாளர்)** | திருமதி டீ.என்.குருசிங்க, பதிவாளர் (பதில் கடமை)<br>(2024.03.31 ஆம் திகதி வரை)<br><br>திருமதி பீ.ஜீ.எஸ்.பீ.நாணாயக்கார, பதிவாளர் (பதில் கடமை)<br>(2024.04.01 முதல் 2024.09.01 ஆம் திகதி வரை)<br><br>கலாநிதி திருமதி சானி இம்புல்கொட, பதிவாளர்<br>(2024.09.02 ஆம் திகதி வரை) |

## 1.5 மூதவையின் உப குழுக்கள்

| | | |
|---|---|---|
| 01. | நூலகக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 02. | அனுமதிக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 03. | பரீட்சை தவறுகள் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 04. | மதிப்புப் பட்டக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 05. | பட்டமளிப்பு வைபவக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 06. | பாடத்திட்ட மதிப்பீட்டுக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 07. | ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் பணிகள் முகாமைத்துவக் குழு | (தலைவர் - துணைவேந்தர்) |
| 08. | நன்னெறிக் குழு | (தலைவர் - பீடாதிபதி – பட்டப்பின் படிப்பு பீடம்) |
| 09. | மேன்முறையீட்டு சபை | (தலைவர் - பீடத்தின் சிரேஷ்ட பீடாதிபதி) |

## 1.6 நிறுவனக் கட்டமைப்பு

**நிறுவனக் கட்டமைப்பு - கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**



## 2. 2024 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்

**பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பதிவாளர் நியமனம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினரான கலாநிதி திருமதி சானி இம்புல்கொட 2024 செப்டம்பர் 2 ஆம் திகதி கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பதிவாளராக கடமைகளைப் பொறுப்பேற்றார். இது பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிப்பதுடன், நிர்வாகம் மற்றும் நிறுவனம் சார்ந்த வளர்ச்சியில் சிறந்து விளங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை வலப்படுத்துகிறது.

**பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் மற்றும் கட்புலக் கலைகள் பீடத்திற்கு புதிய பீடாதிபதிகள் நியமனம்**

தேசிய மற்றும் சர்வதேச விருது பெற்ற இலங்கை நாடக நிபுணர் மற்றும் திரைப்பட தயாரிப்பாளரான நடனம் மற்றும் நாடகக் கலை பீடத்துடன் இணைக்கப்பட்ட பேராசிரியர் திரு. கே.டபிள்யூ.கே.எம்.எம்.டபிள்யூ.ஐ. ∴பர்டினண்டு அவர்கள் 2024 பெப்ரவரி 12 ஆம் திகதி பட்டப்பின் படிப்பு பீடத்தின் 3 ஆவது பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். பேராசிரியர் ∴பர்டினண்டு அவர்கள் பீடத்திற்கு தனது அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் வழங்குகின்றார்.

புகழ்பெற்ற கலைஞரான கட்புலக் கலைகள் பீடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள கலாநிதி ஐ.எம்.ரீ. இளங்கசிங்க அவர்கள் 2024 டிசம்பர் 11 ஆம் திகதி கட்புலக் கலைகள் பீடத்தின் 7 ஆவது பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். கட்புலக் கலைகள் துறையில் அவரது புகழ்பெற்ற தொழில்சார் வாழ்க்கையானது பீடத்தின் கல்வி மற்றும் படைப்பாற்றல் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உலகளாவிய அங்கீகாரம்**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் 2024 ஆம் ஆண்டில் அருவமான கலாச்சார பாரம்பரியத்தைப் (APHEN-ICH) பாதுகாப்பதற்கான ஆசிய பசுபிக் உயர் கல்வி வலையமைப்பில் அங்கத்துவத்தைப் பெற்று கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் ஒரு சிறந்த திருப்புமுனையை எட்டியுள்ளது. **நிலைபெறுதகு (பேண்தகு)** அபிவிருத்தி இலக்கு (SDG) 4 (தரமான கல்வி), SDG 11 (பேண்தகு நகரங்கள் மற்றும் சமூகங்கள்) மற்றும் SDG 17 (இலக்குகளுக்கான கூட்டாண்மைகள்) ஆகியவற்றுக்கு இணங்க பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் அருவமான கலாச்சார பாரம்பரியத்தை (ICH) பாதுகாப்பதில் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை இந்த அங்கீகாரத்தினூடாக எடுத்தியம்புகின்றது.

**அங்கீகாரம் மற்றும் கௌரவ திறன்கள்**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் அதன் வருடாந்த பட்டமளிப்பு விழாவில் புகழ்பெற்ற நாடக இயக்குனர், கலைஞர் மற்றும் நாடக ஆசிரியர் பராக்கிரம நிரியெல்ல மற்றும் மூத்த இசைக்கலைஞர் ஹேமபால பெரேரா ஆகியோருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்களை வழங்கியது. இந்த சிறப்பு அங்கீகாரமானது நாடகம் மற்றும் இசைத் துறைகளுக்கு அவர்களின் ஆழ்ந்த பங்களிப்புகளை கௌரவித்து கலைகளில் சிறந்து விளங்குவதைக் கொண்டாடுவதற்கும் பாதுகாப்பதற்குமான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றது.

# 3. மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரத் தகவல்கள்

## 3. 1 கல்விசார் செயலாற்றுகை

### 3.1.1 கற்கைப் பிரிவுகளுக்கமைய பட்டத் தேர்வு மாணவர் எண்ணிக்கை

| பீடம் | கற்கைப் பிரிவு | மொத்த மாணவர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 ஆம் ஆண்டு | | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | |
| கட்புலக் கலைகள் பீடம் | சித்திரக் கலை | 19 | 17 | 17 | 15 | 16 | |
| | சிற்பக் கலை | 10 | 7 | 10 | 11 | 6 | |
| | கட்புல தொடர்பாடல் ஆக்கக் கலை | 12 | 13 | 16 | 14 | 9 | |
| | மட்பாண்டக் கலை | 12 | 13 | 10 | 7 | 9 | |
| | பல்வித அறிவியல் ஆற்றல் கலை | 15 | 14 | 15 | 11 | 11 | |
| | ஆடை மற்றும் அணிகலன் கலை | 12 | 10 | 13 | 11 | 11 | |
| | வரலாறு மற்றும் கலைக் கோட்பாடுகள் | 10 | 11 | 7 | 9 | 6 | |
| | பல்லூடகக் கலை | 13 | 15 | 14 | 18 | 15 | |
| | அச்சிடல் கலை | 11 | 11 | 10 | 7 | 8 | |
| **கட்புலக் கலைகள் (சிறப்பு) பட்டம் பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை** | | **114** | **111** | **112** | **103** | **91** | |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | **கற்கைப் பிரிவு** | **1 ஆம் ஆண்டு** | | **2 ஆம் ஆண்டு** | **3 ஆம் ஆண்டு** | **4 ஆம் ஆண்டு** | |
| | மேல் நாட்டு நடனம் | 360* | 346* | 86 | 90 | 70 | |
| | கீழ் நாட்டு நடனம் | | | 79 | 50 | 39 | |
| | சப்ரகமுவ நடனம் | | | 16 | 32 | 21 | |
| | இன்னிசை (சிம்பொனி) | | | 15 | 14 | 08 | |
| | இந்திய மற்றும் ஆசிய நடனம் | | | 25 | 31 | 20 | |
| | நடன அரங்கேற்றக் கலை வரலாறு மற்றும் கோட்பாடுகள் | | | 47 | 50 | 70 | |
| | நாட்டியக் கலை, பாலே நாட்டியம் மற்றும் நவீன நடனங்கள் | | | 58 | 66 | 42 | |
| | தகவல் தொழில்நுட்பம் ** | | | | | | |
| | ஆங்கில மொழி கற்பித்தல் (DELT)** | | | | | | |
| **நடனம் மற்றும் நாடக கலை (சிறப்பு) பட்டம் பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை** | | **360** | **346** | **326** | **333** | **270** | |
| இசைப் பீடம் | **கற்கைப் பிரிவு** | **1 ஆம் ஆண்டு** | | **2 ஆம் ஆண்டு** | **3 ஆம் ஆண்டு** | **4 ஆம் ஆண்டு** | |
| | வட இந்திய இசை | 294* | | 63 | 89 | 118 | 80 |
| | தென்னிந்திய இசை | | | 22 | 18 | 07 | 07 |
| | மேலைத்தேய இசை | | | 52 | 54 | 46 | 39 |
| | மானிட பண்பாட்டியல் இசை | | | 37 | 56 | 54 | 46 |
| | பிரயோக இசை மற்றும் வெகுசன தொடர்பாடல் | | | 35 | 30 | 27 | 29 |
| | இசை அறிவியல் | | | 54 | 23 | 20 | 21 |
| **இசை (சிறப்பு) பட்டம் பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை** | | **294** | | **263** | **270** | **272** | **222** |

குறிப்புக்கள்:- * மாணவர்களுக்காக முதலாம் ஆண்டு பொதுப் பாடநெறியைக் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

** DELT மற்றும் DIT பாடநெறிகளுக்கு தனியாக மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்பட்டனர். பீடங்களின் அனைத்து கற்கைப் பிரிவு மாணவர்கள் இந்தப் பாடங்களைக் கற்றனர்.

### 3.1.2 இளமாணிப் பட்டப் பாடநெறிகள்

- கட்புலக் கலை (சிறப்பு) பட்டம்
- அரங்கேற்றக் கலை (சிறப்பு) பட்டம் - நடனம் மற்றும் நாடகக் கலை
- அரங்கேற்றக் கலை (சிறப்பு) பட்டம் - இசை

### 3.1.3 2024 ஆம் ஆண்டின் பட்டதாரிகள் பற்றிய விபரம்

| பீடம் | இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | பட்டத்தைப் பூர்த்தி முடியாதுபோன மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கட்புலக் கலைகள் பீடம் | 91 | 90 | 01 |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | 279 | 270 | 09 |
| இசை பீடம் | 225 | 211 | 14 |
| **மொத்தம்** | 595 | 571 | 24 |

### 3.1.4 பீடங்களுக்கமைய கல்வித் தரங்களுக்கான பங்களிப்பு

| | முதலாம் வகுப்பு | இரண்டாம் வகுப்பு (மேல்) | இரண்டாம் வகுப்பு (கீழ்) | சித்தி |
|---|---|---|---|---|
| கட்புலக் கலைகள் பீடம் | 2 | 46 | 37 | 5 |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம | 26 | 216 | 27 | 1 |
| இசை பீடம் | 20 | 118 | 49 | 24 |









### 3.1.5 2024 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான மஹபொல மற்றும் மாணவர் உதவு தொகை பற்றிய விபரம்

| பீடம் | மஹபொல புலமைப் பரிசில் பெறுவோர் | | மாணவர் உதவு தொகை பெறுவோர் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ.) | எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ.) |
| கட்புலக் கலைகள் பீடம் | 127 | 1,462,300.00 | 183 | 6,100,000.00 |
| <u>நடனம் மற்றும் நாடக கலை பீடம்</u> | | | | |
| நடனக் கலை பாடநெறி | 111 | 2,152,500.00 | 511 | 18,296,000.00 |
| நாடகக் கலை பாடநெறி | 45 | 413,300.00 | 112 | 448,000.00 |
| இசை பாடநெறி | 124 | 1,462,000.00 | 292 | 1,808,000.00 |
| **மொத்தம்** | **407** | **5,490,100.00** | **915** | **20,552,000.00** |

### 3.1.6 மாணவர்களுக்கான செலவுகள் (2024)

| | |
|---|---|
| மொத்த மீண்டெழும் செலவினம் | ரூ. 1,560,250,868/- |
| மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 3,487 |
| ஒரு மாணவருக்கான வருடாந்த செலவினம் | ரூ. 447,447.91 |

### 3.1.7 2024 ஆம் ஆண்டில் மாணவர்களிடையே விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள விதம்

| விடுதியின் பெயர் | தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| தெஹிவளை பெண்கள் விடுதி | 355 | 1,657 |
| ராஜகிரிய பெண்கள் விடுதி | 910 | |
| தெஹிவளை ஆண்கள் விடுதி | 392 | |

குறிப்பு : விடுதிகளின் உச்ச இயலளவு 1124 மாணவர்கள் எனினும் மேலதிகமாக 141 மாணவர்கள் மாணவர்கள் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்திற்கு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள நிதிசார் உதவிகள்

புகையிரத பருவ கால பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை -

- இசை பீடம் - 172
- நடனம் மற்றும் நாடக கலை பீடம்
  - நடனக் கற்கைநெறி - 169
  - நாடக கற்கைநெறி - 16
- கட்புலக் கலைகள் பீடம் - 48

இ.போ.ச. பருவகால சீட்டை பெற்றுக்கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை

- இசை பீடம் - 10
- நடனம் மற்றும் நாடக கலை பீடம்
  - நடனக் கற்கைநெறி - 22
  - நாடக கற்கைநெறி - இல்லை
- கட்புலக் கலைகள் பீடம் - 31

### 3.1.8 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்

- தத்துவமாணிப் பட்டம் (M.Phil)
- கலாநிதிப் பட்டம் (Ph.D)

### 3.1.9 2024 ஆம் ஆண்டில் முனைப்பான பாடநெறிகள் பற்றிய விபரம்

| பாடநெறி | 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்த மாணவர் எண்ணிக்கை | 2024 ஆம் ஆண்டில் பட்டத்தை பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கை | மதிப்பீட்டிற்கான ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்துள்ள மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தத்துவமாணிப் பட்டம் | 01 | 02 | 02 |
| கலாநிதிப் பட்டம் | 00 | 01 | 05 |
| அழகியற் கலைகள் ஆராய்ச்சி பற்றிய குறுகிய காலப் பாடநெறிகள் (4 ஆம் குழு) | 34 | - | - |

**பட்டப்பின் பாடநெறிகள் மூலம் ஈட்டிய வருமானம் : ரூ. 1,644,000/=**

### 3.1.10 வெளிவாரி டிப்ளோமா பாடநெறிகள்

| பாடநெறியின் பெயர் | கல்வியாண்டு | 2024 இல் பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை | 2024 இல் பாடநெறிகளை ஆரம்பித்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சித்திரக் கலை மற்றும் ஓவியம் டிப்ளோமா | 2022/2023 | 41 | |
| சித்திரக் கலை மற்றும் ஓவியம் டிப்ளோமா | 2023/2024 | | 25 |
| நடன டிப்ளோமா | 2023/2024 | 66 | |
| | 2024/2025 | | 62 |

**வெளிவாரிப் பாடநெறிகள் மூலம் ஈட்டிய வருமானம் : ரூ. 9,840,280/=**

## 3.2 ஆளணி பற்றிய விபரம்

### 3.2.1 கல்விசார், கல்விசார் உதவி மற்றும் நிறைவேற்று ஆளணி பற்றிய விபரம்

| | சம்பளக் குறியீடு | சேவை மட்டம் | அங்கீகரிக் கப்பட்ட ஆளணி | பணியாற் றும் ஆளணி | வெற்றிட ம் |
|---|---|---|---|---|---|
| பேராசிரியர்/ சிரேஷ்ட பேராசிரியர் | U - AC 5 | சிரேஷ்ட மட்டம் | 16* | 174 | 19 |
| உதவிப் பேராசிரியர் | U - AC 4 | சிரேஷ்ட மட்டம் | 01 | | |
| விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் (I/II) | U - AC 3 | சிரேஷ்ட மட்டம் | 138 | | |
| சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் | U- EX 3 | சிரேஷ்ட மட்டம் | 2 | 2 | 0 |
| நிறைவேற்று அலுவலர் (மத்திய தரம்) | U - EX 2 | சிரேஷ்ட மட்டம் | 15 | 16 | 03** |
| நிறைவேற்று அலுவலர் (மத்திய தரம்) | U - EX 2 (a) | சிரேஷ்ட மட்டம் | - | | |
| தலைமை மருத்துவ அலுவலர் | U -MO 2 | சிரேஷ்ட மட்டம் | - | - | |
| மருத்துவ அலுவலர் | U -MO 1 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| நிறைவேற்று அலுவலர் (ஆரம்ப மட்டம்) | U-EX 1 | மூன்றாம் நிலை | 05 | 13 | 06** |
| கல்விசார் உதவி – பிரிவு 2 | U- AS 2 | மூன்றாம் நிலை | 09 | 16 | 07 |
| கல்விசார் உதவி – பிரிவு 1 | U- AS 1 | மூன்றாம் நிலை | 25 | 50 | 25 |

* துணைவேந்தர் உள்ளிட்ட

** APER பதவி உயர்வுகள் 2 (சிரேஷ்ட உதவி நிதி நிர்வாகி)

### 3.2.2 நிர்வாக மற்றும் நிதிசார் அலுவலர்கள் பற்றிய விபரம்

| பதவி | சம்பளக் குறியீடு | சேவை மட்டம் | அங்கீகரிக் கப்பட்ட ஆளணி எண்ணிக் கை | பணியாற்று ம் ஊழியர்க ளின் எண்ணிக் கை | வெற்றிடங்க ளின் எண்ணிக்கை | தன்மை |
|---|---|---|---|---|---|---|
| பதிவாளர் | U-EX3(I) | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 | நிரந்தர |
| நிதி நிர்வாகி (Bursar) | U-EX3 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 | நிரந்தர |
| வேலைப் பொறியியலாளர் | U-EX 1 / U-EX2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 | நிரந்தர |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் /பிரதிப் பதிவாளர் | U-EX 2 | சிரேஷ்ட மட்டம் | 11 | 10 | 1 | நிரந்தர |
| சிரேஷ்ட உதவி நிதி நிர்வாகி / பிரதி நிதி நிர்வாகி | U-EX 2 | சிரேஷ்ட மட்டம் | 2 | 4* | 0 | நிரந்தர |
| சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் | U-EX 2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 | நிரந்தர |
| உதவிப் பதிவாளர் | U-EX1 | மூன்றாம் நிலை | 5 | 4 | 1 | நிரந்தர |
| உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல்) | U-EX1 | மூன்றாம் நிலை | 1 | 0 | 1 | நிரந்தர |
| உதவி உள்ளக கணக்காய்வாளர் | U-EX1 | மூன்றாம் நிலை | 1 | 0 | 1 | நிரந்தர |
| உதவி நிதி நிர்வாகி | U-EX1 | மூன்றாம் நிலை | 4* | 1 | 1* | நிரந்தர |
| தலைமை ஒழுக்காற்று அலுவலர் (Chief Marshal) | U-EX2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 | நிரந்தர |
| பொறுப்பாளர் (கலைக்கூடம்) - Curator (Arts Gellery) | U-EX1 | மூன்றாம் நிலை | 1 | 0 | 1 | நிரந்தர |
| கருத்திட்ட முகாமையாளர் | U-EX1 , U-EX2 | மூன்றாம் நிலை / சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 | நிரந்தர |
| மருத்துவ அலுவலர் | U-MO1 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 | நிரந்தர |
| பணிப்பாளர் ( உடற்கல்வி) | U-EX2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 | நிரந்தர |
| **மொத்தம்** | | | **33** | **23** | **10** | |
| * APER பதவி உயர்வுகள் (2 அலுவலர்கள்) | | | | | | |

### 3.2.3 கல்விசாரா ஆளணி பற்றிய விபரம்

| சேவைப் பிரிவு | சம்பளக் குறியீடு | ஊழியர்களின உண்மையான எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தன்மை |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மட்டம் | | | | | |
| ஆரம்ப சேவைப் பிரிவு - பயிற்சி பெற்ற | PL – 1 | 42 | 113 | 43* | நிரந்தர |
| ஆரம்ப சேவைப் பிரிவு - பகுதியளவு பயிற்சி பெற்ற | PL – 2 | 05 | | | நிரந்தர |
| ஆரம்ப சேவைப் பிரிவு - பயிற்சி பெறாத | PL – 3 | 19 | | | நிரந்தர |
| இரண்டாம் நிலை மட்டம் | | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | U - MN 1 | 80 | 117 | 16** | நிரந்தர |
| பதவிநிலை உதவியாளர் / சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர் | U - MN 4 | 25 | | | நிரந்தர |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சார் | U - MT 1 | 09 | 17 | 08 | நிரந்தர |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத | U - MT 1 | 00 | 03 | 03 | நிரந்தர |
| உதவி அலுவலர் - பிரிவு 2 | U - MN 2 | 01 | 02 | 01 | நிரந்தர |
| உதவி அலுவலர் - பிரிவு 2 தொழில்நுட்பம் சாராத | U - MN 3 | 02 | 03 | 01 | நிரந்தர |
| உதவி அலுவலர் - பிரிவு 2 தொழில்நுட்பம் சார்ந்த | U - MN 3 | 03 | 03 | 00 | நிரந்தர |

* பாதுகாப்பு அலுவலர் பதவி ஆரம்ப நிலை சேவை பயிற்சி பெறாத பிரிவில் உள்ளடக்கப்படுகின்றது. ஆனாலும், அவர்களுடைய பதவி உயர்வுடன் தொடர்புடைய சம்பள அளவுத் திட்டம் இரண்டாம் நிலை மட்டத்தில் காணப்படுகின்றது. எனவே முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத பிரிவில் 04 பாதுகாப்பு அலுவலர்களும் உள்ளடக்கப்படுகின்றனர்

** வரவேற்பாளர் மற்றும் தொலைபேசி இயக்குநர் 04 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 02 வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆனாலும், அவை தனிப்பட்ட வகையில் வகிப்பவருக்குரியதாக இருப்பதனால் மேற்குறிப்பிடப்பட்ட 02 வெற்றிடங்கள் மொத்த வெற்றிடங்களில் உள்ளடக்கப்படவில்லை.

### 3.2.4 ஆண்டினுள் ஆளணியில் ஏற்பட்ட மாற்றங்கள்

2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் அதன் ஆளணி அமைப்பில் பல்வேறு பிரிவுகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. ஆளணி மாற்றத்தை கீழுள்ளவாறு பிரித்துக் காண்பிக்க முடியும்:

| | கல்விசார் | கல்விசார் உதவி | நிர்வாகம் மற்றும் நிதி | கல்விசாரா |
|---|---|---|---|---|
| புதிய நியமனங்கள் | - | - | 03 | |
| சேவையில் உறுதிப்படுத்தல் | 05 | - | 04 | 10 |
| பதவி உயர்வுகள் | 19 | 04 | 04 | 15 |
| ஓய்வு விடுமுறை | 08 | - | 01 | |
| கல்விசார் விடுமுறை (உள்நாடு) | 09 | - | - | |
| கல்விசார் விடுமுறை (வெளிநாடு) | 01 | - | - | |
| கல்விசார் விடுமுறை நீடிப்புக்கள் | 01 | - | - | |
| ஓய்வு விடுமுறை முடிவடைந்து சேவைக்கு சமுகமளித்தல் | 06 | - | 01 | |
| கல்விசார் விடுமுறை முடிவடைந்து சேவைக்கு சமுகமளித்தல் | 09 | - | - | |
| மரணங்கள் | - | - | - | |
| இடமாற்றல்கள் (வேறு பல்கலைக்கழகத்திலிருந்து) | - | - | - | |
| ஓய்வு பெறல்கள் | 01 | - | 01 | 02 |
| கேட்டு விலகல்கள் | 01 | - | - | 06 |
| பதவி வெறிதாக்கல் | 01 | - | - | |

### 3.2.5 ஆளணியை சேவையில் ஈடுபடுத்தல்

அனைத்து பீடங்கள் மற்றும் பிரிவுகளின் சீரான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக பல்கலைக்கழகத்தில் கல்விசார், கல்விசார் உதவி, நிருவாக மற்றும் கல்விசாரா ஆளணிகளை பணியிலீடுபடுத்தல் அத்தியாவசிமாகும். 2024 ஆம் ஆண்டில் பல்வேறு பீடங்கள், கற்கைப் பிரிவுகள், ஏனைய பிரிவுகள் மற்றும் அலகுகள் ஊடாக ஆளணியின் பரம்பல் கீழுள்ளவாறாகும். :

**(அ) கற்கைப் பிரிவுகள் மட்டத்தில் கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணியை பணியிலீடுபடுத்தல்**

| பீடம் | கற்கைப் பிரிவு | கல்விசார் ஆளணி | கல்விசார் உதவி ஆளணி | தற்காலிக விரிவுரையாளர் | தற்காலிக ஆலோசகர்/ செய்முறையாளர் | வருகைதரு விரிவுரையாளர் | வருகைதரு விரிவுரையாளர் |
|---|---|---|---|---|---|---|---|
| கட்புல கலை பீடம் | சித்திரக் கலை | 07 | - | 01 | - | 10 | - |
| | சிற்பக் கலை | 06 | - | - | - | 06 | - |
| | கட்புல தொடர்பாடல் ஆக்கக் கலை | 04 | - | 02 | - | 10 | - |
| | மட்பாண்டக் கலை | 04 | 01 | 01 | - | 14 | - |
| | பல்வித அறிவியல் ஆற்றல் கலை | 05 | - | 02 | - | 10 | - |
| | ஆடை மற்றும் அணிகலன் கலை | 03 | - | 01 | - | 19 | - |
| | வரலாறு மற்றும் கலைக் கோட்பாடுகள் | 04 | - | 02 | - | 21 | - |
| | பல்லூடகக் கலை | 04 | - | 01 | - | 10 | - |
| | அச்சிடல் கலை | 04 | - | 02 | - | 17 | - |
| **மொத்தம்** | | **41** | **01** | **12** | **-** | **117** | **-** |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | **கற்கைப் பிரிவு** | - | - | | | | |
| | மேல் நாட்டு நடனம் | 16 | 02 | 02 | 04 | 17 | 13 |
| | கீழ் நாட்டு நடனம் | 08 | 02 | 01 | - | 22 | 11 |
| | சப்ரகமுவ நடனம் | 07 | 01 | 02 | - | 17 | 13 |
| | இன்னிசை (சிம்பொனி) | 04 | - | 02 | - | 09 | 02 |
| | இந்திய மற்றும் ஆசிய நடனம் | 09 | 02 | 02 | 02 | 16 | 03 |
| | நடன அரங்கேற்றக் கலை வரலாறு மற்றும் கோட்பாடுகள் | 07 | - | - | - | 13 | 03 |
| | நாட்டியக் கலை, பாலே நாட்டியம் மற்றும் நவீன நடனங்கள் | 12 | 02 | - | - | 17 | 02 |
| | தகவல் தொழில்நுட்பம் | 03 | 06 | - | - | - | - |
| | ஆங்கில மொழி கற்பித்தல் | 02 | - | 01 | 03 | 10 | - |
| | பீடாதிபதி அலுவலகம் | - | - | - | 01 | - | - |
| **மொத்தம்** | | **68** | **15** | **10** | **10** | **121** | **47** |
| இசைக் கலை பீடம் | **கற்கைப் பிரிவு** | | | | | | |
| | வட இந்திய பாரம்பரிய இசை | 22 | 9 | | - | 15 | 48 |
| | தென்னிந்திய இசை | 01 | 2 | 1 | - | 10 | 29 |
| | மேலைத்தேய இசை | 05 | - | 1 | - | 35 | 23 |
| | மானிட பண்பாட்டியல் இசை | 06 | 3 | | - | 8 | 12 |
| | பிரயோக இசை மற்றும் வெகுசன தொடர்பாடல் | 04 | 1 | 2 | - | 45 | 11 |
| | இசை அறிவியல் | 03 | - | 2 | - | 13 | 12 |
| | பீடாதிபதி அலுவலகம் | - | 01 | | - | | |
| **மொத்தம்** | | **41** | **16** | **06** | **-** | **126** | **135** |

**(ஆ) பீடங்கள் மட்டத்தில் கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணியை பணியிலீடுபடுத்தல்**

| பீடம் / அலகு / பிரிவு | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | இணைப் பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர்/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) | விரிவுரையாளர் (தகுதிகாண்) | ஆலோசகர் | இசைவாணர் | செய்முறையாளர் | வெளிவாரி விரிவுரையாளர் | விஞ்ஞான உதவியாளர் (தரம் II) | உதவி கணனி வலையமைப்பு முகாமையாளர் -II | நிரற்படுத்துனர் மற்றும் முறைமை பகுப்பாய்வாளர் (தரம் I) | உடற் கல்வி ஆலோசகர் (தரம் I) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்புல கலை பீடம் | - | 2 | 1 | 20 | 3 | 15 | 1 | - | - | 117 | - | - | - | |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | - | 8 | 0 | 31 | 17 | 12 | 12 | 2 | 1 | 121 | - | - | 1 | |
| இசை பீடம் | - | 5 | - | 28 | 1 | 2 | 5 | 6 | 9 | 126 | 1 | - | | |
| உடற் கல்விப் பிரிவு | | | | | | | | | | | | | - | 2 |

**(இ) நூலகத்திற்கான ஆளணியை பணியிலீடுபடுத்தல்**

| | நூலகர் | பிரதி நூலகர் | சிரேஷ்ட உதவி நூலகர் |
|---|---|---|---|
| நூலகம் | 1 | 1 | 1 |

**(ஈ) நிறைவேற்று மற்றும் கல்விசாரா ஆளணியை பணியிலீடுபடுத்தல்**

| பீடம் / பிரிவு | நிர்வாகம் | கல்விசாரா | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவ மற்றும் இணையான தரங்கள் | கனிஷ்ட தரங்கள் |
| கட்புல கலை பீடம் | 1 | 14 | 11 |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | 1 | 16 | 05 |
| இசை பீடம் | 1 | 14 | 05 |
| துணைவேந்தர் அலுவலகம் | 1 | 02 | 02 |
| பதிவாளர் அலுவலகம் | 1 | 02 | 01 |
| நிதிப் பிரிவு | 5 | 14 | 03 |
| கல்விசார் தாபனப் பிரிவு | 1 | 05 | 01 |
| கல்விசாரா தாபனப் பிரிவு | 1 | 03 | 01 |
| பரீட்சைப் பிரிவு | 1 | 06 | 01 |
| கல்விசார் மற்றும் மாணவர் விவகாரப் பிரிவு | 1 | 07 | 01 |
| பொது நிர்வாகப் பிரிவு | 2 | 05 | 06 |
| கூட்டு முகாமைத்துவம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புப் பிரிவு | 1 | 01 | 00 |
| மூலதனப் பணிகள் பிரிவு | 1 | 01 | 01 |
| ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் மேம்பாட்டுப் பிரிவு | 1 | 02 | 01 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 1 | 01 | 01 |
| சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு | 0 | 01 | 00 |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் | 1 | 04 | 01 |
| பட்டப்பின் கற்கைகள் பீடம் | 1 | 02 | 00 |
| ஆளணி அபிவிருத்திப் பிரிவு | 1* | 00 | 00 |
| தொழில்சார் வழிகாட்டிப் பிரிவு | - | 00 | 00 |
| பல்கலைக்கழக மருத்துவ நிலையம் | 3** | 00 | 02 |
| பராமரிப்புப் பிரிவு | 1*** | 02 | 14 |
| உடற் கல்விப் பிரிவு | 1**** | 01 | 01 |
| நூலகம் | 0 | 07 | 05 |
| பாதுகாப்புப் பிரிவு | - | 03 | 07 |
| VAPA அச்சகம் | - | 01 | 00 |
| VAPA தொலைக்காட்சி | - | 02 | 00 |

* நிரந்தர நிருவாக ஆளணி அங்கத்தவர் ஒருவருக்கு நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் / SDC ஆகப் பணியாற்றுவதற்கான கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

** ஆலோசகர் மற்றும் வெளிவாரியான அருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் சேவைக்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

*** ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**** உடற்கல்வி ஆலோசகர் ஒருவர் (தரம் I) பணிப்பாளரின் கடமையை நிறைவேற்றுகின்றார்.

## 3.3 பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள்

பல்கலைக்கழகம் அதன் பௌதீக உள்கட்டமைப்பை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதன் மூலம் கல்விசார் மற்றும் கல்விசாரா நடவடிக்கைகளுக்கு உகந்த சூழலை உருவாக்க உறுதிபூண்டுள்ளது. பல்கலைக்கழகமானது சில பிரதான இடங்களில் வியாபித்துள்ளதுடன், இவை ஒவ்வொன்றும் ஒட்டுமொத்த கற்கை அனுபவத்திற்கு பங்களிக்கின்றன. இருப்பினும், பல்கலைக்கழகத்தின் விரிவாக்கம் மற்றும் இசை பீடம் மற்றும் நடனம் மற்றும் நாடகக் கலை பீடத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு கற்கை நடவடிக்கைகளுக்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட கொஹுவலை வளாகத்தை சமீபத்தில் அதன் ஆரம்ப உரிமையாளர்களிடம் ஒப்படைத்ததன் காரணமாக பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்களவிலான இடவசதிகள் சவால்களை எதிர்கொண்டுள்ளது. அத்துடன் தெஹிவளை பகுதியில் தனியார் சொத்துக்களை வாடகைக்கு விடுவதனை நிறுத்தப்பட்டதன் மூலமும் இந்தப் பிரச்சினை மேலும் உக்கிரமடைந்துள்ளது. இந்த சவாலுக்கு பதிலளிக்கும் வகையில் இரத்மலானையில் அமைந்துள்ள மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை பல்கலைக்கழகத்திற்கு உரிமை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. துரதிஷ்டவசமாக, இந்த உரிமை மாற்றம் இந்த ஆண்டில் நடைபெறவில்லையென்பதுடன், பல்கலைக்கழகம் தொடர்ந்து இட வசதிப் பிரச்சினையை எதிர்கொள்கிறது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், அனைத்து மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பயனுள்ள மற்றும் ஆதரவான கற்றல் சூழலை உறுதி செய்வதற்காக அதன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கு பல்கலைக்கழகம் தொடர்ந்தும் முன்னுரிமை அளித்து வருகிறது.

### 3.3.1 பல்கலைக்கழகத்தினால் காணிகள் மற்றும் கட்டிடங்கள் பயன்பாடு பற்றிய விபரம்

| அமைவிடம் | பரப்பளவு |
|---|---|
| **காணி மற்றும் கட்டிடங்கள்** | |
| **அல்பர்ட் கிரசன்ட்டில் அமைந்துள்ள நிலம்** | **0.952 ஹெக்டேயர்** |
| நிர்வாகக் கட்டிடம் | 2205 சதுர மீட்டர் |
| நடன மற்றும் நாடகப் பீடக் கட்டிடம் | 4871 சதுர மீட்டர் |
| இசை பீடக் கட்டிடம் | 6934 சதுர மீட்டர் |
| பண்டித் அமரதேவ கட்டிடம் | 1722 சதுர மீட்டர் |
| புத்தகசாலை | 432.92 சதுர அடி |
| **ஹோர்டன் பிளேஸ் வளாகம்** | **0.6277 ஹெக்டேயர்** |
| கட்புலக் கலைகள் பீடம் | 10302 சதுர மீட்டர் |
| **ராஜகிரிய வளாகம்** | **0.4355 ஹெக்டேயர்** |
| விடுதிக் கட்டிடம் | 6255 சதுர மீட்டர் |
| **தெஹிவளை வளாகம்** | **0.3197 ஹெக்டேயர்** |
| ஆண்கள் விடுதிக் கட்டிடம் | 2308 சதுர மீட்டர் |
| பெண்கள் விடுதிக் கட்டிடம் | 3340 சதுர மீட்டர் |

### 3.3.2 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள

| தொ.இல. | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீட்டுச் செலவு (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று செலவு (மி.ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 01 | நடன மற்றும் நாடக கலைகள் பீடத்திற்கு பகுதியளவு - நிரந்தர நீட்டிப்பு | 4.8 மி.ரூ. (வற் இன்றிய) | இல்லை | 30% நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 02 | அல்பர்ட் கிரசன்ட் மற்றும் ஹோர்டன் பிளேஸ் வளாகங்களின் பிரிப்புக்கள் மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் | ஷ. 3.8 மி.ரூ. (வற் இன்றிய) | 1.5 மி.ரூ. | 50மூ நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 03 | நடன மற்றும் நாடகப் பீடக் கட்டிடக் கூரையின் புனரமைப்பு நடவடிக்கைகள் | 7.6 மி.ரூ. (வற் இன்றிய) | 2.8 மி.ரூ. | 60மூ நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 04 | சித்திரம் வரைதல் மற்றும் புனரமைப்பு பணிகள் - கட்புலக் கலைகள் பீடம் | 7.6 மி.ரூ. (வற் இன்றிய) | இல்லை | பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது |
| 05 | தரவுகள் வலையமைப்பு - FM மற்றும் அமரதேவ கட்டிடம் | 10.7 மி.ரூ. (வற் இன்றிய) | இல்லை | இறுதிக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 06 | தரவுகள் வலையமைப்பு - மஹகமசேக்கர கட்டிடம் FVA | 14.8 மி.ரூ. (வற் இன்றிய) | இல்லை | கேபிள் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 80% உபகரணங்கள் வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |

### 3.4 நூலகத்தின் நூல்கள் பற்றிய விபரம் 2023 / 2024

| | 2023 | 2024 |
|---|---|---|
| நூல்கள் | 59,391 | 60,225 |
| சஞ்சிகைகள் | இல்லை | இல்லை |
| புதிதாக சேர்க்கப்பட்டவை | 516 | 834 |

# 4. பிரதான முடிவுகள் (வெளியீடுகள்) பகுதியில் 2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயலாற்றுகை

## 4.1 பட்டதாரிகளை சேவையில் ஈடுபடுத்தல்

### 4.1.1. தொழில்சார் வழிகாட்டி மற்றும் ஆலோசனை

2023 ஆம் ஆண்டில், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் மாணவர்களின் தொழில்சார் அபிவிருத்தி, மாணவர் ஆதரவு மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த பல முக்கிய முயற்சிகளை மேற்கொண்டது.

2021/22 புதிய மாணவர் குழுவிற்கு பல்கலைக்கழக வாழ்க்கை, கல்விசார் எதிர்பார்ப்புகள் மற்றும் நிலவுகின்ற உதவி சேவைகள் தொடர்பாக மாணவர்களுக்கு பழக்கப்படுத்துவதற்காக நோக்குநிலை நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. மாணவர்களின் அபிலாஷைகளை நன்கு புரிந்துகொள்வதற்கு மற்றும் அவர்களை திறம்பட வழிநடாத்தும் நோக்கத்துடன் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இளமாணிப் பட்டத்தை அறிமுகஞ்செய்யும் தொழில் வழிகாட்டல் கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டது. இது தவிர, வேலைவாய்ப்பு தொடர்பான போக்குகள் மற்றும் தொழில்களை மதிப்பிடுவதற்காக 2017/18 கல்வியாண்டின் பட்டதாரிகளுக்கு பட்டதாரி வேலைவாய்ப்பு தொடர்பான கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது. கட்டமைக்கப்பட்ட கற்கைநெறிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு நிகழ்வு முகாமைத்துவம் டிப்ளோமாவிற்கான பாடத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு பாடத்திட்ட மதிப்பீட்டு சபையினால் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், மூன்று பீடங்களிலும் கல்விப் பிரிவு மட்டத்தில் உள்ளகப் பயிற்சி வாய்ப்புகள் குறித்த விரிவான தகவல்களை சேகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதனூடாக மாணவர்களுக்கு கைத்தொழில்துறை மற்றும் நடைமுறை சார்ந்த கற்றலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகம் அதன் தொழில் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை வலுப்படுத்தியதுடன், அனைத்து மாணவர்களுக்கும் பொருத்தமான தொழில் ஆலோசனை அமர்வுகள் மற்றும் தனிப்பட்ட மற்றும் கல்விசார் சிக்கல்களுக்கான பொது ஆலோசனை உதவியை வழங்கியது. அதன்படி, முதலாம் ஆண்டில் மற்றும் மூன்றாம் ஆண்டில் மாணவர்களுக்கு அத்தியாவசிய தொழில் திட்டமிடல் திறன்களை வழங்குவதற்காக சிறப்பு தொழில் வழிகாட்டல் பாடநெறிககளுக்குத் தேவையான ஆவணங்கள், மேம்படுத்தப்பட்டன. கல்வி பங்களிப்புகளிடையே இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு தொழில் தொழில்முனைவோர் மற்றும் சமூகத் திறன்கள் (DHTV 22062) பற்றிய விரிவுரைகளை நடாத்துவதும், தொழில் வெற்றிக்கான அத்தியாவசியத் திறன்களை வளர்ப்பதும் அடங்கும். இது தவிர மன நலம் மற்றும் தொழில் தொடர்பான சவால்கள் குறித்த விரிவான வழிகாட்டுதலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக ஒரு ஆலோசனை கையேடு உருவாக்கப்பட்டது.

இந்த அடிப்படை நடவடிக்கைகள் மூலம், மாணவர்களின் கல்விப் பயணங்கள், தொழில் அபிலாஷைகள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு உதவுவதற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியவாறு முழுமையான கல்வி அனுபவத்தை உறுதிப்படுத்தியது.

### 4.1.2 பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான மையம் (CGEE)

மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உள்ளடக்கிய மற்றும் நீதியான சூழலை ஊக்குவிப்பதற்காக பல்கலைக்கழகம் பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான மையத்தை நிறுவியது. பாலின தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், மரியாதை மற்றும் உள்ளடக்கிய கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் இந்த மையம் தனித்துவமான பங்கை வகிக்கிறது. படைப்பாற்றலைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைக்கான தளத்தை வழங்குவதன் மூலம் பாலினத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து தனிநபர்களும் வெற்றிபெற சம வாய்ப்புகள் இருப்பதை உறுதிசெய்து பாகுபாடான நடைமுறைகள் மற்றும் மனப்பாங்குகளை சவாலுக்குட்படுத்தல் மற்றும் குறைப்பதை பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான மையம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பணியிடத்தில் பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான மையம், சமூகத்திலும் அதற்கு அப்பாலும் பாலின அடிப்படையிலான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கு முடியுமான சமூகத்தில் பொறுப்புமிக்க பிரஜைகளாகுவதற்காக மாணவர்களை தயார்படுத்தும் பல்கலைக்கழகத்தின் பரந்த நோக்கத்திற்கு பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான பங்களிப்புச் செலுத்துகின்றது.

### 4.1.3 உடற் கல்வி

2024 ஆம் ஆண்டில், கட்டமைக்கப்பட்ட விளையாட்டு நடைமுறைகள், பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் மற்றும் ஆளணி அங்கத்தவர்களுக்களுக்கான போட்டிகள் மூலம் மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பல்வேறு தரப்புக்களை ஈடுபடுத்துதல் மூலம் விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளை ஊக்குவிப்பதில் பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டது. வேலைக்குத் தயாராதல், தாங்குகின்ற மற்றும் உற்சாகமான மாணவர் அனுபவத்தை வளர்ப்பதில் பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பு பல்வேறு விளையாட்டு, நட்புறவுப் போட்டிகள் மற்றும் விருதுகளுக்கான போட்டிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் பங்கேற்பு மூலம் மீள்தன்மை நிரூபிக்கப்பட்டது.

**பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகள் மற்றும் வெற்றிகள்**

- பல்கலைக்கழக கிரிக்கெட் அணிகள் , பூப்பந்து, வலைப்பந்து, எல்லே, வொலிபோல், கராத்தே, தடகள, தய்கொண்டோ, பீச் வொலிபோல், கெரம், சாலை ஓட்டப் போட்டிகள் மற்றும் நீச்சல் போன்ற விளையாட்டுகளில் போட்டியிட்டு, பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பல்வேறு வெற்றிக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்றது.

- இந்த வெற்றிக் கிண்ணப் போட்டிகளின் முக்கிய சாதனைகளில் பின்வருவன அடங்கும்:

  - கம்பஹா விக்ரமாராச்சி பல்கலைக்கழக வெற்றிக் கிண்ணப் போட்டியில் 50 கிலோவுக்கு கீழ் 'குமித்தே கராத்தே' பிரிவில் தங்கப் பதக்கம்.

  - மொரட்டுவ பல்கலைக்கழக வெற்றிக் கிண்ணப் போட்டியில் தய்கொண்டோ 58 - 63 கிலோ கிராம் எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம்.

  - கம்பஹா விக்ரமாராச்சி பல்கலைக்கழகம் மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக அணிகளுக்கு எதிராக பீச் வொலிபோல் மற்றும் கெரம் ஆரம்ப சுற்று வெற்றிகள்.

  - பல்கலைக்கழக சதுரங்க விளையாட்டு அணியின் உறுப்பினரான ஆர். ஹிருணிகா லக்ஷானி, இலங்கை பல்கலைக்கழக வண்ணங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 128 பங்கேற்பாளர்களில் முதல் 8 பெண் சதுரங்க வீராங்கனைகளில் ஒருவராக இடம் பெற்றார்.

இந்த வெற்றிகள் மாணவர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் திறமைக்கும், பல்கலைக்கழக விளையாட்டு அணிகள் மற்றும் ஆளணி ஊழியர்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களுக்க சான்றாகும்.

**விளையாட்டுப் பயிற்சிகள் :**

- பகுதிநேர விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் கீழ் பயிற்சிபெறல்: பல்கலைக்கழகத்தினால் பல்வேறு விடயத் துறைகளின் ஊடாக பகுதிநேர விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டலின் கீழ் தினமும் பயிற்சிகள் நடாத்தப்பட்டன

  - வலைப் பந்து (பெண்கள்), வொலிபோல் (ஆண்கள் / பெண்கள்), கிரிக்கெட் (ஆண்கள்), கராத்தே (ஆண்கள்/பெண்கள்), சதுரங்கம் (ஆண்கள்/பெண்கள்), தய்கொண்டோ (ஆண்கள்/பெண்கள்), பூப்பந்து (ஆண்கள் / பெண்கள்), கேரம் (ஆண்கள்/பெண்கள்) மற்றும் தடகளம் (பெண்கள்) போன்ற பல்வேறு துறைகளில் பகுதிநேர விளையாட்டு பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் பல்கலைக்கழகம் வழக்கமான விளையாட்டுப் பயிற்சியை நடத்தியது. இந்தப் பயிற்சி அமர்வுகள் மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், பல்வேறு நிலைகளில் போட்டியிடவும் வாய்ப்புகளை வழங்கின.

- உடற்கல்வி பிரிவின் மேற்பார்வையின் கீழான பயிற்சி: பகுதிநேர பயிற்றுனர்களைத் தவிர உடற்கல்வி பிரிவு குறிப்பிட்ட பகுதிகளில் விளையாட்டுப் பயிற்சியை ஏற்பாடு செய்தது:

    - o பீச் வொலிபோல் (ஆண்), எல்லே (ஆண்/பெண்), சாலை ஓட்டப் போட்டிகள் (ஆண்), நீச்சல் (ஆண்/பெண்), மற்றும் ஏரோபிக் மற்றும் உடல் தகுதி நிகழ்ச்சித் திட்டங்கள். இந்த நடவடிக்கைகள் மாணவர்களின் உடல் தகுதி, குழு உணர்வு மற்றும் போட்டி விளையாட்டுகளில் தனிப்பட்ட செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

**விளையாட்டுப் பயிற்சிக்காக மைதானங்களை ஒதுக்கிக்கொள்ளல்:**

- பல்வேறு விளையாட்டுப் பயிற்சிகளுக்கு உதவி புரிவதற்காக பல்கலைக்கழகம் பல்வேறு வெளிப்புற இடங்களைப் பயன்படுத்தியது:

    - o கிரிக்கெட், பூப்பந்து மற்றும் தடகள விளையாட்டுகளுக்கு கொழும்பு பல்கலைக்கழக உள்ளக மைதானம் மற்றும் விளையாட்டு மைதானம்.

    - o வலைப்பந்து மற்றும் வொலிபோல் விளையாட்டுக்க விளையாட்டுத்துறை அமைச்சின் உள்ளக மைதானம்

    - o தடகள நிகழ்வுகளுக்கான டொரின்டன் மைதானம்.

    - o பூப்பந்து (பெட்மின்டன்) பயிற்சி மற்றும் போட்டிகளுக்கான ரோயல் உள்ளக மைதானம் மற்றும் NCC உள்ளக மைதானம்.

விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு உகந்த சூழலை உருவாக்கி மாணவர்களுக்கு உயர்தர வசதிகளை வழங்குவதற்கான வாய்ப்பை இந்த வெளிவாரியான இடங்கள் பல்கலைக்கழகத்திற்கு வழங்கின,

**நட்புறவுப் போட்டிகளை நடாத்துதல்:**

- ஆண்டு முழுவதும், பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அணிகள் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைக அணிகளுடன் நட்புப் போட்டிகளில் பங்கேற்றன. இந்த நட்புறவுப் போட்டிகள் போட்டி அனுபவத்தையும் குழு ஒற்றுமையையும் வளர்க்க உதவியது. இதில் பின்வரும் விளையாட்டுப் போட்டிகள் அடங்கும்:
    - o கொழும்பு சர்வதேச பாடசாலைகள், கொழும்பு க்ரொஸ், புனித ஜோசப் மற்றும் ரத்தொலுவ சிசி போன்ற அணிகளுடனான கிரிக்கெட் போட்டிகள்.

    - o எல்லே, வொலிபோல், தய்கொண்டோ, தட கள விளையாட்டுக்கள், சதுரங்கம், பூப்பந்து, வலைப்பந்து மற்றும் கராத்தே விளையாட்டுகள் பல்வேறு எதிரணிகளுக்கு எதிரான நட்புறவுப் போட்டிகளையும் உள்ளடக்கியதுடன் மாணவர்களின் அனுபவத்தை மேம்படுத்தி எதிர்கால போட்டிகளுக்காக அவர்களை தயார்படுத்தியது.

**பீடங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகள்:**

- பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான போட்டிகளுக்கு அனுசரணை வழங்கும் பல்கலைக்கழகமாக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள் மற்றும் போட்டியை ஊக்குவிக்கம் வகையில் நடவடிக்கை மேற்கொண்டதுடன், அதில் பின்வரும் போட்டிகள் உள்ளடங்கும்.

- பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற பீடங்களுக்கு இடையேயான சதுரங்க வெற்றிக் கிண்ணப் போட்டி (2024 மார்ச் 19).
- விளையாட்டு அமைச்சின் உள்ளக மைதானத்தில் நடைபெற்ற பீடங்களுக்கிடையிலான வொலிபோல் வெற்றிக் கிண்ணப் போட்டி (2024 டிசம்பர் 19).
- பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற பீடங்களுக்கு இடையேயான வலைப்பந்து வெற்றிக் கிண்ணப் போட்டி (2024 டிசம்பர் 19).
- நடனம் மற்றும் நாடகக் கலை பீடத்தின் மத்திய முற்றத்தில் நடைபெற்ற பீடங்களுக்கு இடையேயான வெற்றிக் கிண்ணப் போட்டி (2024 டிசம்பர் 20).

இந்த வெற்றிக் கிண்ணப் போட்டிகள் மாணவர்களுக்கு தங்கள் பீடங்களை பிரதிநிதித்துவப்படுத்தவும், போட்டியின்போது தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும் ஒரு சிறந்த தளத்தை வழங்கின.

**அழைப்புப் போட்டிகள்:**

• பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அணிகளுக்கு பல பெயர்போன வெளிவாரியான போட்டிகளில் பங்கேற்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

- சதுரங்கம் (செஸ்): இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) அழைப்பு வெற்றிக் கிண்ணப் போட்டி, மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் 6 ஆவது மோரா கிங்ஸ் சர்வதேச சதுரங்க வெற்றிக் கிண்ணப் போட்டி மற்றும் 14 ஆவது அதுகல்புர சர்வதேச சதுரங்க வெற்றிக் கிண்ணப் போட்டி ஆகியவற்றில் சதுரங்க அணிகள் பங்கேற்றன.
- பூப்பந்து (பெட்மின்டன்): 2024 ஷட்லர்ஸ் ∴பெஸ்ட் சர்வதேச பூப்பந்து வெற்றிக் கிண்ணப் போட்டி, அம்பாசிடர்ஸ் கிண்ணத்திற்கான பூப்பந்து வெற்றிக் கிண்ணப் போட்டி மற்றும் எயார் பெட்மின்டன் போட்டிகளில் பூப்பந்து அணிகள் போட்டியிட்டன.
- வலைப் பந்து: வலைப் பந்து அணி SLIIT அழைப்பிதழ் வலைப்பந்து வெற்றிக் கிண்ணப் போட்டியில் பங்கேற்றது.
- குறிப்பாக, சதுரங்க அணி அதுகல்புர சர்வதேச சதுரங்க வெற்றிக் கிண்ணப் போட்டியில் போட்டியிட்டு உயர்கல்விப் பிரிவில் 4 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டிகள் மாணவர்களுக்கு உயர் மட்டப் போட்டிகளுக்கு வழிவகுத்தன, மேலும் அவர்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், பெரிய மேடைகளில் பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் உதவின.

**ஆளணிக்கிடையிலான போட்டிகள்**

2024 டிசம்பர் 30 ஆம் திகதி பல்கலைக்கழகத்தினால் கல்விசார், கல்விசாரா மற்றும் ஏனைய ஊழியர்களுக்காக ஆளணி அங்கத்தவர்களுக்கிடையிலான பூப்பந்து வெற்றிக் கிண்ணப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த எண்ணக்கரு ஊடாக பல்கலைக்கழக ஊழியர்களிடையே குழு உணர்வு மற்றும் சமூக உணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டம் மாணவர் மற்றும் ஆளணி அங்கத்தவர்களின் பங்கேற்பு மற்றும் போட்டி நிகழ்வுகளில் திறமையை வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. வாய்ப்பு வழங்கப்படும் விளையாட்டுகளின் பன்முகத்தன்மை, வழக்கமான பயிற்சி அமர்வுகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளின் வெற்றி ஆகியவை அதன் மாணவர்களுக்கு பரந்த அளவிலான கல்வி அனுபவங்களை வளர்ப்பதில் பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பையும் அதன் ஊழியர்களின் நல்வாழ்வுக்கான அதன் அக்கறையையும் பிரதிபலிக்கின்றன.




## 4.2 ஆராய்ச்சி மற்றும் வெளயீடுகளை மேம்படுத்தல்

### 4.2.1 சீ. டி எஸ். குலதிலக்க ஆவணக் காப்பகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (CDSKARU)

சீ. டி எஸ். குலதிலக்க ஆவணக் காப்பகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (CDSKARU) 2024 ஆம் ஆண்டில், கட்புல செவிப்புல கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்து மேம்படுததுவதற்கான அதன் செயற்பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. பாரம்பரிய அறிவைச் சுற்றி ஒரு ஆராய்ச்சி கலாச்சாரத்தை வளர்த்தல் மற்றும் சர்வதேச ஆராய்ச்சி குறித்த கல்வி கருத்தரங்குகளுக்கு பங்களித்தல் மீது கவனத்தை ஈர்க்கச் செய்த இரண்டு செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் என்பன பிரதான செயற்பாடுகளுக்குள் அடங்கியது. பேராசிரியர் இரங்கா சமிந்தானியின் தலைமையின் கீழ் இந்த பிரிவு ICH சர்வதேச ஆராய்ச்சி பொழிப்புக்களை வெளியிடும்போது முக்கிய பங்கைக் கொண்டிருந்ததுடன், இசை குறித்த ஆராய்ச்சி இதழ் மற்றும் பல்கலைக்கழகத்தின் டிஜிட்டல் களஞ்சியத்திற்கு பீடத்தின் பங்கேற்பை ஊக்குவித்தது. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான தேசிய உயர் கல்வி நிலையத்தினால் (NCAS) ஏற்பாடு செய்யப்பட்ட 2024 சமூக

விஞ்ஞானத்திற்கான 6 ஆவது சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கிற்கும் இந்த பிரிவு பங்களிப்பை வழங்கியது. மேலும், பொருட்களை சரிபார்ப்பதற்கு முன்னர் பாதுகாப்பதற்கு தற்போது எடுக்கப்படும் முயற்சிகளுடன் CDSKARU அதன் செவிப்புல, கட்புல சேகரிப்புக்களை பாதுகாப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, திரு. பாண்டுல அவர்கள் நன்கொடையாக வழங்கிய ஒரு திரைப்படத் தொகுப்பு பிரதான நூலகத்தில் சேர்க்கப்பட்டதுடன் JCDSKAR தொகுதி 3 இல் வெளியிடுவதற்காக ஆராய்ச்சி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நிகழ்வுகள்**

| விடயம் | தலைப்பு |
|---|---|
| **ஆராய்ச்சி அறிவு அபிவிருத்திக்கான செயலமர்வுகள்** | நடனம் மற்றும் நாடகக் கலை பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அழகியல் என்பது சிகிச்சையொன்றாகும். |
| | **ஹிந்துஸ்தானி ரக சஹ ரகங்க**<br>இலக்கு : ஆராய்ச்சியின்போது ஸ்வரங்கள் பற்றிய அறிவை மேம்படுத்தல் |
| **CDSKAR சஞ்சிகை** | இல. **01, 3** ஆம் தொகுப்புக்கான கட்டுரைகளை சேகரித்தல், இங்கு சஞ்சிகை மதிப்பாய்வின்போது ஆசிரியரின் மற்றும் மதிப்பாய்வாளரின் அடையாளம் ஒன்றோடொன்று வெளிப்படுத்தப்படுவதில்லை. |
| **ஏனைய வெளியீடுகளுக்கான பங்களிப்பு** | JRM பதிப்பாசிரியர் சபை அங்கத்தவர்<br>ICH **சர்வதேச ஆராய்ச்சி பற்றிய பொழிப்பின் பிரதம பதிப்பாசிரியர்** |
| | பதிப்பாசிரியர் என்ற வகையில் JRM இற்கு பங்களிப்பை வழங்குதல் |
| **சமூக விஞ்ஞானம் தொடர்பான 6 ஆவது சர்வதேச ஆராய்ச்சி பற்றிய கல்விசார் கருத்தரங்கு** | *கல்விசார் கருத்தரங்கின் அங்கத்தவர் - நிலூக்கா திலக்கரத்ன* |

| **கட்புல செவிப்புல (AV) பாதுகாப்பு** | |
|---|---|
| **கட்புல செவிப்புலக் கையேட்டிற்கான பிரவேசம்** | பிரிவின் ஒலி - ஒளி பொருட்களைப் பாதுகாப்பது குறித்த கலந்துரையாடல்கள், அமுல்படுத்தல் மற்றும் விரிவான சேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒலி - ஒளி பொருட்களை சரிபார்த்தல் மற்றும் பாதுகாப்பதற்காக 203 ஆவது நிர்வாகக் குழுவால் நிறுவப்பட்ட குழுவுடன் ஒரு கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் இரங்கா சமிந்தனி சேகரித்த ஒரு திரைப்படத் தொகுப்பை திரு. பந்துல பிரதான நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கினார். |
| | *சேகரிக்கப்பட்ட திரைப்படங்கள் தொகுப்பை திரு. பண்டுல கொடவத்த அவர்களால் (186 A/V) கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்திற்கு மீண்டும் வழங்கப்பட்டது.* |

### 4.2.2 2024 ஆம் ஆண்டில் ஆளணியினால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிப் பத்திரங்கள் / முன்னிலைப்படுத்தல்கள்

2024 ஆம் ஆண்டில் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பீடங்களின் அங்கத்தவர்கள் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிப் பங்களிப்புகளைச் செய்துள்ளனர். இந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் முன்னிலைப்படுத்தல்கள் பல துறைகளை உள்ளடக்கியுள்ளதுடன், கல்வி, இசை, நடனம், நாடகம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பல துறைகளில் அறிவை மேம்படுத்துவதற்கான பல்கலைக்கழகத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன.

**பேராசிரியர் ரொஹான் நெத்சிங்க**

1. **கூட்டுக் கற்பித்தல் மூலம் கலாச்சார புரிதல்களை ஊக்குவித்தல்: ஆசிரியர் கல்வியில் மெய்நிகர் தாள வாத்திய வாய்ப்புகள்**

   சஞ்சிகை: கலாச்சாரங்களுக்கு இடையேயான கல்வி, 1-15

   (*Q1* தரவரிசை, *Routledge* சஞ்சிகை) 2024

2. **இலங்கை காது கேளாதோர் அல்லது செவிப்புலன் குறைபாடுடையோரின் சைகை மொழி பயன்பாடு**

   சஞ்சிகை: காது கேளாதோருக்கான கல்வி மற்றும் காது கேளாதோர் கல்வி சஞ்சிகை, 29(2), 187-198

   (*Q2* தரவரிசை, ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம்) 2024

3. **தொழில்முறை கற்றல்: மெய்நிகர் இணைப்புகள் மூலம் கலாச்சாரங்களுக்கு இடையேயான நோக்குநிலைகள் பரிமாற்றம்**

   சஞ்சிகை: கல்வி ஆராய்ச்சிகளின் சிக்கல்கள், 34(1), 77-96

   (*Q2* தரவரிசை, WA கல்வி ஆராய்ச்சி சஞ்சிகை) 2024

**திருமதி. கமணி சமரசிங்க**

1. **இசை உணர்ச்சிகளின் வகைப்பாடு: இலக்கிய ஒரு மதிப்பாய்வு**

   சஞ்சிகை: இசை ஆராய்ச்சி இதழ், 2(2), 14-28 - 2024

2. **இலங்கையின் இசை பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் இலங்கை: W.B. மகுல்லோலுவாவின் வரலாற்று களப் பதிவுகளின் மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்**

   55 ஆவது சர்வதேச ஒலி மற்றும் ஒளி காப்பக சங்கம் (அழகியல் கல்வி நிறுவனம் A) வருடாந்த மாநாடு - வலென்சியா, ஸ்பெயின்

   2024 செப்டம்பர் 23 - 26

3. **"கலை மற்றும் கலாச்சார சகவாழ்வு : வெளிப்பாடு, இணைப்பு மற்றும் நல்வாழ்வை வளர்ப்பது" என்ற கருப்பொருளில் சர்வதேச இசை மாநாட்டின் மதிப்பாய்வு**

   சஞ்சிகை: இசையில் ஆராய்ச்சி இதழ், 2(1) - 2024

4. **இலங்கை - சப்ரகமுவ 'பஹன் மடு' சடங்குகள் குறித்த பரதமுனியின் நாடகக் கலைகளின் ஒப்பீட்டு பகுப்பாய்வு**

   சஞ்சிகை: இலங்கையின் அழகியல் ஆய்வுகள் சஞ்சிகை 2(2) - 2024

5. **வில்லியம் பண்டா மகுல்லோலுவாவின் பங்களிப்புகள் பற்றிய வாழ்க்கை வரலாற்று ஆய்வு**

   சஞ்சிகை: ஆசிய - ஐரோப்பிய இசை ஆராய்ச்சி இதழ், 14, 77-86 - 2024

6. **இலங்கையில் வேடவர் இசை பற்றிய ஆர்னோல்ட் பேக்கின் பதிவுகளை மறுபரிசீலனை செய்தல் : 1938 - 2024**

   தாய்வானில் இசை மற்றும் சிறுபான்மையினர் குறித்த ICTMD ஆய்வுக் குழுவுடன் ஒன்றிணைந்த நாளுடன்கூடிய தேசிய இசை மற்றும் நடனம் குறித்த ICTMD ஆய்வுக் குழுவின் 2 ஆவது மாநாடு - 2024

7. **இலங்கையில் அங்கெலிய பத்தினி சடங்கு விளையாட்டின் சமூக - கலாச்சார முக்கியத்துவம் மற்றும் சமூக நடைமுறையை ஆராய்தல்**

   சஞ்சிகை: அருவமான கலாச்சார பாரம்பரிய இதழ், 3(1), 1-13 - 2024

8. **இலங்கையில் பாரம்பரிய நாட்டுப்புற இசையைப் பேணிப் பாதுகாத்தல்**

   சஞ்சிகை: இலங்கை அழகியல் ஆய்வுகள் இதழ், 2(1), 1-4 - 2024

9. **மீள்தன்மை தாளங்கள்: இலங்கையின் காலநிலை மாற்றத்திற்கு பதிலளிக்கும் வகையில் பாரம்பரிய பறை தயாரித்தல்**

   பங்களாதேஷ் டாக்கா பல்கலைக்கழகத்தின், பெரிய தெற்காசியாவின் இசை மற்றும் அதனுடன் தொடர்புடைய கலைகள் குறித்த ICTMD ஆய்வுக் குழுவின் 3 ஆவது சர்வதேச மாநாடு, - 2024

**திரு. வசந்த குமார**

1. **ஆரம்பக் கல்வியில் இசையைக் கற்பித்தல் பற்றிய இலங்கை ஆசிரியர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விரிவான ஆய்வு**

   கருத்தரங்கு: ஆங்கில மொழிக் கல்வியின் வளர்ச்சி பற்றிய சர்வதேச மாநாடு, பொறியியல் மற்றும் முகாமைத்துவப் பல்கலைக்கழகம், ஜெய்ப்பூர், ராஜஸ்தான், இந்தியா - 2024

2. **இசை செயற்பாடுகளைப் பயன்படுத்தி ஆரம்பக் கல்வியின் முக்கிய கட்டம் 2 இல் மாணவர்களின் அறிவாற்றல் திறன்களை வளர்த்தல்**

   கருத்தரங்கு: 4 ஆவது சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு 2024, கல்வி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை - 2024

**கலாநிதி தம்மிக்க மல்லவராச்சி**

1. **STEM இளமாணி பட்டதாரிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் திறன்: செயற்கை நுண்ணறிவு எழுத்தறிவு அறிவாற்றல்**

   வணிகம், புத்தாக்கம் மற்றும் சமூகம் குறித்த 4 ஆவது சர்வதேச மெய்நிகர் மாநாடு, மலேசியா, 2024

**கலாநிதி சுமுது அம்போகம**

1. தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ESL பயிற்றுவிப்பு பொருள் மேம்பாடு: இலங்கை பல்கலைக்கழக சூழலிலிருந்து நுண்ணறிவு மற்றும் பரிந்துரைகள்

   IRTEC-2024

2. பிரபலமான சிங்களப் பாடல்களின் மூலம் மற்றும் மூலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

   கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் இசை ஆராய்ச்சி இதழ் - 2024

**பேராசிரியர் சௌம்ய லியனகே**

1. **தேசிய புகைப்பட சங்கத்தின் டிப்ளோமா விருது வழங்கும் விழாவில் சிறப்புரை ஆற்றினார்**

   2024 அக்டோபர் 26 , இலங்கை, செத்சிரிபாய பத்தரமுல்லை - 2024

2. ***"Put Yourself in Another Person's Shoes"* (நிகழ்வொன்றை பிறிதொரு நபர் நோக்கும் விதத்தில் நோக்குதல்) என்ற தலைப்பில் சிறப்புரை: மருத்துவ வல்லுநர்கள் நடிகர்களிடமிருந்து கற்றுக்கொள்ள முடியுமான விடயங்கள்.**

   கொழும்பு மருத்துவ மாநாடு, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

   2024 டிசம்பர் 7,

3. **'போரின் காயங்கள் (Wounds of War)': சமூக மாற்றத்தில் நாடகத்தின் தலையீடுகள்**

   நேபாளத்தின் கத்மாண்டுவில் உள்ள மண்டல அரங்கத்தினால் வெளியிடப்பட்ட புத்தகத்திற்காக எழுதப்பட்ட அத்தியாயம் - 2024

4. **தாகூர் மற்றும் சரச்சந்திர : தேசியவாதம் மற்றும் ஒரு நீதியான சமூகத்தை உருவாக்குதல் பற்றிய தலைப்பின் கீழான அத்தியாயம்**

   சுவாமி விவேகானந்தா நிலையம் (இந்திய கலாசார மாளிகை), கொழும்பு

   2023 நவம்பர் – 2024

5. **தெய்வீகத்தினால் வீழ்ச்சியை நோக்கி... (Divinity to Diminishing) பற்றிய தலைப்பின் கீழான ஆராய்ச்சிக் கட்டுரை.**

   மனிதாபிமானத் திட்டத்தின் மூலம் ஆசிரியர்களின் மாறிவரும் பாத்திரத்தை பகுப்பாய்வு செய்தல் - கொழும்பு மருத்துவ மாநாடு (APMEC, 2024 டிசம்பர்)

6. **மகிழ்ச்சியின் எதிரொலிகள் (Echoes of Joy: 'Happiness through Movement and Sound'): 'இயக்கம் மற்றும் ஒலி மூலம் மகிழ்ச்சி'**

   கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் தியான மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உணர்வு, மகிழ்ச்சி மற்றும் தியானம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்ட முந்தைய - காங்கிரஸ் செயலமர்வின்போது சபை அங்கத்தவர்களின் முன்னிலைப்படுத்தல்கள்: 2024 டிசம்பர் 10.

7. **அங்கம்பொர நுட்பங்கள்: உருவகப்படுத்தப்பட்ட அரங்கேற்றம் மூலம் ஒரு நடிகரின் உடல் - மனதை வளர்ப்பது என்ற தலைப்பில் செயலமர்வு முன்னிலைப்படுத்தலின் இணை ஆசிரியர்**

   செயலாற்றுகை ஆய்வுகள் சர்வதேசம் (Psi 2024), ரோயல் சென்ட்ரல் பேச்சு மற்றும் நாடக பாடசாலை, இலண்டன் - 2024 யூன்.

8. **தெய்வீகத்தினால் வீழ்ச்சியை நோக்கி... (Divinity to Diminishing) : மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஆசிரியர்களின் மாறிவரும் பாத்திரத்தை பகுப்பாய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழான பொழிப்பின் இணை ஆசிரியர்**

   AMPACK 2024, ஆசிய பசுபிக் மருத்துவக் கல்வி மாநாடு - 2024 ஜனவரி 15-21,

## 4.3 புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றல் பணிகள்

### 4.3.1 ஆராய்ச்சி, படைப்பாற்றல் நூல்கள் மற்றும் அறிவு விரிவாக்கல் மையத்தின் முன்னிலைப்படுத்தல்கள்

ஆராய்ச்சி, படைப்பாற்றல் நூல்கள் மற்றும் அறிவு விரிவாக்கல் மையம், பல்கலைக்கழகம் முழுவதும் படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வை வலியுறுத்தும் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு, சிறப்பு நிகழ்வுகளைக் கொண்ட ஒரு ஆண்டைக் கடந்துள்ளது. சிறப்பு நிகழ்வுகளில் 2024 டிசம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற கிறிஸ்துமஸ் கரோல் கொண்டாட்டமும் அடங்கும். இந்த நிகழ்வு மாணவர்கள், பீடம் மற்றும் கல்விசாரா ஊழியர்களை பண்டிகை மனப்பான்மையுடன் உற்சாகப்படுத்தியது. இந்த நிகழ்வு தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு முயற்சியின் ஆரம்பமாகும். இது கல்விசாரா ஆளணி அங்கத்தவர்களை வலுவூட்டுவதற்கு மற்றும் அவர்களின் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு, கல்விசாரா ஊழியர்களின் மன உறுதியையும் நல்வாழ்வையும் மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதில் வாரத்திற்கு இரண்டு மணித்தியாலங்கள் படைப்பாற்றல் குழு நடவடிக்கைகளுக்கு அர்ப்பணித்தல், ஆளணி ஊழியர்கள் படைப்புக்கள் வெளிப்பாட்டில் ஈடுபடுவதற்கு, நட்புறவுகளை கட்டியெழுப்புவதற்கு மற்றும் அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பை வழங்குதல் ஆகியவை அடங்கும். இந்த நடவடிக்கைகள் மூலம் கல்விசாரா ஊழியர்கள் தங்கள் வழக்கமான நடத்தைகளிலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்வதற்கும், பல்கலைக்கழகத்திற்குள் சமூக உணர்வை உருவாக்கவும், அவர்களை வலுவூட்டுவதற்கும், அவர்களின் பணி வாழ்க்கை சமநிலையை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

மேற்கத்திய இசை கற்கைப் பிரிவின் பங்களிப்புடன் பீடத்தின் மாணவர்களது பங்கேற்புடன் நடாத்தப்பட்ட இந்த கரோல் இசை நிகழ்ச்சி, இசையுடன் கலந்த குழு கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியான மாலையாக அமைந்தது. மேற்கத்திய மற்றும் வட இந்திய இசை கற்கைப் பிரிவுகளின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான திரு. மனோஜ் சஞ்சீவ மற்றும் திரு. ரவீந்திர அழகியவண்ண ஆகியோர் இந்த நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன், அரங்கேற்றக் கலை, பாலே மற்றும் நவீன நடனத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பீ. ஏ. டி. ஜகத் பத்மசிறி தனது நடனக் கல்வி மற்றும் ஒப்பனை நிபுணத்துவத்துடன் நிகழ்வை அலங்கரித்தார். கலாநிதி தரங்க தன்தெனிய மற்றும் மையத்தின் குழுவினர் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்கு வகித்தனர்.

இந்த மையம் ஆண்டு முழுவதும் ஆராய்ச்சி மற்றும் ஆக்கப் படைப்புகளை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் கவனம் செலுத்தியது. அதனூடாக கல்விச் சொற்பொழிவு மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கு கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தது. இந்த ஆரம்ப முயற்சி பல்கலைக்கழகத்தின் கல்விச் சூழலை மேம்படுத்துவதையும், படைப்பாற்றல் வெளிப்பாடு மற்றும் அறிவு பரிமாற்றத்திற்கான தளத்தை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டது.

இந்த மையம் இடைநிலை ஆராய்ச்சிக்கான வசதிகளை தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொடுத்ததுடன், உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடும் திட்டங்களில் பீடத்திற்கு மற்றும் மாணவர்களுக்கு ஒத்துழைப்புடன் பணியாற்றக்கூடிய சூழலை உருவாக்கியது. இது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கும் பரப்புவதற்கும் மேலும் ஆதரவளித்தது. பரந்த கல்வி சமூகத்திற்கு பங்களிப்பதற்கான பல்கலைக்கழகத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தியது.

### 4.3.2 கட்புல ஆற்றுகைக்கலைகள் பல்கலைக்கழக அச்சகம் (ஏயூீயு அச்சகம்)

2021 ஜனவரி 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம், இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி வெளியீட்டு தளமாக வேகமாக வளர்ந்துள்ளது. உயர்தர, நீண்டகால கல்வி வெளியீட்டிற்கான இடத்தை வழங்கியவாறு உள்ளூர் கல்வி வெளியீட்டுத் துறையில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு இந்த அச்சகம் உருவாக்கப்பட்டது. அதன் பயணத்தின்போது கல்வி அறிவு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் படைப்புகளை உருவாக்குவதில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## விசேட நிகழ்வுகள்

1. **வெளியீடுகள்:**
   - 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவரப்படி, கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் பல்வேறு தலைப்புகள் மற்றும் ஆய்வுத் துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை காண்பித்தவாறு 18 கல்விசார் படைப்புகளை வெற்றிகரமாக வெளியிட்டுள்ளது.

**2024 ஆம் ஆண்டின் சிறப்பு வெளியீடுகள்**

திரு. ரஞ்சித் பெர்னாண்டோவின் ”சங்கீத வித்யாவ (இசை விஞ்ஞானம்)” - இசை ஆய்வுத் துறையில் ஒரு புரட்சிகரமான படைப்பு.

2024 அரச இலக்கிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் சிறந்த மூல நாடக பிரதி (ஆங்கிலம்) விருதை வென்ற கலாநிதி தரங்க தன்தெனியவின் "The God King Drama" ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் இருவருக்கும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

2. **கைத்தொழில்களை இனங்காணல்**
   - கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் 2024 இல் இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் அதிகாரப்பூர்வ அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டதுடன், தேசிய வெளியீட்டுத் துறையில் அதன் இருப்பை உறுதிப்படுத்தியது.
   - **கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சி 2024:** செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 6 வரை நடைபெற்ற இந்த புகழ்பெற்ற கண்காட்சி நிகழ்வில் அச்சகம் இரண்டாவது முறையாக பங்கேற்றதுடன், அங்கு நாங்கள் எங்கள் வெளியீடுகளை பரந்தளவிலான பார்வையாளர்களுக்கு முன்வைத்தோம். அதன்போது கைத்தொழில் துறை வல்லுநர்களுடன் இணைந்து பெறுமதிமிக்க அனுபவத்தைப் பெற்றோம்.
   - இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தக நன்கொடை திட்டத்திற்கும் நாங்கள் பங்களிப்பை வழங்கியதுடன், கல்வியறிவு மற்றும் அறிவுப் பரவலுக்கு உதவுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்தினோம்.

3. **அறிவுப் பகிர்வு புத்தகத் தொடர்:**
   - கல்வி அறிவை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான எங்கள் செயற்பணிக்கு இணங்க, பரந்த சமூகத்துடன் கல்வி அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட குறைந்த விலை புத்தகங்கள் தொடரை உருவாக்குவதில் பங்கேற்குமாறு நாம் பீடத்திற்கு மற்றும் விரிவுரையாளர்களுக்கு அழைப்பு விடுத்தோம். அநேகமான விரிவுரையாளர்கள் கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பித்ததுடன், இந்த முயற்சி எங்கள் வெளியீட்டு உத்தியின் ஒரு முக்கிய பகுதியாக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

4. **ஊடக பிரச்சாரம் மற்றும் ஊக்குவிப்பு:**
   - கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகத்தின் பணிப்பாளரால் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சியில் “ சாஹித்ய அஸ்வென்ன (இலக்கிய அறுவடை)” நிகழ்ச்சியை வழிநடாத்தியதுடன், அது கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்ட படைப்புகளை விளம்பரப்படுத்துவதற்கு உதவியது. இந்த நிகழ்ச்சி ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளுடன் தொடர்புகொள்வதற்கு ஒரு தளமாக செயல்படுகின்றது.

2024 ஆம் ஆண்டில் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன், வெளியீடுகள் மற்றும் நிதிசார் முன்னேற்றத்தில் மாத்திரமன்றி கைத்தொழில்துறை பங்கேற்பு மற்றும் ஊடக தொடர்புகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. சிறப்பு படைப்புகளை வெளியிடுதல், தேசிய விழாக்களில் எமது முனைப்பான பங்கேற்பு மற்றும் அறிவு பரிமாற்ற எண்ணக்கருவை அறிமுகப்படுத்தலுடன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் இலங்கை கல்வி வெளியீட்டுத் துறையில் ஒரு முக்கிய நிறுவனமாக மாறுவதற்கான பாதையில் முன்னேறி வருகிறது. எதிர்காலத்திற்கான திட்டமிடலின்போது எமது வெளியீட்டு முயற்சிகளை மேலும் விரிவுபடுத்துதல், அதிக ஒத்துழைப்பை வளர்த்தல் மற்றும் கல்வி மற்றும் இலக்கிய சமூகங்களுக்குள் எங்கள் பணியின் தாக்கத்தை அதிகரித்தல் ஆகியவற்றை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

### 4.3.3 கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி (VAPA TV)

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழகம் 2022 இல் பெருமிதத்துடன் VAPA TV அலைவரிசையை ஆரம்பித்ததுடன், அது இலங்கையின் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான முதல் மற்றும் ஒரே தொலைக்காட்சி அலைவரிசையாகும். PEO TV (அலைவரிசை 123) மற்றும் YouTube ஊடாக ஒளி பரப்பப்படும் VAPA TV இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்புமுனையை அடையாளப்படுத்தியவாறு நாட்டின் கல்வி மற்றும் கலாசார பிரிவுகளில் ஒரு மைல்கல்லாக குறுகிய காலப் பகுதியினுள் நிலைநிறுத்தியுள்ளது.

இலங்கையின் கலை, கலாச்சாரம் மற்றும் கல்வியில் தெரிவுநிலையை மேம்படுத்துவதில் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுவான தொலைக்காட்சியில் அழகியல், கலை மற்றும் கல்வி கலந்துரையாடல்கள் போன்ற பாடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறைந்தளவிலான ஒளிபரப்பு நேரத்தை இனங்கண்டு இந்த அலைவரிசை கலை, கலாச்சாரம் மற்றும் கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரு அர்ப்பணிப்புத் தளமாக இந்த அலைவரிசை செயற்படுகிறது. இது கல்விசார் சமூகத்திற்குள் ஆழமான தொடர்புகளை வளர்ப்பதுடன் படைப்பாற்றல் கைத்தொழில்துறை செழிப்புமிக்கதாகுவதற்க ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை வழங்குகிறது. கலை மற்றும் கலாச்சாரத் துறைக்கு தரமான சேவையை வழங்குவதற்காக அலைவரிசையின் நோக்கம் ஆழமாக வேரூன்றியுள்ளது. அது அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் கல்வியாளர்களிடமிருந்து புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் கலைப் படைப்புகளைப் பிரசித்தப்படுத்துவதற்கான தளத்தை வழங்குகிறது. அதனூடாக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி இலங்கையின் கலைகளை உருவாக்கியவர்கள் மற்றும் பரந்த பொதுமக்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுவதுடன், தேசிய கலாச்சார உரையாடலுக்கு பங்களிப்பை வழங்கி தேசத்தின் முன்னணி கலைஞர்கள் மற்றும் அறிஞர்களை வளர்ப்பதற்காக பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஒரு ஒளிபரப்பு தளமாக இருப்பதற்கு மேலதிகமாக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி மாணவர்களுக்கு ஒரு அத்தியாவசிய பயிற்சி மையமாக மாறியுள்ளது. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய இது ஊடக உற்பத்தியில் நடைமுறை கற்றல் அனுபவங்களை வழங்குகிறது. இதன் மூலம் வழங்கப்படும் நடைமுறைப் பயிற்சியின் மூலம் 200க்கும் மேற்பட்ட கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், களனி பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாலி வளாகம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த நேரலை பெறுமதிமிக்க பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதுடன், கலை மற்றும் ஊடகத் துறைகளில் பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஒத்துழைப்பு மற்றும் தொழில்முறை வளர்ச்சியை வளர்க்கிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பல்வேறு பாடங்களை உள்ளடக்கியவாறு இலங்கை கலாசாரம் மற்றும் கல்வி உள்ளடக்கத்தை வெளிப்படுத்துகின்றன. 'கலா லோக்கய', 'அருணானன்த', 'அர்த்த', 'மஹாசார்ய ஹோரவ', 'கீதார்த்த', 'தக்சலவ', 'சவுந்தர்ய', 'கலா பெலஸ்ஸ' போன்ற நிகழ்ச்சிகள் இலங்கை கலை, கலாச்சாரம் மற்றும் கல்வியின் பல்வேறு அம்சங்களை பிரதிபலிக்கின்றன. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி, அரச நாடக விழா உட்பட முக்கிய தேசிய நிகழ்வுகளை உள்ளடக்குவதன் மூலம் அதன் தேசிய ரீதியிலான நிலைத்திருப்பு மற்றும் தாக்கத்தை மேம்படுத்துகிறது.




இந்த நிகழ்ச்சிகள் பெறுமதிமிக்க உள்ளடக்கங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மாணவர்கள், கல்விசார் ஆளணி மற்றும் அறிஞர்களுடன் தொடர்புகொள்வதற்கும் பங்களிப்பதற்கும், ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்வதற்குமான தளங்களை உருவாக்குகின்றன. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சி 2025 ஆம் ஆண்டில் கலை, கலாசாரம் மற்றும் கல்வி குறித்த உயர்மட்ட தேசிய உரையாடலுடன் தனது நிகழ்ச்சிகளை ஒரு புதிய தோற்றத்தில் மீண்டும் தொடங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இது வரும் ஆண்டுகளில் இலங்கையின் கலாச்சார பாரம்பரியத்தில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும்.

### 4.3.4 பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு [University Business Linkage (UBL) Cell]

பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு 2024 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் பல்வேறு மூலோபாய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலம் கல்வித்துறைக்கும் கைத்தொழில்துறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டில் பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு, பரந்த சமூகத்துடனான பல்கலைக்கழகத்தின் தொடர்புகளை பலப்படுத்துதல், படைப்பாற்றல் கலைகளை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்களுக்கு நிஜ உலக அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பெறுமதிமிக்க வாய்ப்புகளை வழங்குதல் மீது கவனம் செலுத்தியுள்ளது.

இந்த ஆண்டு பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு, பல்கலைக்கழகத்தின் சொந்த தொலைக்காட்சி அலைவரிசையான கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சிக்கு ஆதரவளித்தமையாகும். ஒரு வணிக பங்குதாரராக பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு இந்த தொலைக்காட்சி அலைவரிசையை விருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கலை சார்ந்த விடயங்களை பரந்த அளவில் வெளிப்படுத்த இடமளித்தது. இந்தக் கூட்டாண்மை அதிக பார்வையாளர்களை அடையவும், பல்கலைக்கழக மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்தவும், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் எண்ணக்கருத்துகளின் தெரிவுநிலையை அதிகரிக்கவும் உதவியுள்ளது. இதற்கு இணையான வகையில் பல்கலைக்கழக வணிக தொடர்பு பிரிவு இலங்கையின் நாடகத் துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. www.drama.lk இணையத் தளத்தில் பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு நாடக தயாரிப்புகளை நேரடியாக ஒளிபரப்புவதன் மூலம் சந்தைப்படுத்துவதை எளிதாக்கியுள்ளது. இன்னும் வளர்ச்சியடைந்துவருகின்ற இந்த எண்ணக்கரு ஊடாக உள்ளூர் நாடக அரங்கை விரிவுபடுத்த முயல்வதுடன், பல்கலைக்கழக வணிகத் இணைப்புப் பிரிவு அதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வணிகக் கூட்டாண்மைகளைப் பெறுவதற்கு தீவிரமாகச்

செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழக புத்தகக் கடை என்பது மாணவர்களுக்கு கல்விசார் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களை எளிதாக பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ள பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவின் ஒரு முக்கிய எண்ணக்கருவாகும். கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நடன நிகழ்ச்சிகள் மூலம் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தை ஊக்குவிக்கும் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக நடனக் குழுவை பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், பல்வேறு பார்வையாளர்களுடன் இணைந்து முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்புகளையும் வழங்குகிறது. இந்த முயற்சிகளுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழக வணிகத் இணைப்புப் பிரிவு, மாணவர்களுக்கு நடைமுறை அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் தொழில்முறை உலகுடன் தொடர்புகொள்வதற்கு வாய்ப்பளிக்கும் உள்ளக பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் மாணவர் அபிவிருத்தியில் கவனம் செலுத்தியுள்ளது. இந்த உள்ளக பயிற்சிகள் மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைப் பெற உதவுவதோடு, பல்கலைக்கழகத்திற்கும் பல்வேறு தொழில்களுக்கும் இடையிலான உறவுகளை வளர்க்கவும் உதவுகின்றன.

அத்துடன், இந்தப் பல்கலைக்கழக வணிகத் இணைப்புப் பிரிவு இந்தியாவைச் சேர்ந்த மாணவர்களுடன் இரண்டு நாள் கலாச்சார பரிமாற்றத் திட்டத்திற்கு வசதிகளை வழங்கியது. இந்திய மற்றும் ஆசிய நடன கற்கைப் பிரிவு மற்றும் மேல் நாட்டு நடனத் துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் செயலமர்வுகள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ ஒப்படையும் உள்ளடங்கும். இந்தக் எண்ணக்கரு மூலம், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் மற்றும் வருகைதரு பல்கலைக்கழகங்கள் ஆகிய இரு பிரிவுகளினதும் மாணவர்களுக்கு பன்முக கலாச்சார கற்றலில் ஈடுபடவும், நடனம் மற்றும் நிகழ்வு முகாமைத்துவத்தின் உயர் மரபுகளைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஒட்டுமொத்தமாக, 2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவின் முயற்சிகள் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கும் பரந்த சமூகத்திற்கும் இடையிலான உறவை வலுப்படுத்தியுள்ளதுடன், மாணவர்களுக்கு பெறுமதிமிக்க வாய்ப்புகளை வழங்கியவாறு பல்கலைக்கழகத்தின் தெரிவுநிலையையும் கலைகளுடனான அதன் ஈடுபாட்டையும் மேம்படுத்துகின்றன. பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு இந்த விடயத்தில் அடுத்த கட்டத்தில் காலடி வைத்து பல்கலைக்கழகம் மற்றும் அதன் மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்ற கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கு உறுதிபூண்டுள்ளது.

## 4.4 பல்கலைக்கழகத்தின் தரச் சான்றிதழ்

### 4.4.1 தர உத்தரவாத நிலையம்

பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத நிலையத்தினால் நிறுவனம்சார் மதிப்பாய்வு பரிந்துரைகளின் அடிப்படையில் விரிவான கொள்கைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், கற்பித்தல் மற்றும் கற்றல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் வினைத்திறன் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் ஒட்டுமொத்த தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 2024 ஆம் ஆண்டாகும்போது 42 புதிய கொள்கைகள், 2 துணைச் சட்டங்கள் மற்றும் 20 அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் வரையப்பட்டன. அறிவுறுத்தல் பட்டறைகள் மூலம் மாணவர் சமூகத்தினரிடையே இந்தக் கொள்கைகள், துணைச் சட்டங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் குறித்த அறிவை ஏற்படுத்த ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, 2023 ஆம் ஆண்டின் சிறந்த புலமைப் பரிசிலைப் பெறுபவருக்கான துணைவேந்தர் விருது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கல்வி உதவி, நிர்வாகம் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்ட ஏனைய ஆளணிப் பிரிவுகளுக்கான இனங்காணல் செயல்முறைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

### 4.4.2 ஆளணியின் திறன் விருத்தி

தர உறுதி என்பது செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை. ஆனாலும் மனித மூலதனத்திற்கு கல்வி, நிர்வாகம் மற்றும் கல்விசாரா ஆளணிக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் உயர்கல்வியின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கும் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டின் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகம் அங்கீகரிக்கிறது. 2024 ஆம் ஆண்டில், ஆளணி அபிவிருத்தி நிலையத்தின் கீழ் தொழில்முறை செயல்திறனை மேம்படுத்த பெறுமதிமிக்க அறிவு, கருவிகள் மற்றும் உத்திகளைக் கொண்டு அவர்களை வலுவூட்டுவதற்காக தொடர்ச்சியான பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த அமர்வுகள் ஆளணிக்கு நிபுணத்துவ வசதி வழங்குநர்களுடன் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பை வழங்கியதுடன் அவர்களின் பணியின் பல்வேறு அம்சங்களில் அவர்களின் திறன்களை வளர்த்துக் கொள்ள உதவியது. இணக்கமான மற்றும் நெறிமுறை பணிச்சூழலை மேம்படுத்தும் அதே வேளையில் பணி நடைமுறைகள், செயல்திறன், உற்பத்தித்திறன் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

**நடாத்தப்பட்ட செயலமர்வுகள்**

01. உங்கள் நூலகம் மற்றும் பிற ஆன்லைன் மூலங்களிலிருந்து தகவல்களைக் கண்டறிவதற்கான பட்டறை, 2024.05.21
02. ஆய்வுகளை எழுதும்போது குறிப்புகளை அறிமுகப்படுத்துவது குறித்த பட்டறை, 2024.05.31
03. ஆற்றுப்படுத்தல் முகாமைக்கு டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த பட்டறை, 2024.06.14
04. வெற்றிகரமான இலக்கிய மதிப்பாய்வை எவ்வாறு நடத்துவது என்பது குறித்த பட்டறை, 2024.07.26
05. புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட கல்விசார் ஆளணி ஊழியர்களுக்கான உயர்கல்வி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி, 2024.08.16 (தற்போது நடந்து வருகிறது)
06. புதிய தகவல் தொழில்நுட்ப அறிவுடன் பணியாளர்களை வலுவூட்டல் 2024.09.11
07. ‘‘பல்கலைக்கழக மாணவர் ஆலோசகர்களின் பணி’’ குறித்த பட்டறை
08. கல்வி மற்றும் நிர்வாக ஆளணிகளுக்காக 2025.12.12 ஆம் திகதி நடாத்தப்பட்ட தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியை அடைவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் சிறப்பு பாடங்கள் குறித்த பட்டறை
09. அனைத்து நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்காக ‘‘விருப்பத்துடன் வாழுங்கள்’’ எனும் தலைப்பிலான 04 நாள் செயலமர்வு அக்டோபர் முதல் நவம்பர், 2024 வரை




## 4.5 தேசிய மற்றும் சர்வதேச பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு

### 4.5.1 சர்வதேச ஒத்துழைப்பு

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் அர்த்தமுள்ள சர்வதேச ஒத்துழைப்புகள் மூலம் அதன் உலகளாவிய இருப்பை விரிவுபடுத்தும் வகையில் கல்வி, கலை மற்றும் கலாச்சார பரிமாற்றங்களை வளர்க்கின்றது. காட்சி மற்றும் அரங்கேற்றக் கலைகளில் பாதுகாப்பு, ஊக்குவிப்பு மற்றும் புத்தாக்கத்திற்கான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை மேம்படுத்தும்போது இந்த கூட்டாண்மைகள் தனித்துவமான பங்கை வகிக்கின்றன.

- **ஈரான் திரைப்பட விழா:** இலங்கையில் உள்ள ஈரானிய கலாச்சார மையத்துடன் இணைந்து கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம், ஈரானிய திரைப்பட விழாவை நடாத்தியதன் மூலம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உலகளாவிய சினிமா மரபுகளை வெளிப்படுத்தவும், கலாச்சாரத்தை மதிப்பிடுவதனை வளர்க்கவும் உதவுகிறது.

- **நூலகப் பொருட்கள் நன்கொடை:** புகழ்பெற்ற இந்திய இசைக்கலைஞரான கலாநிதி சுப்பிரமணியம், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு பெறுமதிமிக்க நூலகப் பொருட்களின் தொகுப்பை தாராளமாக நன்கொடையாக வழங்கினார். இது இசை மற்றும் அரங்கேற்றக் கலை ஆய்வுகளுக்கான பல்கலைக்கழகத்தின் கல்வி வளங்களை கணிசமாக வளப்படுத்தியது.

- **பட்டப்பின் படிப்பு கற்கை பீடத்திற்கான வருகைதரு அறிஞர்கள்:** பல்கலைக்கழகம் சர்வதேச அறிஞர்கள் மற்றும் கலைஞர்களை வருகை விரிவுரையாளர்களாக வரவேற்கிறது, இதன் மூலம் அழகியற் கலைகளுக்குள் குறிப்பிட்ட துறைகளில் கல்விச் சொற்பொழிவு மற்றும் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதை மேம்படுத்துகிறது.

- **அருவமான கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஆசிய - பசுபிக் உயர்கல்வி வலையமைப்பின் (APHEN-ICH) உறுப்புரிமை:** அருவமான கலாச்சார பாரம்பரியத்தை (ICH) பாதுகாப்பதில் அதன் தனித்துவமான பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு APHENICH இன் உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப் பாடத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் பாரம்பரிய கலைகள் மற்றும் கலாச்சார வெளிப்பாடுகளைப் பாதுகாப்பதில் அதன் பங்கையும் அங்கீகரிக்கிறது.

- **பாரம்பரிய இசையைப் பேணிப் பாதுகாத்தல்:** ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையைச் சேர்ந்த ஒரு நன்கொடையாளருடன் இணைந்து, பல்கலைக்கழகம் மட்டக்களப்பு பகுதி மற்றும் புத்தளத்திற்கு பல களப் பயணங்களை மேற்கொண்டதுடன், இசை பீட மாணவர்களுக்கு தேசிய இசை மரபுகள் பற்றி நடைமுறையில் வெளிப்படுத்தியது. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு அரங்கேற்ற நிகழ்ச்சியால் இந்த முயற்சி மேலும் மேம்படுத்தப்பட்டது, கலாச்சார பரிமாற்றம் மற்றும் கல்வி கூட்டாண்மைகளை வலுப்படுத்தியது. ஆராய்ச்சி, அரங்கேற்ற நிகழ்ச்சிகள் மற்றும் கல்வித் திட்டங்கள் மூலம் இலங்கையின் வளமான இசை பாரம்பரியத்தை புத்துயிர் பெறுவதும் அதிகத் தெரிவுநிலையைக் கொண்டுவருவதும் இந்த எண்ணக்கருவின் நோக்கமாகும்.

இந்த சர்வதேச ஒத்துழைப்புகள் மூலம், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகளில் சிறந்து விளங்கும் மையமாக அதன் பங்கை வலுப்படுத்தி, உள்ளூர் மரபுகளை உலகளாவிய கலை மற்றும் கல்வி வலையமைப்புகளுடன் இணைக்கிறது.

### 4.5.2 கைத்தொழில் சார்ந்த ஒத்துழைப்புக்கள்

2024 செப்டம்பர் 02 ஆம் திகதி பல்கலைக்கழகம் தேசிய கைவினைகள் சபையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கைச்சாத்திட்டதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க கூட்டாண்மையை ஏற்படுத்திக் கொண்டது. இந்த ஒத்துழைப்பு திறந்த மற்றும் தொலைக் கற்றல் மையம் (CODL) மூலம் வழங்கப்படும் மட்பாண்டக் கலை மற்றும் வடிவமைப்பு டிப்ளோமாவில் கவனம் செலுத்துகிறது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கல்வி மற்றும் கைத்தொழில்துறை துறைகளுக்கு இடையே நெருக்கமான உறவுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இது மாணவர்களுக்கு கைவினைத் கைத்தொழில் துறைக்கு பெறுமதிமிக்க புரிதல் மற்றும் நடைமுறை வெளிப்பாட்டை வழங்குகிறது. இந்த கூட்டாண்மை கல்வி மற்றும் கைத்தொழில்துறைக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கும் சிறப்புத் திட்டங்களை வழங்குவதற்கான பல்கலைக்கழகத்தின் உறுதிப்பாட்டை மேம்படுத்தியவாறு படைப்பாற்றல் மற்றும் வடிவமைப்புத் துறைகளில் சிறந்து விளங்கத் தேவையான திறன்களை மாணவர்களுக்கு வழங்குகிறது.

### 4.5.3 சமூக நல்லிணக்கத்திற்கான நிலையம்

பல்வேறு சமூகங்களிடையே சமாதானம், ஒற்றுமை மற்றும் புரிதலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பல்கலைக்கழகம் **சமூக நல்லிணக்கத்திற்கான நிலையத்தை** நிறுவியது. இதன் கீழ், பல்கலைக்கழகம் சுவாமி விவேகானந்தா கல்லூரி மற்றும் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து தைப்பொங்கலைக் கொண்டாடியது. தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்ற இந்த நிகழ்வு, உயர்ந்த மரபுகள் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு மகிழ்ச்சியான கலாச்சார நிகழ்வாக இருந்தது. தைப் பொங்கல் பண்டிகையின்போது வெளிப்படுத்தப்படும் நன்றியுணர்வு, செழிப்பு மற்றும் ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் இரு நிறுவனங்களின் மாணவர்களும் ஒரு கவர்ச்சிகரமான கலாச்சார நிகழ்ச்சியை முன்னிலைப்படுத்தினர். இந்த வைபவமானது பங்கேற்கும் நிறுவனங்களின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல், மாணவர்களிடையே நல்ல கலாச்சார பரிமாற்றத்தையும் பரஸ்பர மரியாதையையும் வளர்த்ததுடன், பல்கலைக்கழகத்தின் நேரடி சமூகத்தையும் உற்சாகப்படுத்தியது. இலங்கையின் பன்முக கலாச்சார பாரம்பரியத்தை கொண்டாடவும், பல்கலைக்கழகம் முழுவதும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்க உணர்வை ஊக்குவிக்கவும் இந்த நிகழ்வு ஒரு அற்புதமான வாய்ப்பாக அமைந்தது.

## 4.6 நிதி நிலைபெறுதகு தன்மை

பல்கலைக்கழகம் அதன் திறந்த மற்றும் தொலைக் கற்றல் மையம் (CODL) மற்றும் பட்டப்பின் படிப்பு ஆய்வுகள் பீடம் (FGS) திட்டங்கள் மூலம் நிதி நிலைத்தன்மையை அடைந்துகொள்வதற்கு உறுதிபூண்டுள்ளதுடன், அதனூடாக வருமானத்தை ஈட்டுவதுடன் கல்விக்கான வாய்ப்பை விரிவுபடுத்துகின்றது. இது தவிர, பல்கலைக்கழகத்தின் வணிக இணைப்புப் பிரிவு மாணவர்களுக்கு நிதி மற்றும் செய்முறை வாய்ப்புகளைப் பாதுகாத்தவாறு கைத்தொழில் கூட்டாண்மைகளை வலுப்படுத்துகிறது. இந்த முக்கிய நடவடிக்கைகள் கூட்டாக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைத்தன்மை மற்றும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துகின்றன.

## 5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் (SDGs) பல்கலைக்கழகத்தின் செயலாற்றுகை இயைந்திருத்தல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயலாற்றுகையை பின்வரும் பேண்தகு (நிலைபெறுதகு) அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புபடுத்துவதற்கு முடியும்;

### பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 3 - ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு

பல்கலைக்கழகம் பல்வேறு கருத்துக்கள் ஊடாக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் உடல் மற்றும் மன நலனை முனைப்புடன் ஊக்குவிக்கிறது:

**உடற்கல்வி பிரிவு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி:** ஒட்டுமொத்த நல்வாழ்வை வளர்ப்பதற்காக உடல் செயற்பாடுகளில் முனைப்புடன் பங்கேற்பதை ஊக்குவித்தல்.

**பல்கலைக்கழகங்களுக்கு மற்றும் பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்:** குழுச் செயற்பாடு, தாங்கும் ஆற்றல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை மேம்படுத்துதல்.

**உள நலனுக்கான ஆரம்ப முயற்சிகள்:** உளவள ஆலோசனை மற்றும் மனநல ஆரோக்கிய வளங்கள் மூலம் ஆதரவை வழங்குதல்.

**முன்னிலைப்படுத்தலுளுக்கான வாய்ப்புகளை வழங்குதல்:** படைப்பாற்றல் குழு நடவடிக்கைகள் மூலம் கல்விசாரா ஊழியர்களை வலுவூட்டல், மன உறுதியை மேம்படுத்துதல் மற்றும் சமநிலையான பணி-வாழ்க்கை சூழலை ஊக்குவித்தல்.

### பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 4 - தரமான கல்வி

பின்வரும் முயற்சிகள் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலை வளர்ப்பதற்கும் பல்கலைக்கழகம் தன்னை அர்ப்பணித்துள்ளது:

**ஆராய்ச்சி, படைப்பாற்றல் நூல்கள் மற்றும் அறிவுப் பரவல்:** துறைகளுக்கு இடையேயான ஆராய்ச்சி தளங்கள், பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் கல்வி ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவித்தல்.

**கட்புல ஆற்றுகைக் கலைகள் அச்சகம்:** அணுகக்கூடிய குறைந்த விலை வெளியீடுகள் மூலம் கல்விப் பணிகளைப் பரப்புதல்.

**தொழில் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை:** தொழில் திட்டமிடல், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்துறை வெளிப்பாடு ஆகியவற்றில் மாணவர்களுக்கு ஆதரவளித்தல்.

**விடயங்கள் முகாமைத்துவ டிப்ளோமா:** தொழில்முறை தகுதிகளை மேம்படுத்த கட்டமைக்கப்பட்ட கல்வித் திட்டங்களை வழங்குதல்.

**பாலின சமூக நிலை மற்றும் சமத்துவத்திற்கான நிலையம் (CGEE):** பாதுகாப்பான மற்றும் நீதியான கற்றல் சூழலில் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல்.

**ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு மேம்பாடு:** ஒத்துழைப்புகள் மற்றும் சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் சஞ்சிகை பங்களிப்புகள் மூலம் கல்வி ஆராய்ச்சியை வலுப்படுத்துதல்.

**ICH சர்வதேச ஆராய்ச்சி பொழிப்பு நூல் வெளியீடு:** கலாச்சார பாரம்பரியம் குறித்த ஆராய்ச்சியை மேம்படுத்துதல்.

**ஆராய்ச்சி அறிவு மேம்பாடு குறித்த பட்டறைகள்:** ஆராய்ச்சி சார்ந்த கல்வி கலாச்சாரத்தை வளர்ப்பது.

பல்கலைக்கழகம் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் கற்றலின் முக்கியத்துவம் பற்றிய மாணவர்களின் புரிதலை விரிவுபடுத்துதல், அனுமதியை வளர்த்தல் மற்றும் விரிவுபடுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 5 - பாலின சமத்துவம்

**பாலின சமூக நிலை மற்றும் சமத்துவத்திற்கான நிலையம் (CGEE):** பல்கலைக்கழகத்திற்குள் பாலின சமத்துவம், உள்ளடக்கம் மீது கவனம் செலுத்துதல் மற்றும் பாலின உணர்திறன் கொள்கைகளுக்காக தோற்றுதல்.

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 8 - உரிய செயற்பணி மற்றும் பொருளாதார விருத்தி

பல்கலைக்கழகமானது கீழ் வரும் விடயங்களின் ஊடாக மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வெற்றியை மேம்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளது

**பட்டதாரி வேலைவாய்ப்பு தொடர்பான கணக்கெடுப்புக்கள்:** தொழில் தயார்நிலையை மேம்படுத்துவதற்காக வேலைவாய்ப்பு போக்குகளை பகுப்பாய்வு செய்தல்.

**பீடங்கள் ஊடாக உள்ளக பயிற்சி வாய்ப்புகள்:** கல்வித்துறையை கைத்தொழில்துறை தேவைகளுடன் இணைக்க நடைமுறை கற்றல் அனுபவங்களை வழங்குதல்.

**தொழில் முயற்சி மற்றும் சமூக திறன் பாடநெறிகள்:** ஊழியப் படையில் நுழைவதற்கு அல்லது தமது சொந்த வணிகங்களை நிறுவுவதற்காக தேவையான திறன்களை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தல்.

**கலாச்சார பரிமாற்ற திட்டங்கள்:** எதிர்கால தொழில் வாய்ப்புகளை மேம்படுத்தும் சர்வதேச அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குதல்.

**கைத்தொழில்சார் ஒத்துழைப்புகள்:** கல்வித் திட்டங்களை தொழில்துறை தேவைகளுடன் இணைப்பதன் மூலம், இந்த கூட்டாண்மைகள் திறமையான ஊழியப் படையை அபிவிருத்தி செய்வதற்கு, பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை தயார்நிலையை வளர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 9 - கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

**கட்புல செவிப்புல பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் களஞ்சியம்:** கலாச்சார பாரம்பரிய வளங்களைப் பாதுகாப்பதற்கு மற்றும் அணுகலை மேம்படுத்தவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

**திரைப்படத் தொகுப்பு மற்றும் கட்புல செவிப்புல ஆவணக் காப்பகங்கள்:** வரலாற்று மற்றும் கல்விசார் வளங்களை இலகுவாக அணுகக்கூடியதாக மாற்றுதல்.

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்

பல்கலைக்கழகமானது ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துகிறது:

**படைப்பாற்றல் நிகழ்வுகளில் உள்ளடக்குதல்:** முன்னிலைப்படுத்தல்களுக்கான வாய்ப்புக்கள் வழங்குவதனை ஆரம்பிப்பதனூடாக படைப்பாற்றல்மிக்க பல்கலைக்கழக நிகழ்வுகளில் கல்விசாரா ஊழியர்கள் உள்ளடக்கப்படுவதுடன், இதன் மூலம் பன்முகத்தன்மை மற்றும் சமத்துவம் ஊக்குவிக்கப்படுகின்றது.

**கலாச்சார பரிமாற்றல் ஊடாக கற்றல்:** கலாச்சார பரிமாற்றத் திட்டங்கள் மாணவர்கள் வெவ்வேறு மரபுகளுடன் ஈடுபடுவதை எளிதாக்குவதுடன், உள்ளடக்கத்தை வளர்த்து ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கின்றன.

**தொழில் ஆலோசனை மற்றும் உதவி சேவைகள்:** அனைத்து மாணவர்களும் தங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற சம வாய்ப்புகளை வழங்குதல்.

**மன நலம் மற்றும் தொழில்சார் உளவள ஆலோசனை:** தனிப்பட்ட மற்றும் தொழில்முறை சவால்களை சமாளிக்க உதவி வழங்குதல்.

**தைப் பொங்கல் பண்டிகை:** பல்வேறு கலாச்சார மற்றும் இனப் பின்னணிகளைச் சேர்ந்த மாணவர்களிடையே பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலை ஊக்குவிப்பதன் மூலம் சமூக உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றத்தாழிவுகளைக் குறைத்தல்.

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 11 - நிலைபெறுதகு நகரங்கள் மற்றும் பிரஜைகள்

பல்கலைக்கழகம் பின்வரும் முறைகள் மூலம் கலாச்சார நிலைபெறுதன்மைக்கு பங்களிக்கிறது:

**அருவ கலாசார பாரம்பரியம் குறித்த ஆராய்ச்சி:** கலாச்சார நிலைபெறுதன்மையைப் பாதுகாப்பதற்காக இலங்கை இசை பாரம்பரியம், பாரம்பரிய நிகழ்ச்சிகள் மற்றும் சடங்குகள் பற்றிய ஆய்வு.

**நாட்டுப்புற இசை மற்றும் சமூக பண்புகள் பற்றிய வெளியீடுகள்:** விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் பாரம்பரிய கலாச்சார நடைமுறைகளைப் பாதுகாத்தல்.

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக தொலைக்காட்சியில் தேசிய பங்கேற்பு:** உள்ளூர் கலைகள், கலாச்சாரம் மற்றும் கல்வியின் தெரிவுநிலையை மேம்படுத்துதல், நிலைபெறுதகு கலாச்சார வளர்ச்சி மற்றும் சமூக பங்கேற்புக்கு பங்களித்தல்

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 16 - சமாதானம், நீதி மற்றும் பலம்மிக்க நிறுவனங்கள்

பல்கலைக்கழகம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கு உதவி வழங்கியவாறு ஒற்றுமை மற்றும் செழிப்பை ஊக்குவிக்கும் விழாக்களைக் கொண்டாடுகிறது.

## பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 17 - நிலைபெறுதகு அபிவிருத்திக்கான பங்குதாரர்கள்

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும்போது கூட்டாண்மைகளின் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகம் அங்கீகரிக்கிறது:

**வெளிவாரி நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு:** மிகச் சிறந்த கல்வி மற்றும் விளையாட்டு வாய்ப்புகளை வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைத்தல்.

**அழைப்புப் போட்டித் தொடர்கள் மற்றும் போட்டிகள்:** ஏனைய கல்வி நிறுவனங்களுடன் கூட்டாண்மை மூலம் பல்கலைக்கழக வலையமைப்புக்களை வலுப்படுத்துதல்.

**சர்வதேச ஆராய்ச்சி நடவடிக்கைகள்:** கல்விசார் பங்கேற்பை அதிகரிப்பதற்காக உலகளாவிய சஞ்சிகைகள் மற்றும் கருத்தரங்குகளுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.

**சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்குகள்:** உலகளாவிய ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் அறிவு பரிமாற்றத்தை மேம்படுத்துதல்.

சுவாமி விவேகானந்தா கல்லூரிக்கும் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு, சமாதானம், கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நோக்கை ஊக்குவிப்பதற்கு கல்வி நிறுவனங்கள் எவ்வாறு ஒன்றிணைய முடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இந்த ஒத்துழைப்பு மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் பயனளிக்கும் நீண்டகால, நிலையான கூட்டாண்மைகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடனான இந்த இயைந்திருப்பு, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பிரஜைகள் பங்கேற்பு மூலம் உலகளாவிய இலக்குகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது.

## 6. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2024

### கணக்காய்வுக் குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்

கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள், நிர்வாக சபையினால் நியமிக்கப்படும் மூன்று நிர்வாக சபை அங்கத்தவர்கள் மற்றும் பதிவாளர் ஆகியோரை உள்ளடக்கியதாகும். மீளாய்வாண்டில் கீழ் குறிப்பிடப்படுபவர்கள் கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களாக அலுவல் மேற்கொண்டனர்.

| | | |
|---|---|---|
| திரு. ரீ. தர்மராஜா | - | தலைவர் / நிர்வாக சபை அங்கத்தவர் |
| பேராசிரியர் நிமல் கீர்த்தி தங்கல்ல | - | அங்கத்தவர் / நிர்வாக சபை அங்கத்தவர் |
| திரு. பிரசாந்த லால் டி அல்விஸ் | - | அங்கத்தவர் / நிர்வாக சபை அங்கத்தவர் |
| திருமதி டீ என் குருசிங்க<br>பதிவாளர் (ப.க.) (2024.03.31 வரை) | - | அங்கத்தவர் / பதில் கடமை பதிவாளர் |

திருமதி பீ.எஸ்.ஜீ.பீ.நாணாயக்கார, பதிவாளர்
(2024.04.01 முதல் 2024.09.01 வரை)

கலாநிதி சானி இம்புல்கொட (2024.09.02 முதல்)

**<u>கண்காணிப்பாளர்</u>**

| | | |
|---|---|---|
| திருமதி ஏ.கே.ஏ.சந்திரிகா | - | கணக்காய்வு அத்தியட்சகர் |

### நிறைவேற்றிய பணிகள்

1. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

2. தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் கணக்காய்வு ஐய வினாக்கள் மீது கவனம் செலுத்தப்பட்டு எதிர் காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

3. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினா அல்லது அவதானிப்பு தொடர்பாக காலப் பகுதியுடன் பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்களால் எடுக்கப்பட்டுள்ள / எடுக்கப்படவுள்ள உரிய நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளுடன் நிர்வாக சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான
நிதி செயலாற்றுகை அறிக்கைக் கூற்றுக்கள்
(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)

| | குறிப்புக்கள் | 2024 ரூபா | 2023 (மீளக் குறிப்பிடப்பட்டது) ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| **பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல்வாங்கல்கள் மூலமான வருமானம் - மீண்டெழும்** | | | |
| மீண்டெழும் செலவுகளுக்கான அரசாங்கத்தின் அளிப்புக்கள் | | 1,413,411,642 | 1,341,500,000 |
| விளையாட்டுக்களுக்கான விசேட அளிப்புக்கள் - பல்.மா.ஆ. | | 700,000 | - |
| அளிப்புக்கள் - மாணவர் உதவு தொகை | | 49,240,650 | 42,772,000 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான AHEAD அளிப்புக்கள் | | - | 29,112,045 |
| ***பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல்வாங்கல்கள் மூலமான மொத்த வருமானம் - மீண்டெழும்*** | | **1,463,352,292** | **1,413,384,045** |
| **பரிவர்த்தனை மூலமான வருமானம் - மீண்டெழும்** | | | |
| வட்டி வருமானம் | 3 | 7,745,393 | 5,939,450 |
| நானாவித வருமானம் | 3.01 | 21,829,451 | 24,755,124 |
| **பரிவர்த்தனை மூலமான மொத்த வருமானம் - மீண்டெழும்** | | **29,574,843** | **30,694,574** |
| பட்டப்பின் படிப்பு பீடத்தின் வருமானம் | | 2,101,829 | 1,833,987 |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி மையத்தின் வருமானம் | | 16,725,081 | 20,231,967 |
| UBL வருமானம் | | 3,369,521 | - |
| VAPA Press வருமானம் | | 1,374,868 | - |
| VAPA TV வருமானம் | | 7,013,476 | - |
| **மொத்த வருமானம் - மீண்டெழும்** | | **1,523,511,910** | **1,466,144,573** |
| **தொழிற்பாட்டு செலவுகள் - மீண்டெழும்** | | | |
| ஆளுக்கான வேதனாதிகள் | 4.01 | 1,131,642,211 | 1,012,385,776 |
| பிரயாணச் செலவு | 4.02 | 955,146 | 286,999 |
| வழங்கல்கள் | 5 | 23,978,252 | 36,932,316 |
| பராமரிப்பு செலவு | 6 | 41,414,298 | 30,570,865 |
| ஒப்பந்த சேவைகள் | 7 | 177,821,532 | 220,875,023 |
| ஏனைய மீண்டெழும் செலவினங்கள் | 8.01 | 33,314,550 | 49,715,217 |
| மகாபொல புலமைப் பரிசில் | 8.02 | - | - |
| மாணவர் உதவு தொகை | 8.03 | 53,936,000 | 42,772,000 |
| பயன்படுத்த முடியாத நிலையான சொத்துக்களை அகற்றுவதற்கான செலவு | | 6,732 | 95,017 |
| நுண்ணறிவு பரீட்சைக்கான செலவுகள் | | - | 1,953,990 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 24 | 80,845,334 | 96,401,950 |
| ஏனைய பிரிவுகளுக்கான செலவுகள் | 8.04 | 10,656,521 | 33,842,192 |
| ***தொழிற்பாட்டு செலவுகள்*** | | **1,554,570,575** | **1,525,831,346** |
| பட்டப்பின் படிப்பு பாடநெறி பீடத்திற்கான செலவுகள் | | 724,529 | 1,050,156 |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி கற்கைப் மையத்தின் செலவுகள் | | 6,416,229 | 6,732,631 |
| UBL செலவுகள் | | 2,621,090 | - |
| VAPA Press செலவுகள் | | 1,699,064 | - |
| VAPA TV செலவுகள் | | 2,560,527 | - |
| ***மொத்த தொழிற்பாட்டுச் செலவினம்*** | | **1,568,592,014** | **1,533,614,133** |
| **காலப் பகுதிக்கான மீண்டெழும் மேலதிகம் /(குறைவு)** | | **(45,080,104)** | **(67,469,560)** |
| **மூலதனம்** | | | |
| மூலதன செலவுகளுக்கான அரசாங்கத்தின் அளிப்பு | | 177,509,149 | 225,000,000 |
| பரிசுகள், நன்கொடைகள், பொருட்கள் - உள்நாடு | 29 | 91,200.00 | 400,795.00 |
| பரிசுகள், நன்கொடைகள், பொருட்கள் - வெளிநாடு | 29 | - | 2,696,350 |
| மூலதன செலவினங்களுக்கான AHEAD அளிப்புக்கள் | | 4,807,620 | 12,291,151 |
| குறிப்பிட்ட நிதிகளில் இருந்து மாற்றப்பட்ட நிதியங்கள் (துணைவேந்தர் நிதியம்) | | - | 1,558,772 |
| ***பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல்வாங்கல்கள் மூலமான மொத்த வருமானம் - மூலதனம்*** | | **182,407,969** | **241,947,067** |
| ***மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் - மூலதனம்*** | | | |
| தேய்வு மற்றும் பெறுமானத் தேய்வு | | 230,719,260 | 232,790,621 |
| மீண்டெழும் செலவுகள் - மூலதனம் அல்லாத தன்மை | | 9,635,412 | 7,249,029 |
| மனித மூலதன மேம்பாட்டுச் செலவுகள் - மூலதனமற்ற தன்மை | | 380,635 | - |
| ***மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் - மூலதனம்*** | | **240,735,307** | **240,039,650** |
| **காலப் பகுதிக்கான மூலதன மேலதிகம் /(குறைவு)** | | **(58,327,338)** | **1,907,417** |
| **காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம் /(குறைவு)** | | **(103,407,441)** | **(65,562,142)** |

காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம் / (குறைவு) கீழ் குறிப்பிடப்படும் காலப் பகுதிக்காக மீண்டெழும், மூலதனம், பட்டப்பின் கற்கைகள் (FGS) மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி மையத்தின் (CODL) மேலதிகம் அல்லது (குறைவு) உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | 2024 | 2023 |
|---|---|---|
| காலப் பகுதிக்கான மீண்டெழும் மேலதிகம் / (குறைவு) - திரட்டு நிதியத்திற்கு மாற்றுதல் - | (61,643,440) | (81,752,726) |
| காலப் பகுதிக்கான மூலதனம் மேலதிகம் / (குறைவு) - திரட்டு நிதியத்திற்கு மாற்றுதல் - | (58,327,338) | 1,907,417 |
| காலப் பகுதிக்கான மேலதிகம் /(குறைவு) பட்டப்பின் படிப்பு பிரிவு | 1,377,300 | 783,831 |
| ஆண்டின் மேலதிகம் /(குறைவு) திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் | 10,308,853 | 13,499,336 |
| காலப் பகுதிக்கான மேலதிகம் ∴(குறைவு) UBL | 748,431 | - |
| காலப் பகுதிக்கான மேலதிகம் ∴(குறைவு) VAPA Press | (324,196) | - |
| காலப் பகுதிக்கான மேலதிகம் ∴(குறைவு) VAPA TV | 4,452,949 | - |
| | **(103,407,441)** | **(65,562,142)** |

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை பற்றிய அறிக்கை
(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)

| சொத்துக்கள் | குறிப்புக்கள் | 2024 ரூபா | 2023 (மீளக் குறிப்பிடப்பட்டது) ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | 4,504,039,877 | 4,639,312,225 |
| முதலீடுகள் | 20 | - | - |
| அருவச் சொத்துக்கள் | 11 | 1,541,876 | 2,312,813 |
| மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் | 21 | 8,592,301 | 8,592,301 |
| மூலதன முற்பணம் | 17 | 2,759,624 | 2,759,621 |
| | | **4,516,933,678** | **4,652,976,961** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 12 | 212,059,296 | 53,725,341 |
| கிடைக்க வேண்டிய தொகை | 13 | 3,265,907 | 14,434,248 |
| குறுகிய கால முதலீடுகள் | 20 | 91,780,293 | 82,867,045 |
| இருப்புக்கள் | 14 | 7,740,726 | 8,592,103 |
| முன் செலுத்துகைகள் | 15 | 3,142,067 | 4,228,601 |
| முற்பணம் | 16 | 101,457 | 10,085 |
| ஆளணிக்கான கடன் / முற்பணம் | 18 | 45,161,655 | 46,843,824 |
| வெளி நிறுவனங்களில் வைப்புக்கள் | 19 | 1,603,696 | 1,083,696 |
| | | **364,855,097** | **211,784,943** |
| **மொத்த சொத்துக்கள்** | | **4,881,788,776** | **4,864,761,904** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 24 | 231,324,530 | 153,311,251 |
| | | **231,324,530** | **153,311,251** |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் - CODL & FGS | 30 | **3,829,113** | **3,437,458** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு செலவுகள் | 22 | 79,800,282 | 45,204,434 |
| ஏனைய செலுத்த வேண்டிய செலவுகள் | 23 | 14,406,261 | 46,126,043 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 24 | 7,699,020 | 20,612,340 |
| வைப்புக்கள் மற்றும் பிடிமானத் தொகைகள் | 25 | 8,469,369 | 19,198,338 |
| குறுகிய கால ஒதுக்கீடுகள் | 26 | 1,316,230 | 3,914,590 |
| | | **111,691,162** | **135,055,745** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **346,844,805** | **291,804,453** |
| **தேறிய சொத்துக்கள்** | | **4,534,943,971** | **4,572,957,451** |
| **தேறிய சொத்துக்கள் / பங்குகள்** | | | |
| திரட்டிய நிதி - மீண்டெழும் | | (209,493,793) | (147,850,353) |
| திரட்டிய நிதி - மூலதனம் | | 2,402,770,273 | 2,461,097,611 |
| வரையறுக்கப்பட்ட நிதியம் (குறிப்பிட்ட நிதியங்கள்) | 27 | 42,707,889 | 38,169,340 |
| மீள் மதிப்பீட்டு மேலதிகம் | 28 | 2,210,560,740 | 2,149,157,473 |
| திரட்டிய பட்டப்பின் படிப்பு நிதியம் | | 4,830,063 | 3,440,273 |
| திரட்டிய திறந்த மற்றும் தொலைக் கல்விப் மையத்தின் நிதியம் | | 76,202,008 | 66,453,498 |
| திரட்டிய நிதி - UBL | | 3,402,394 | 2,653,962 |
| திரட்டிய நிதி -VAPA Press | | (324,196) | - |
| திரட்டிய நிதி -VAPA TV | | 4,288,595 | (164,353) |
| **மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்** | | **4,534,943,971** | **4,572,957,450** |

இந்த நிதிக் கூற்று இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 106(எ), 107(ஐ)(டி) ஆம் இலக்க பந்திகளுக்கமைய மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் இலக்க பந்திக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

டப்ளியு.எம்.டப்ளியு.வன்னிநாயக்க (நிதி நிர்வாகி) கலாநிதி சீ.வீ.இம்புல்கொட (பதிவாளர்)

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பு நிர்வாக சபையைச் சார்ந்ததாகும். இந்த நிதிக் கூற்று 2025 பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின்போது நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் ரொஹான் நெத்சிங்க (துணைவேந்தர்)

...................................................... ......................................................

கலாநிதி சீ.பத்திராஜ (நிர்வாக சபை அங்கத்தவர்) ரீ.தர்மராஜா (நிர்வாக சபை அங்கத்தவர்)

பக்க இலக்கம் 05 முதல் 22 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 23 முதல் 39 வரையிலான கணக்குக் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**

**2024 திசெம்பர் 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான பங்குகள் மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றமடைதல் பற்றிய கூற்று**

(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)

ரூ.

| | திரட்டிய நிதியம் - மீண்டெழும் | திரட்டிய நிதியம் - மூலதனம் | வரையறுக்கப்பட்ட நிதியம் (குறித்துரைக்கப்பட்ட நிதியங்கள்) குறிப்பு இல. 27 | பட்டப்பின் படிப்பு நிதியம் | திறந்த மற்றும் தொலைக் கல்வி நிதியம் | UBL நிதியம் | VAPA Press நிதியம் | VAPA TV நிதியம் | மீள் மதிப்பீட்டு மேலதிகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2023.01.01 திகதியன்று மீதி (மீளக் குறிப்பிடப்பட்ட)** | **(65,892,765)** | **2,452,908,227** | **33,698,010** | **2,678,739** | **53,682,152** | **-** | **-** | **-** | **2,149,157,473** | **4,626,231,836** |
| | | | | | | | | | | |
| கடந்த ஆண்டுகளுடன் தொடர்பான சீர்படுத்தல்கள் (குறிப்பு “ஏ”) | (204,862) | 6,281,965 | - | - | - | - | - | - | - | 6,077,103 |
| 2023 ஆண்டுடன் தொடர்பான சீர்படுத்துகைகள்- குறிப்பு - 31 | (13,041,316) | (12,670,744) | - | - | (20,500) | 2,653,962 | - | (164,353) | - | (23,242,951) |
| 2023 ஆண்டினுள் பெறப்பட்ட நிதிகள் | - | - | (1,337,569) | - | - | - | - | - | - | (1,337,569) |
| ஆண்டினுள் பெறப்பட்ட நிதிகள் | - | - | 5,808,899 | (22,297) | (727,990) | - | - | - | - | 5,058,612 |
| ஆண்டுடன் தொடர்பான மேலதிகம் | (68,711,410) | 14,578,162 | - | 783,831 | 13,519,836 | - | - | - | - | (39,829,581) |
| **2023.12.31 ஆம் திகதியன்று மீதி (மீளக் குறிப்பிடப்பட்டது)** | **(147,850,353)** | **2,461,097,611** | **38,169,340** | **3,440,273** | **66,453,498** | **2,653,962** | **-** | **(164,353)** | **2,149,157,473** | **4,572,957,451** |
| | | | | | | | | | | |
| **2024.01.01 ஆம் திகதியன்று மீதி (மீளக் குறிப்பிடப்பட்டது)** | **(147,850,353)** | **2,461,097,611** | **38,169,340** | **3,440,273** | **66,453,498** | **2,653,962** | **-** | **(164,353)** | **2,149,157,473** | **4,572,957,450** |
| மோட்டார் வாகனங்கள் மீள் மதிப்பீட்டு மேலதிகம் | - | - | - | - | - | - | - | - | 61,403,267 | **61,403,267** |
| ஆண்டினுள் பெறப்பட்ட நிதிகள் | - | - | 4,538,549 | 12,490 | (560,343) | - | - | - | - | **3,990,696** |
| ஆண்டின் மேலதிகம் | (61,643,440) | (58,327,338) | - | 1,377,300 | 10,308,853 | 748,431 | (324,196) | 4,452,949 | - | **(103,407,441)** |
| **2024.12.31 ஆம் திகதியன்று மீதி** | **(209,493,793)** | **2,402,770,273** | **42,707,889** | **4,830,063** | **76,202,008** | **3,402,394** | **(324,196)** | **4,288,595** | **2,210,560,740** | **4,534,943,971** |

**குறிப்பு A: (நிதிக் கூற்றுக்கள் 2023)**

| | |
|---|---|
| 1. 2022 ஆம் ஆண்டில் ஏயீபு அச்சக இருப்புக்களை முடிவுறுத்தலை பிழையாகப் பதிவு செய்ததைத் திருத்துதல் | (204,862) |
| 2. இனங்கண்டுகொள்ளப்படாத தக்கவைப்பு மீதி 2015.01.01 திகதிக்கு முந்தைய காலத்திற்குரியதாகும் | 6,281,965 |

05 முதல் 22 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 23 முதல் 39 வரையான பக்கங்களின் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் கட்டாயப் பகுதியாகும்.

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**
**2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று**
**(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)**

| | குறிப்புக்கள் | 2024 ரூபா | 2023 (மீளக் குறிப்பிடப்பட்டது) ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **ஆண்டிற்கான மொத்த மேலதிகம்** | | (103,407,441) | (65,562,142) |
| **நிதி அல்லாத உருப்படிளுக்கான சீர்படுத்தல்கள்** | | | |
| முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்கள் | | - | 6,097,603 |
| தேய்மானம் | | 229,948,322 | 232,011,206 |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனை காரணமாக ஏற்பட்ட நட்டம் | | 6,732 | 95,017 |
| அருவச் சொத்துக்களுக்கான பெறுமதி தேய்மானம் | | 770,938 | 779,415 |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான ஏற்பாடு | | 80,845,334 | 96,401,950 |
| **தொழிற்பாட்டு மூலதன சீர்படுத்தலுக்கு முன்னர் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட காசு** | | **208,163,884** | **269,823,049** |
| **தொழிற்பாட்டு மூலதன சீர்படுத்தல்கள்** | | | |
| இருப்புக்கள் அதிகரிப்பு / (குறைவு) | | 851,377 | 1,313,720 |
| பெறுவனவுகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 11,168,341 | 7,094,093 |
| குறுகிய கால முதலீடுகள் அதிகரிப்பு / (குறைவு) | | (8,913,249) | (46,774,037) |
| முன் செலுத்துகைகள் அதிகரிப்பு / (குறைவு) | | 1,086,534 | 41,411,267 |
| முற்பணம் அதிகரிப்பு / (குறைவு) | | (91,372) | 31,265 |
| ஊழியர் கடன்கள் அதிகரிப்பு / (குறைவு) | | 1,682,169 | 1,298,239 |
| வெளித் தரப்பினரின் வைப்பு அதிகரிப்பு / (குறைவு) | | (520,000) | (200,000) |
| செலுத்த வேண்டிய ஏனைய செலவுகள் அதிகரிப்பு / (குறைவு) | | (31,719,782) | (100,936,453) |
| வைப்புக்கள் மற்றும் பிடிமானத் தொகை அதிகரிப்பு / (குறைவு) | | (10,728,969) | (43,146,764) |
| குறுகிய கால ஒதுக்கீடுகள் அதிகரிப்பு / (குறைவு) | | (2,598,360) | 1,300,000 |
| அட்டுறு செலவுகள் அதிகரிப்பு / (குறைவு) | | 34,595,848 | 6,078,981 |
| ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் அதிகரிப்பு / (குறைவு) | | 391,655 | (1,059,141) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பிறப்பிக்கப்பட்ட காசு** | | **203,368,078** | **136,234,219** |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் | | (15,745,373) | (27,577,707) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளினூடான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **187,622,699** | **108,656,512** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மீதான காசுப் பாய்ச்சல்** | | | |
| கொள்வனவு | | (33,279,440) | (97,171,176) |
| நிலையான சொத்துக்களை புறத்தொதுக்குதல் மூலமான வருமானம் | | - | - |
| அருவச் சொத்துக்களை கையகப்படுத்தல் | | - | - |
| மூலதன மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை கையகப்படுத்தல்/(பரிமாற்றல்) | | - | - |
| மூலதன முற்பணம் கையகப்படுத்தல்/(பரிமாற்றல்) | | - | 6,733,838 |
| முதலீடுகள் | | - | 5,632,847 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(33,279,440)** | **(84,804,491)** |
| **நிதியீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| விசேட நிதியம் அதிகரிப்பு / (குறைவு) | | 4,538,549 | 5,378,321 |
| பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்ட நிதியம் அதிகரிப்பு / (குறைவு) | | 12,490 | (22,297) |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி பிரிவு நிதியம் அதிகரிப்பு / (குறைவு) | | (560,343) | (748,490) |
| UBL நிதியம் அதிகரிப்பு / (குறைவு) | | | 2,653,962 |
| VAPA Press நிதியம் அதிகரிப்பு / (குறைவு) | | | - |
| VAPA TV நிதியம் அதிகரிப்பு / (குறைவு) | | | (164,353) |
| **நிதியீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **3,990,696** | **7,097,143** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய குறைவு** | | **158,333,955** | **30,949,164** |
| **ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | 12 | 53,725,341 | 22,776,177 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | 12 | **212,059,296** | **53,725,341** |

## கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
## 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

**1. பொது**

**1.1 அறிக்கைப்படுத்தப்படும் நிறுவனம்**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும். தலைமை நிர்வாக அலுவலகம் மற்றும் பிரதான அலுவல்கள் கொழும்பு 07, இலக்கம் 21, அல்பர்ட் கிரசன்ட் எனும் முகவரியில் மேற்கொள்ளப்படுகின்றன.

**1.2 பிரதான அலுவல்கள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை**

இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு மட்டங்களில் அழகியற்கலை கற்கை துறையின் கோட்பாட்டு மற்றும் செய்முறை ஆகிய பிரிவுகளின் கீழ் உயர் கல்வியைப் பெற்றுக்கொடுத்தல், அந்தத் துறையின் அறிவு மற்றும் ஆற்றல்களை ஏனையோருக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அந்தத் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பன இந்தப் பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாடுகளாகும். பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் பாடநெறிகளை சிறப்பான வகையில் நிறைவு செய்யும் மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதும் இந்தப் பல்கலைக்கழகத்தின் பிரதான அலுவலாகும்.

**1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட திகதி**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2025 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி நிர்வாக சபையின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**1.4 அறிக்கைப்படுத்தும் காலப் பகுதி**

பல்கலைக்கழகத்தின் நிதிசார் கால எல்லை 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியாகும்.

**2. பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்**

**2.1 இணக்கப்பாடு சம்பந்தமான கூற்று**

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றல் பற்றிய கூற்று மற்றும் குறிப்புக்களைக் கொண்டதாகும்.

**2.2 கணக்கீட்டின் அடிப்படை**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியிலான கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கணக்கிடுதல் தவிர நிதிக் கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகள் சீர்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

**2.3 தகவல்களை ஒப்பீடு செய்தல்**

நடப்பு ஆண்டின் பெறுமதியை முன்வைக்கும்போது பல்கலைக்கழகத்தினால் பின்பற்றப்பட்ட அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகளும் முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இயைந்துள்ளன. தேவையான சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டுப் பெறுமதிகள் நடப்பு ஆண்டின் மாற்றங்களுடன் சீர்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளது.

**2.4 பொருட்கள் மற்றும் திரள்வு**

அனைத்து அளவு சார்ந்த சமமான உருப்படிகள் (பொருட்கள்) நிதிக் கூற்றுக்களில் தனித் தனியாக முன்வைக்கப்பட்டுள்ளது. அளவு சார்ந்தல்லதாயின் பொருந்தாத தன்மை அல்லது செயற்படு நிலையிலுள்ள உருப்படிகள் தனித் தனியாக முன்வைக்கப்பட்டுள்ளது.

**2.5 ஈடு செய்தல்**

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) ஊடாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் ஈடு செய்யப்பட்டு பதிவழிப்புச் செய்யப்படவில்லை.

**2.6 தொடர்ச்சியான இருப்பு**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு தொடர்ச்சியான இருப்பொன்று உள்ளதாக கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபைக்கு எதிர்பார்க்க முடியுமான எதிர்காலத்திற்குப் போதுமானளவில் வளங்கள் இருக்கின்றதென்ற நியாயமான எதிர்பார்ப்பொன்று உண்டு. எதிர்காலம் சம்பந்தமான அனைத்துத் தகவல்களையும் கவனத்திற்கொண்டு பல்கலைக்கழகத்தை கலைத்து விடுதல், செயற்பாடுகளை நிறுத்தி விடுதலை முன்னறிக்கவில்லை. நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான இருப்பு எனும் அடிப்படை பின்பற்றப்பட்டுள்ளது.

**2.7 அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்**

அறிக்கைப்படுத்தும் திகதியின் பின்னரான அனைத்து நிகழ்வுகள் சம்பந்தமாகவும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களில் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சீர்படுத்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**2.8 பயன்பாட்டு நாணயம் மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்**

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகளின் பெறுமதி பல்கலைக்கழகத்தின் பொருளாதார சூழலில் பயன்படுத்தப்படும் நாணய அலகுகளிலேயே அளவிடப்படுகின்றது (பயன்பாட்டு நாணயம்). இந்த நிதிக் கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு நாணயம் மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணய அலகான ‘இலங்கை ரூபாவில்’ (ரூ.) தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.9 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீதிகள்**

வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் அந்தத் தினங்களில் நிலவும் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்தலின் பெறுபேறாக வெளிநாட்டுச் செலாவணி இலாபம், நட்டம் மற்றும் வெளிநாட்டு நாணயத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஆண்டிறுதியில் வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின் மாற்றல் நிதி செயலாற்றுகை கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

**2.10 கிட்டிய பெறுமதி**

இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்கள் ஊடாக அனுமதிக்கப்பட்டுள்ள பிரகாரம் வேறு வகையில் குறிப்பிடாதிருப்பின் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொகைகள் கிட்டிய ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.11 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (PPE)**

**2.11.1** சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள், கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் திரண்ட தேய்வு மற்றும் திரண்ட சேதங்களுக்கான நட்டம் குறைக்கப்பட்ட பெறுமதிக்கு காண்பிக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்படும் சதவீதங்களின் கீழ் இலகு வழியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 1995.10.05 ஆம் திகதிய 649 ஆம் இலக்க சுற்றறிக்கமைய தேய்மானங்கள் அறவிடப்படும்.

| சொத்து வகைகள் | தேய்மான வீதம் |
|---|---|
| கட்டிடங்கள் | 5% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 10% |
| பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| நூலக புத்தகங்கள் மற்றும் பருவ கால சஞ்சிகைகள் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| விளையாட்டு உபகரணங்கள் உள்ளடங்கலாக ஆய்கூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள் | 20% |

விளையாட்டு உபகரணங்கள் ஆரம்பத்திலிருந்தே அலுவலக உபகரணங்கள் பேரேட்டுக் கணக்கின் கீழ் பதியப்பட்டு மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தேய்மானத்திற்குட்படுத்தியமையினால் அலுவலக உபகரணங்களுக்கு 20% தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு உபகரணங்களின் அளவு தொடர்பான தகவல்கள் பயன்பாட்டை இலகுபடுத்துமுகமாக தனியான பேரேட்டுக் கணக்கொன்றில் பதியப்பட்டுள்ளதுடன், 1995.10.05 ஆம் திகதிய 649 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் விளையாட்டு உபகரணங்களுக்கான தேய்மான வீதம் குறிப்பிடப்படாமையின் காரணமாக அலுவலக உபகரணங்களுக்கான 20% தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது.

09/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தேய்மான வீதங்கள் மாற்றப்பட்டதுடன், விளையாட்டு உபகரணங்களுடன் தொடர்பான புதிய வீதம் 25% ஆகும்.

மாற்று வழிமுறையானது சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மீள் மதிப்பீட்டு மாதிரி ஏற்கனவே பயன்படுத்திக்கொள்ளப்பட்டதுடன், அதனை கிரய மாதிரிக்கு மாற்றப்பட்டது. மாற்று வழிமுறை மாற்றமடைவதனால் மீண்டும் கவனத்திற்கொள்ளப்படுவதற்கு தீர்மானிக்கப்படவில்லை.

**2.11.2 <u>சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்தல்</u>**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில உருப்படிகள் 2010.06.30 ஆம் திகதியன்று மீள் மதிப்பீட்டு பெறுமதியின் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**<u>காணிகள் மற்றும் கட்டிடங்கள்</u>**

அனைத்துக் காணிகளும் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. 2010.06.30 ஆம் திகதியன்று 10 வருடங்களிலும் அதிகமான பழைமை வாய்ந்த கட்டிடங்கள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மதிப்பீட்டாளர்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவரால் இந்த மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி அமைச்சிடமிருந்து இரண்டு கட்டிடங்கள் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றன. அந்தப் பெறுமதியும் 2017 நவம்பர் 01 ஆம் திகதி முதல் பெறுமதி தேய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

கட்புலக் கலை பீடத்திற்கான கட்டிடங்கள் மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு மற்றும் இசை பீடத்திற்கான கட்டிடங்கள் மற்றும் பொது வசதிகள் முறையே 2021.12.15 ஆம் திகதி மற்றும் 2022.03.31 ஆம் திகதிகளில் நிறைவு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணியிலிருந்து மொத்த நிர்மாணச் செலவுகள் மூலதனச் சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டு சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தேய்மானத்திற்குட்படுத்தப்பட்டுள்ளது. (PPE - குறிப்பு 10)

| | ரூபா. |
|---|---|
| கட்புலக் கலை பீடத்திற்கான கட்டிடங்கள் மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு | 404,320,716.00 |
| இசை பீடத்திற்கான கட்டிடங்கள் மற்றும் பொது வசதிகள் | 565,651,995.00 |
| **மொத்தச் செலவு** | **969,972,712.00** |

2022.12.31 ஆம் திகதியன்று மேற்கூறப்பட்ட கட்டிடங்களுக்கான நிலுவைத் தொகையான ரூ. 124,079,264.99 மூலதனமாக்கப்பட்டுள்ளது. மேலும், செலுத்தப்படாத கொடுப்பனவுகளுக்கான வட்டி உரிமைக்கோரலின் தற்செயலான பொறுப்பொன்று உள்ளது. கொடுப்பனவை மேற்கொள்ளும்போது மூலதனமாக்கப்படும்.

**<u>நூல்கள் மற்றும் பருவ கால சஞ்சிகைகள்</u>**

2005.12.31 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையிலேயே மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| **நூல்கள் கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதி** | **மீள் மதிப்பீட்டு அடிப்படை** |
|---|---|
| 1999.01.01 – 2005.12.31 | செலவின் 80% |
| 1990.01.01 – 1998.12.31 | செலவின் 70% |
| 1989.12.31 திகதிக்கு முன்னர் | செலவின் 60% |

தகைமை பெற்ற சுயாதீன ஆலோசகரொருவர் மற்றும் பட்டயக் கணக்காளர் ஒருவர் இணைந்து இந்த அலுவலை மேற்கொண்டுள்ளனர்.

**<u>தளபாடங்கள், பொருத்துகைகள் மற்றும் பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்</u>**

கிரயத்தை இனங்கண்டுகொள்ள முடியுமான கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

| **கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதி** | **மீள் மதிப்பீட்டு அடிப்படை** |
|---|---|
| 1991.01.01– 2000.12.31 | செலவின் 80 % |
| 1990.12.31 திகதிக்கு முன்னர் | செலவின் 60 % |

**<u>அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள்</u>**

கிரயத்தை இனங்கண்டுகொள்ள முடியுமான கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

| கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதி | மீள் மதிப்பீட்டு அடிப்படை |
|---|---|
| 1996.01.01 – 2005.12.31 | செலவின் 75 % |
| 2005.12.31 திகதிக்கு முன்னர் | செலவின் 50 % |

கிரயத்தை இனங்கண்டுகொள்ள முடியாத தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள், பொறித் தொகுதி மற்றும் இயந்திர சாதனங்கள், அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள் மதிப்பீடு செய்ப்பட்ட நிகர கைத்தேறிய பெறுமதிக்கமைய நியாயமான பெறுமதியின் (ENRV) அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அலுவலை பட்டயக் கணக்காளர் ஒருவர் மற்றும் தகைமை பெற்ற சுயாதீன ஆலோசகர் ஒருவர் மற்றும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

**<u>மோட்டார் வாகனங்கள்</u>**

அனைத்து மோட்டார் வாகனங்களினதும் 2024.02.15 ஆம் திகதியன்று மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 64,100,000.00 எனக் காண்பிக்கப்பட்டுள்ளது. சந்தைப் பெறுமதி மற்றும் பௌதிக சோதனையின் அடிப்படையில் நியாயமான பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. Auto Mobile Association of Ceylon நிறுவனத்தினால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

WP KJ – 3863 ஆம் இலக்க டொயோட்டா லேண்ட் குரூசர் ப்ராடோ (2010) ஜீப் வண்டி நிதி, பொருளாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பேரவையினால் இதன் உரிமையை கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒட்டோ மொபைல் அசோஷியேசன் ஒப் சிலோன் Auto Mobile Association of Ceylon) மதிப்பீடு செய்யப்பட்டது. ஜீப் வண்டியின் பெறுமதி ரூபா 21,000,000.00 பெறுமதி குறிப்பிடப்பட்டு ஜீப் வண்டி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.11.3** **<u>முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்கள் (பூச்சிய மதிப்புச் சொத்துக்கள்)</u>**

சொத்தொன்றின் மீதமுள்ள பெறுமதி மற்றும் பயன்மிக்க ஆயுட் காலத்தை குறைந்தது அனைத்து வருடாந்த அறிக்கையிடல் திகதியன்றும் மீளாய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளதுடன், எதிர்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளைப் பார்க்கிலும் மாற்றமடைந்திருப்பின், இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 3 இற்கமைய (SLPSAS - 3) கணக்கீட்டு மதிப்பீட்டின் வேறுபாடொன்றாக மாற்றங்கள் கணக்கிடப்படும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் (SLPSAS - 7) 65 ஆவது பந்திக்கமைய

"கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகளின் வேறுபாடுகள்" பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2011/03 மற்றும் 2014/03 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் பல்கலைக்கழக முறைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விபரமான கணக்காய்வறிக்கையின் "1.4.2 - கணக்கீட்டு நியமம்" இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இந்த நியமத்திற்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலம் சம்பந்தமாக கணக்குகள் மதிப்பீட்டை மாற்றியமைத்தமையின் காரணமாக மதிப்பீட்டு ரீதியிலான பிழைகள் ஏற்பட்டுள்ளது. இது தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் ஆண்டுதோறும் முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்யாததன் பெறுபேறாகும்.

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் (SLPSAS - 7) 91 ஆவது பந்திக்கமைய 2023.12.31 ஆம் திகதியாகும்போது முழுமையாக தேய்மானத்திற்குட்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பொழிப்பு ரூபா 742,035,590.45 தொகை வெளிப்படுத்தப்படுகின்றது. பூச்சியப் பெறுமதி சொத்துக்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வகை இல. | சொத்து வகைகள் | உண்மையான செலவு |
|---|---|---|
| 03 | அலுவலக உபகரணங்கள் | 240,485,750.38 |
| 04 | பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 1,908,694.89 |
| 05 | ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 334,430,419.84 |
| 06 | தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 85,352,621.41 |
| 07 | நூலகப் புத்தகங்கள் | 55,194,159.53 |
| 09 | விளையாட்டு உபகரணங்கள் | 4,748,390.00 |
| 10 | மென்பொருள் மற்றும் பெக்கேஜ் | 360,000.00 |
| 14 | பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள் | 19,555,554.40 |
| | **மொத்தம்** | **742,035,590.45** |

பூச்சியப் பெறுமதி சொத்துக்களுக்களின் பெறுமதி ரூ. 742,035,590.45 ஆகுமென்பதோடு, மாற்று வழி முறையொன்று பின்பற்றப்படுகின்றது.

**2.11.4** 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பூச்சியப் பெறுமதி சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தேய்மானப் பெறுமதி ரூபா 16,157,917.84 ஆக இருந்ததென்பதுடன், அது 2018 ஆம் ஆண்டில் கணக்குப் பதிவேடுகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது

| சொத்து வகைகள் | தேய்மானம் (ரூபா) |
|---|---|
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 10,760,353.72 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 805,316.93 |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 874,428.14 |
| பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 21,995.45 |
| கட்டிடங்கள் | 194,260.66 |
| பட்டதாரி அங்கிகள் மற்றும் நடன ஆபரணங்கள் | 1,205,076.96 |
| அலுவலக உபகரணங்கள் | 2,296,486.10 |
| | **16,157,917.84** |

நிலையான சொத்துக்கள் பதிவேடு இரண்டு கணனிமயப்படுத்தப்பட்ட பொதிகளில் (computerized packages) பேணி வரப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் தொடர்பான தரவுகள் 2015 ஆம் ஆண்டு வரை ஒரு தொகுப்பில் (பழைய பொதி) குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு முதல் தரவுகள் புதிய தொகுப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய தொகுப்பிலுள்ள அனைத்துத் தரவுகளும் 2018 இல் புதிய தொகுப்பொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், ஆரம்ப கொள்வனவுத் திகதியிலிருந்து அது செயற்படுத்தப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட தேய்மானங்கள் மீதும் இது பாதிப்புச் செலுத்துகின்றது.

**2.11.5** செலவினப் பெறுமதியானது அலுவலக உபகரணங்கள் முதல் விளையாட்டு உபகரணங்கள் வரை மாற்றப்பட்ட விளையாட்டு உபகரணங்களின் ரூ. 714,167/= மற்றும் 2020 ஆம் ஆண்டில் அலுவலக உபகரணங்களின் ஒட்டுமொத்தத் தேய்மானத்திலிருந்து விளையாட்டு உபகரணங்களின் ஒட்டுமொத்தத் தேய்மானம் வரை மாற்றப்படுகின்றது.

**2.11.6** நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் (FAR) சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 07 பிரிவுகளின் கீழ் 12,570 நிலையான சொத்துக்களுக்கு ரூ.16,061,374 பயன்படுத்த முடியாத நிலையான சொத்துக்களை அகற்றுவதில் ஏற்பட்ட இழப்புகள் 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் இதன் ஆரம்பப் பெறுமதி ரூ.285,407,719.33 ஆகுமென அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2023 இறுதி கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையினால், அகற்றப்பட்ட 12,570 நிலையான சொத்துக்கள் 2024 வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு சபையினால் சோதனையிடப்பட்டு சரிபார்க்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட 12,570 எண்ணிக்கையிலான அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் பகுப்பாய்வின் சுருக்கம் நிதிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு பின்வரும் தீர்மானங்களுக்காக பேரவையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1. 2023 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து (FAR) பின்வரும் பொருட்கள் அகற்றப்பட்டது.

| உருப்படி வகை | உருப்படிகளின் எண்ணிக்கை | அசல் பெறுமதி | புத்தக பெறுமதி | காரணங்கள் |
|---|---|---|---|---|
| புறத்தொதுக்குதல் | 295 | 1,489,582.50 | 10,872.16 | 2024 வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு சபை (BOS-2024) இந்த உருப்படிகள் அப்புறப்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டது. |
| விளையாட்டு உபகரணங்கள் | 600 | 1,446,485.13 | - | இவை அனைத்தும் விளையாட்டு உபகரணங்கள் (உ-ம்: டென்னிஸ் பந்து, பேட்மிண்டன் ஷட்டில் - கோக் (Shuttle-cock) என்பன) ஆகுமென்பதோடு குறைந்த ஆயுளைக் கொண்டவை. பௌதிக ரீதியாக கிடைக்கவில்லை. 6 ஆண்டுகளுக்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்டதுடன் புத்தகப் பெறுமதி பூச்சியமாகும். |
| நுகர்வுப் பட்டியல் | 101 | 70,700.00 | - | இவை அனைத்தும் பறைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பறைத் தோல்களாகும். குறைந்த ஆயுளைக் கொண்டவை. பௌதிக ரீதியாக கிடைக்கவில்லை. 6 ஆண்டுகளுக்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்டதுடன் புத்தகப் பெறுமதி பூச்சியமாகும். |
| இலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் | 111 | 25,875.00 | - | 110 பொருட்களும் சிறிய பெறுமதியைக் கொண்டுள்ள (ரூ.500.00 க்கும் குறைவான) உருப்படிகளாகும். அவற்றில் 96 பொருட்கள் ஆடை உபகரணங்கள் (உ-ம்: பச்சட்டம், தாமரை இதழ்கள், பூனா நூல், உரமால பட்டி போன்றவை) மற்றும் 14 சாதாரண கதிரைகளுமாகும். குறைந்த ஆயுளைக் கொண்டவை. பௌதிக ரீதியாக கிடைக்கவில்லை. சில 11 ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், சில 6 ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். 1 உருப்படி மேசை மின் விசிறியாகுமென்பதோடு அது நட்ட உருப்படியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. புத்தக மதிப்புகள் பூஜ்ஜியமாகும். புத்தகப் பெறுமதி பூச்சியமாகும். |
| மென்பொருள் மற்றும் கணினி துணைப் பாகங்கள் | 24 | 540,282.30 | 81,944.04 | மென்பொருள் உரிமைப் பத்திரம் 1 வருட காலத்திற்கு செல்லுபடியாகுமென்பதோடு இவை காலாவதியாகியுள்ளன. இவை காலாவதியாகிவிட்டன. கணினி பாகங்கள் நிலையான சொத்துக்கள் அல்ல. |
| மின் உபகரணங்கள் | 26 | 106,040.30 | 2,198.98 | மின் உபகரணங்கள் நிலையான சொத்துக்கள் அல்ல. |

| | | | | |
|---|---|---|---|---|
| அடையாளம் காணப்படாத பொருட்கள் - ஆரம்பப் பெறுமதி ரூ ரூ.5000/=க்கு சமம் அல்லது கீழே | 4,169 | 9,290,739.46 | - | இவை ஒவ்வொன்றின் விலை ரூ.5000 க்கும் குறைவாகவும், புத்தக பெறுமதி பூச்சியமாகவும் உள்ளன. இவற்றில், 3085 உருப்படிகள் 11 ஆண்டுகளுக்கு முன்னரும், 1055 உருப்படிகள் 6 ஆண்டுகளுக்கு முன்னரும், 31 உருப்படிகள் 5 ஆண்டுகளுக்கு முன்னரும் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். பெரும்பாலானவை நிலையான சொத்துக்களின் இயல்புடையவை அல்ல. குறைந்த ஆயுளைக் கொண்டவையாகும். |
| | **5,326** | **12,969,705.00** | **95,015.00** | |

1. 2023 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் (FAR) மீண்டும் சேர்ப்பதற்கு பௌதிக ரீதியாக பெற்றுக்கொள்ள முடியுமென உறுதிப்படுத்தப்பட்ட உருப்படிகள் மற்றும் பௌதிக ரீதியாக பெற்றுக்கொள்ள முடியுமென உறுதிப்படுத்தப்படாத உருப்படிகள், பல்கலைக்கழகத்தால் மொத்த FAR இன் தொடர்ச்சியான சரிபார்ப்பு செயல்முறை ஊடாக பௌதிக ரீதியாக பெற்றுக்கொள்ள முடியுமென உறுதிப்படுத்தப்படும் வரை அல்லது அகற்றப்படும் வரையான உருப்படிகளாகும். அதன்படி, 2023 நிதிக் கூற்றில் தேய்மானத்தை பின்னோக்கி கருதப்பட்டு தயாரிக்கப்படல் வேண்டுமென்பதோடு, 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்கு மீண்டும் குறிப்பிடப்படல் வேண்டும்.

| உருப்படி வகை | குறிப்பு | மொத்த உருப்படிகளின் எண்ணிக்கை | அசல் பெறுமதி | புத்தக பெறுமதி | உருப்படிகளின் எண்ணிக்கை | அசல் பெறுமதி | புத்தக பெறுமதி பூச்சியம் |
|---|---|---|---|---|---|---|---|
| பெற்றுக்கொள்ளக்கூடிய மாற்றல்கள் | 1 | 1682 | 68,492,734.19 | 6,447,830.96 | 1070 | 41,322,636.42 | |
| | | | | | 612 | 27,170,097.77 | 6,447,830.96 |
| விசிறிகள் இருப்புப் பொருள் அல்லாத உருப்படிகள் (பொருத்துதல்கள், தொலைத்தொடர்பு உருப்படிகள், இணையம் மற்றும் வலையமைப்புடன் தொடர்புடைய உருப்படிகள்) | 2 | 470 | 13,570,355.69 | 379,834.22 | 302 | 12,065,841.61 | |
| | | | | | 168 | 1,504,514.08 | 379,834.22 |
| அடையாளம் காணப்படாத உருப்படிகள் - ரூ. 5000/= க்கு மேல் ஆரம்ப பெறுமதி | 3 | 701 | 6,946,961.31 | 548,296.01 | 395 | 2,953,141.51 | |
| | | | | | 306 | 3,993,819.80 | 548,296.01 |
| பெற்றுக்கொள்ளக்கூடிய மாற்றல்கள் | 4 | 116 | 16,225,438.36 | 3,455,540.68 | 70 | 6,602,481.10 | |
| | | | | | 46 | 9,622,957.26 | 3,455,540.68 |
| விசிறிகள் இருப்புப் பொருள் அல்லாத உருப்படிகள் (பொருத்துதல்கள், தொலைத்தொடர்பு உருப்படிகள், இணையம் மற்றும் வலையமைப்புடன் தொடர்புடைய உருப்படிகள்) | 5 | 3125 | 164,249,774.04 | 4,875,857.66 | 2670 | 145,443,360.35 | |
| | | | | | 455 | 18,806,413.69 | 4,875,857.66 |
| அடையாளம் காணப்படாத உருப்படிகள் - ரூ. 5000/= க்கு மேல் ஆரம்ப பெறுமதி | 6 | 1150 | 2,952,751.05 | 258,972.04 | 1150 | 2,952,751.05 | 258,972.04 |
| | | **7244** | **272,438,014.64** | **15,966,331.57** | **7244** | **272,438,014.64** | **15,966,331.57** |

**குறிப்புக்கள்:**

1 - இந்த உருப்படிகளின் கிடைக்கும் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2 - இந்த உருப்படிகளின் கிடைக்கும் தன்மை தொடர்ச்சியான சரிபார்ப்பு செயல்முறை மூலம் உறுதிப்படுத்தப்படும்.

4 - இந்த பொருத்துகைகள் அமையப்பெற்றுள்ள கட்டிடத்திற்குப் பொருத்தப்பட்டுள்ளதுடன், கிடைக்கும் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

3, 5 மற்றும் 6 - பௌதிக ரீதியிலான நிலைத்திருப்பு / இல்லாமை தொடர்ச்சியான சரிபார்ப்பு செயல்முறை மூலம் உறுதிப்படுத்தப்படும்.

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள அனைத்து சொத்துக்களும் துறைகள், பிரிவுகள், அலகுகளுடன் சரிபார்க்கப்பட்டுள்ளன.

**2.12** <u>மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள்</u>

அறிக்கைப்படுத்தப்படும் திகதியன்று நிறைவு செய்யப்படாத சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான (PPE) மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் எனக் குறிப்பிடப்படுவதுடன், மூலதனப் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை பயன்படுத்தும்போது சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்படும்.

நிர்மாணப் பணிகளுக்கான மொத்த செலவான ரூ. 969,972,712.00 தொகையானது 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் கணக்கிலிருந்து கட்டிடச் சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் பிழையாக அறிக்கைப்படுத்தப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் உருப்படிக்கான மொத்தத் தொகையான ரூ. 23,286,880.00 தொகை 2022 ஆம் ஆண்டின் மறுசீரமைக்கப்பட்ட மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் கணக்கிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

பின்வரும் உருப்படிகளுடன் தொடர்புடைய ரூ.23,286,880.00 மொத்தத் தொகை 2022 ஆம் ஆண்டில் மீண்டும் வெளியிடப்பட்ட மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் கணக்கிலிருந்து, நீக்கப்பட்டுள்ளது, இது 2021 ஆம் ஆண்டில் பிழையாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

| | **ரூபா.** |
|---|---|
| இ - முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தல் | 10,789,000.00 |
| உட்கட்டமைப்பு மெய்நிகராக்கம் மற்றும் காப்புப் பிரதியை செயற்படுத்தல் | 10,982,953.00 |
| ஹோட்டன் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கான அடிப்படை வலையமைப்பு உபகரணங்கள் | 1,514,925.87 |
| **மொத்தம்** | **<u>23,286,880.00</u>** |

## 2.13 அருவச் (புலப்படாத) சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்க முடியுமான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் தொழில் முயற்சிக்குள் வர முடியுமாக இருப்பதுடன், சொத்துக்களின் கிரயத்தை உரிய முறையில் அளவிட முடியுமாக இருக்கும்போது கணனி மென்பொருள்கள் (சொப்ட்வெயார்ஸ்) அருவச் சொத்துக்களாக இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளது. கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து குறைந்த திரட்டிய பெறுமதி தேய்வு மற்றும் திரட்டிய சேதம் நட்டமாக இனங்கண்டுகொள்ளப்படும். இந்தக் கிரயம் அவர்களது மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட் காலத்தின் அடிப்படையில் தேய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

## 2.14 நிதிச் சொத்துக்கள்

**முதலீடுகள்**

முதலீடுகள் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவதனைக் குறிக்கின்றது. இந்த முதலீடுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 (SLFRS 09) இற்கமைய கணக்கில் பதியப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுதலானது SLFRS 09 இற்கமைய பெறுமதி தேய்மானதக் கிரயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை முதலில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதுடன் பின்னர் SLFRS 09 இற்கமைய பயனுள்ள வட்டி வீதத்தினைப் (effective interest rate) பயன்படுத்தி நியாயமான பெறுமதியிலும் குறைந்த பெறுமதி தேய்வின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது.

## 2.15 நடைமுறைச் சொத்துக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வகையீடு செய்யப்பட்டுள்ள நடைமுறைச் சொத்து என்பது பல்கலைக்கழகத்தின் பொதுவான செயற்பாட்டு சுற்றினுள் அடைந்துகொள்வதற்கு அல்லது பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்ப்பவைகளாக இருப்பதுடன், அறிக்கைப்படுத்தும் தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் கைத்தேறிய காசு அல்லது காசுக்குச் சமமானவைகளாகும்.

## 2.16 2.16 இருப்புக்கள்

இருப்புக்கள், கிரயத்திற்கமைய குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முதலில் வந்தது முதலில் செல்லல் (FIFO) அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இருப்பானது பிரதானமாக எழுது பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களை உள்ளடக்கியதாக இருக்கும். பொருட்கள் இருப்பு பயன்படுத்துவதற்காகவன்றி மீள விற்பனை செய்வதற்கில்லை.

இருப்புப் பொருட்களில் மெதுவாக அசையும் உருப்படிகளின் (உ- ம்: புத்தகங்கள்) பெறுமதி ரூ. 1,096,446.27 மற்றும் அசையாத உருப்படிகளின் பெறுமதி ரூ. 421,784.00 நிதி ஒழுங்குவிதி 102 மற்றும் அரச துறை கணக்கீட்டு நியமம் 9 இற்கமைய பிரதான களஞ்சியசாலைகளின் வெளியீடுகளிலிருந்து பெறுமதியைக் குறைக்கும் அல்லது நட்டம் ஏற்படக்கூடிய நிகழ்தகவு இல்லாமையினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

VAPA அச்சகத்தின் புத்தகங்கள் இருப்பு விலைப் பெறுமதிக்கமைய இருப்புப் பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படுகின்றது. விற்பனை செய்து பணத்தை ஈட்டும் நோக்கில் VAPA அச்சகத்தின் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**2.17 2.17 ஆளணிக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்**

ஆளணிக்கான முற்பணங்கள் மற்றும் பெறப்பட வேண்டிய காசு, பண்டிகைக்கால முற்பணம் மற்றும் விசேட முற்பணம் (புத்தகங்கள் படிகள்) உள்ளடக்கப்படும்.

**2.18 காசு மற்றும் காசுக்குச் சமமானவை**

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்றால் கையிருப்புக் காசு, தேவை வைப்புக்கள் மற்றும் குறுகிய கால திரவநிலை முதலீடுகள் அதாவது இலகுவாக காசாக மாற்றிக்கொள்ள முடியுமானவைகளாக இருப்பதுடன் சிறியளவிலான ஆபத்துக்குட்படக்கூடியவைகள் என வரைவிலக்கணப்படுத்தலாம். காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பதற்கு கையிருப்புப் பணமும் வங்கியிலுள்ள வைப்பும் உள்ளடங்கும். கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாத காலம் அல்லது அதனிலும் குறைவான குறுகிய கால முதிர்ச்சியுடனான முதலீட்டுப் பணமும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கருதப்படும்.

**2.19 ஊழியர் அனுகூலங்கள் - வரையறை செய்யப்பட்டுள்ள அனுகூலத் திட்டமிடல்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 இன் பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தை நிறைவு செய்யும் அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கப்படும். 2019.06.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்ட 05/2019 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய கல்விசார் ஆளணிக்காக செலுத்தப்படும் மாதாந்த இழப்பீட்டுப் படியை (MCA) பணிக்கொடை செலுத்துவதற்காக கணக்கிடுவதற்காக கவனத்திற்கொள்ளப்பட்டது.

## 2.20 பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள்

**நடைமுறைப் பொறுப்புக்கள்**

நடைமுறைப் பொறுப்புக்களை அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிதி ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக பல்கலைக்கழகத்திற்குரிய கடப்பாடுகள் (சட்ட ரீதியிலான மற்றும் ஆக்கபூர்வமான) காணப்படும்போது நிதி ஏற்பாடு இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பொருளாதார ரீதியிலான அனுகூலங்களைக் கொண்ட வளங்கள் வெளிச் செல்லல் வேண்டுமென்பதுடன் நம்பகமான மதிப்பீடொன்றை தயாரிக்க முடியும்.

**நிச்சயமற்ற பொறுப்புக்கள் மற்றும் நிச்சயமற்ற சொத்துக்கள்**

நிச்சயமற்ற பொறுப்பு என்றால், செயற்பாட்டுக் கட்டுப்பாட்டை விஞ்சிச் சென்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் அல்லது தொடர்ச்சியாக நிலவுதல் அல்லது அது ஏற்பட முடியாதென்பதனால் இனங்கண்டுகொள்ளப்படாத நிகழ்கால பொறுப்பொன்றான கடந்த கால நிகழ்வுகளினூடாக எழும் பொறுப்பாகும். பொறுப்பை தீர்ப்பதற்காக வளங்கள் உள்வரல் அவசியமாகும்.

நம்பிக்கையுடன் அளவிட முடியாத பொறுப்பொன்றையுடைய மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலும் தொடர்ச்சியான பொறுப்பொன்றாக இனங்கண்டு கொள்ளப்படாதிருப்பதுடன் நிதிக் கூற்றில் அதன் இருப்பு வெளிப்படுத்தப்படும்.

நிச்சயமற்ற பொறுப்பு என்றால், பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டை விஞ்சிச் சென்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் அல்லது நிகழ்வுகளினூடாக எழக்கூடிய சொத்தாகும். பல்கலைக்கழகத்தின் நிச்சயமற்ற சொத்துக்கள் இனங்கண்டுகொள்ளப்படாதிருப்பதுடன், பொருளாதார அனுகூலங்கள் உள்வருவதற்கு வாய்ப்பிருப்பினும் நிச்சயமற்ற அதன் இருப்பை வெளிப்படுத்துகின்றது.

## 2.21 வருமானங்களை இனங்காணல்

அரசாங்கத்தின் மீண்டெழும் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது. மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்படும்போதே வருமானமாக கணக்கீடு செய்யப்படுகின்றது. முதலீட்டின் அடிப்படையிலான வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுய நிதி அடிப்படையில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணங்கள் உரிய பிரகாரம்

நிதிக் கூற்றுக்களில் பாடநெறியின் காலத்தை அடிப்படையாகக்கொண்டு நீக்கப்படும்.

**நிதிசார் வருமானம்**

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) இல்லாமையின் காரணமாக இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 09 (SLFRS 09) இற்கமைய பயன்மிக்க வட்டி வீத முறையொன்றைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானம் இனங்கண்டு கொள்ளப்படும்.

## 2.22 செலவுகளை இனங்காணல்

நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகள் அந்த செலவுகளின் தன்மையை அடிப்படையாகக்கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆண்டின் மேலதிகத்தை கணக்கிடும்போது இளமாணிப் பட்டத் தேர்வுநாடிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவுகளும் அரசாங்கத்தின் மீண்டெழும் உதவிகளிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

## 2.23 குறித்துரைக்கப்பட்ட நிதியங்கள் (வரையறுக்கப்பட்டவை)

இந்த நிதியங்கள் பீடங்கள் சபை, செனட், நிதிக் குழு மற்றும் பேரவையின் அங்கீகாரத்துடன் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிறுவப்பட்டுள்ளன. இந்த நிதியங்களின் செயல்பாடுகளை வழிநடாத்துவதற்கு துணைச் சட்டங்கள் மற்றும் UGC சுற்றறிக்கைகள் உள்ளன. எனவே, இந்த நிதியங்கள் நாளாந்தம் செயற்பாட்டு நிதியக் கணக்குகளுக்கு எதிராக நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டில் புலமைப்பரிசில் நிதியங்களின் திரட்டப்பட்ட வட்டியிலிருந்து புலமைப்பரிசில்கள் செலுத்தப்படுகின்றது. மேலும், ஏனைய நிதியங்களின் செலவுகள் ஆண்டின் இறுதியில் தொடர்புடைய நிதியக் கணக்கிற்கு பற்று வைக்கப்படுகின்றது.

## 2.24 திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் (CODL)

முழுமையான சுய நிதி அடிப்படையில் “திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் (CODL)” என தனியான பிரிவொன்று பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவுக்காக முதலில் தனியான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அவை பல்கலைக்கழகத்தின் மொத்த நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 932 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய CODL இன் நிதியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு CODL இனால் துணைச்

சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக நிதியத்தின் செலவுகள் நிதியத்தின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும். ஆண்டினுள் நிதியத்தின் செலவு ரூ. 560,343.98 ஆகும்.

CODL இன் வருமானம் கீழே குறிப்பிடப்பட்ட பிரகாரம் கால அடிப்படையில் வேறுபடுகின்றது. (2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பாடநெறிகளை நிறைவு செய்வதற்கு தேவையான மாதங்களின் எண்ணிக்கை)

| **கற்கை திட்டம்** | **ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் B/F** | **ஆண்டின் பாடநெறி வருமானம்** | **மொத்தம்** | **ஒத்தி வைக்கப்பட்ட வருமானம்** | |
|---|---|---|---|---|---|
| வரைதல் (டிப்ளோமா) 2022/23 | 725,100 | 240,000 | 965,100 | - | |
| குரல் இசை (டிப்ளோமா) 2022/23 & 2023/24 | 18,136 | - | 18,136 | - | |
| நடனம் (டிப்ளோமா) 2023/24 | 2,591,643 | 1,850,000 | 4,441,643 | - | |
| வரைதல் (டிப்ளோமா) 2023/24 | 13,535 | 2,194,500 | 2,208,035 | - | |
| நடனம் (டிப்ளோமா) 2024/25 | 1,045 | 5,182,090 | 5,183,135 | 3,455,423 | 08 மாதங்கள் முன்னால் |
| நடனம் (டிப்ளோமா) 2025/26 | - | 354,100 | 354,100 | 354,100 | |
| மட்பாண்டக் கலை மற்றும் வடிவமைப்பு (டிப்ளோமா) 2024/25 | - | 19,590 | 19,590 | 19,590 | |
| **மொத்தம்** | **3,349,459** | **9,840,280** | **13,189,739** | **3,829,113** | |

## 2.25 பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு

சுய நிதி அடிப்படையில் பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு என தனியான பீடமொன்று பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்றது. இந்தப் பீடத்திற்காக தனியான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு பின்னர் அது பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்படுகின்றது. 932 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய, FGS நிதியைப் பயன்படுத்துவதற்காக துணைச்சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக நிதியச் செலவுகளின் அளவு நிதிய வருமானக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. ஆண்டின் நிதியச் செலவுகள் ரூ. 5,009.83 ஆகும்.

கீழ் குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகளின் அடிப்படையில் FGS இன் வருமானம் வேறுபட்டது. (பரீட்சைகளுக்காக செலவு செய்ய வேண்டியேற்படுகின்றது)

| | ஒத்தி வைக்கப்பட் ட வருமானம் B/F | ஆண்டின் பாடநெறி வருமானம் | மொத்தம் | ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| தத்துவ முதுமாணி (M.Phill) | - | 345,500 | 345,500 | - |
| கலாநிதி (PhD) | - | 485,000 | 485,000 | - |
| குறுகிய கால பாடநெறி 3 | - | 96,000 | 96,000 | - |
| குறுகிய கால பாடநெறி 4 | - | 717,500 | 717,500 | - |
| **மொத்தம்** | **-** | **1,644,000** | **1,644,000** | **-** |

## 2.26 மூலதன / அபிவிருத்தி உதவியின் கீழ் பெறப்பட்ட விசேட உதவிகளை கணக்கு வைத்தல்

திறைசேரியிடமிருந்து விசேட செயற் திட்டங்களுக்காக கிடைக்கும் மூலதன நிதி ஏற்பாடுகள் முதலில் செலவிடப்படாத மூலதன உதவியின் கீழ் கணக்கு வைக்கப்படும். இந்த நிதியிலிருந்து மீண்டெழும் தன்மையைக்கொண்ட அலுவல்களுக்கு செலவு செய்யும்போது அந்தத் தொகை நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் மீண்டெழும் கிடைப்பனவு மற்றும் செலவாகக் குறிப்பிடப்படுகின்றது.

## 2.27 "நிலையான சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு" இன் கீழ் கிடைக்கப்பெற்ற மூலதன உதவிகளைக் கணக்கு வைத்தல்

மூலதனச் செலவாகக் கருத முடியுமான செலவுகள் மாத்திரம் மூலதனப்படுத்தப்படுவதுடன் ஏனைய செலவுகள் நடப்பு ஆண்டின் நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் செலவாகக் குறிப்பிடப்பட்டு பதிவழிப்புச் செய்யப்படும்.

## 2.28 தொடர்புடைய தரப்பினர் சம்பந்தமாக வெளிப்படுத்தல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் கொள்கை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு இணையத்தள வசதிகள் LEARN நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது பல்கலைக்கழகத்தின் நடனம் மற்றும் நாடக பீடத்தின் சிரேட்ட விரிவுரையாளரான திருமதி அனூஷா ஜயசிரி அவர்கள் LEARN நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக அலுவல் மேற்கொண்டு வருகின்றார். அந்த விரிவுரையாளரால் ஆற்றப்படும் சேவைக்காக பல்கலைக்கழகத்தினால் அல்லது LEARN நிறுவனத்தினால் எந்தவிதமான ஊதியமும் செலுத்தப்படுவதில்லை.

## 2.29 காசுப் பாய்ச்சல் கூற்று

SLPSAS 2 இற்கமைய மறைமுக முறையை அடிப்படையாகக்கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதிசார் செயற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளில் இனங்கண்டுகொள்ளப்படும். காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பது குறுகிய கால உயர் திரவத் தன்மையைக் கொண்ட முதலீட்டை உள்ளடக்கியதாகும். அவற்றை இலகுவில் காசாக மாற்றிக்கொள்ள முடியுமென்பதுடன் பெறுமதி மாற்றம் எனும் சிறிய ஆபத்துக்குட்பட்டதாகும்.

## 2.30 பல்கலைக்கழகத்தின் வசமிருந்த மற்றும் கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட காணிகள் சம்பந்தமான விபரம்

| காணியின் பெயர் | தற்போதைய நிலைமை |
|---|---|
| இலக்கம் 21, அல்பிரட் கிரசன்ட் | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய, 4/10/41274 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. |
| இலக்கம் 21/1 அல்பிரட் கிரசன்ட் | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் 2013 நவம்பர் 19 ஆம் திகதிய, 4/3/9908 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. |
| இலக்கம் 46, ஹோர்ட்டன் பிளேஸ் | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இலக்கம் 146, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இலக்கம் 137, வளவ்வத்தை, ராஜகிரிய | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 2.31 பிணை முறி மீறல்கள் பற்றிய விபரம்

**பெயர்** : திரு.எஸ்.எம்.கோட்டெகொட

***தற்போதைய நிலைமை*** : குறித்த தொகையை மீளச் செலுத்துமாறு 2020.09.29 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பிணைமுறித் தொகையை 48 தவணைகளில் செலுத்தித் தீர்ப்பதற்கு கவுன்சிலினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தத்திற்கமைய 2022 யூன் மாதம் முதல் மாதாந்த தவணைத் தொகை செலுத்தப்படுகின்றது. UPF ஊடாக ரூ.1,057,456.30 அறவிடப்பட்டுள்ளதுடன், 2022 யூன் முதல் 2024 திசெம்பர் வரை கிடைக்கப்பெற்ற மொத்தத் தவணைத் தெகை ரூ. 2,035,557.03 ஆகும். மொத்தப் பற்றுச்சீட்டுத் தொகையான ரூ. 2,305,055.77

முதலீடு செய்யப்பட்டுள்ளது. பெறப்பட வேண்டிய தொகையான ரூ.1,904,257.62 2023 ஆம் ஆண்டு கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது (மீளக் குறிப்பிடப்பட்டது) மற்றும் 2024.12.31 திகதியன்று பெறப்பட வேண்டிய தொகை ரூ.1,116,300.06 ஆகும்.

**பெயர்** :திருமதி பீ.கே.டப்ளியு.எம்.விஜேகுணசேக்கர(பிரதான கடனாளி) - வழக்கு இல: DMR/1853/2019

திருமதி. எஸ்.கே. இளேபெரும / திரு. பி.ஆர். தசநாயக்க (பிணையாளர்கள்) - வழக்கு இல.: DMR/1852/2019

***தற்போதைய நிலைமை*** : பிரதான கடனாளி மற்றும் பிணையாளிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிடப்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பிரதான கடனாளியினால் இணக்கத் தீர்வு முன்மொழியப்பட்டு 2020.12.17 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் 178 ஆவது கூட்டத்தின்போது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிணையாளிகளுக்கு எதிராக DMR/1852/2019 ஆம் இலக்க வழக்கு தற்போது விசாரிக்கப்படுகிறது. அடுத்த விசாரணை 2025 யூன் 9 ஆம் திகதி விசாரிக்கப்படவுள்ளது. DMR/1853/2019 ஆம் இலக்க வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. அறவிடப்பட வேண்டிய தொகை ரூ.1,271,568.00 ஆகுமென்பதோடு, சேமலாப நிதியத்தின் மீதி இருப்புத் தொகை ரூ.148,438.31 ஆகுமென்பதோடு அதிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு முடியும்.

## 2.32 <u>ஏனையவை</u>

### 2.32.01 VAPA பல்கலைக்கழக அச்சகம்

| | **239,023,550** | **173,923,589** |

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**
**2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)**

| 25 வைப்புக்கள் / பிடிமானங்கள் | 2024 | 2023 (மீளக் குறிப்பிடப்பட்டது) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஏனைய வைப்புக்கள் | 740,191 | 142,590 |
| கேள்வி(பெறுகை) வைப்புக்கள் | 72,000 | 316,271 |
| பிடிமானத் தொகை கணக்கு (மீண்டெழும்) | 567,006 | 557,418 |
| பிடிமானத் தொகை கணக்கு (மூலதன) | 4,967,528 | 16,306,930 |
| உணவகத்திற்கான பாதுகாப்பு வைப்பு | 35,400 | 35,400 |
| கலை அரங்கத்திற்கான வைப்பு ( J D A பெரேரா அரங்கம்) | 255,000 | 245,000 |
| நூலக வைப்பு - ப.பி.ப.பிரிவு | 138,500 | 138,500 |
| திறந்த, தொ.கல்வி பிரிவின் நூலக வைப்பு | 56,000 | 56,000 |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்பு - UBL | 384,000 | 420,000 |
| நடன அரங்க வைப்புக்கள் | 5,000 | 5,000 |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் (நைன் ஹார்ட்ஸ்) | 50,000 | 50,000 |
| பணிக்கொடை கொடுப்பனவின் போதான பிடிமானம் | - | 925,228 |
| செயலாற்றுகை பிணைமுறிகள் | 1,198,745 | - |
| | **8,469,369** | **19,198,338** |

| 26 கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு | 2024 | 2023 (மீளக் குறிப்பிடப்பட்டது) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஆரம்ப மீதி | 3,914,590 | 2,614,590 |
| கழிக்க - 2024 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு | (2,598,360) | - |
| 2024 ஆண்டிற்கான ஒதுக்கீடு | - | 1,300,000 |
| | **1,316,230** | **3,914,590** |

| 27 விசேட நிதியம் (வரையறுக்கப்பட்ட) | 2024 | 2023 (மீளக் குறிப்பிடப்பட்டது) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஒப்பந்த மீறல்கள் மற்றும் பிணை முறி மீறல்கள் | 8,933,539 | 8,395,064 |
| ஸ்ரீ சுச்சரித்த புலமைப் பரிசில் நிதியம் | 278,111 | 263,254 |
| எஸ்.ஹென்சன் புலமைப் பரிசில் நிதியம் | 21,642 | 23,184 |
| டி.கே.சுபசிங்க புலமைப் பரிசில் நிதியம் | 99,528 | 99,665 |
| ரஞ்சன் அபேசிங்க மற்றும் மிச்செல் ஆம்ஸ் புலமைப் பரிசில் நிதியம் | 62,313 | 65,170 |
| கமலா ஜயதிலக்க புலமைப் பரிசில் நிதியம் | 94,266 | 93,949 |
| ஆனந்த ஜயசிங்க புலமைப் பரிசில் நிதியம் | 90,837 | 89,262 |
| துணைவேந்தர் நிதியம் | 8,789,342 | 7,955,887 |
| சுனில் சாந்த புலமைப்பரிசில் அமைப்பு | 561,445 | 524,835 |
| பிரிவு நிதியம் (சீ.டி.எஸ்.குலதிலக்க ஆராய்ச்சிப் பிரிவு நிதியம்) | 50,000 | 50,000 |
| நலன்புரி நிதியம் | 3,907,878 | 3,210,540 |
| பீட அபிவிருத்தி நிதியம் (நடனம் மற்றும் நாடகம்) | 1,992,022 | 1,612,121 |
| பீட அபிவிருத்தி நிதியம் (சங்கீதம்) | 456,555 | 428,978 |
| பீட அபிவிருத்தி நிதியம் (கட்புலக் கலை) | 1,515,321 | 1,256,372 |
| பீட அபிவிருத்தி நிதியம் (பட்டப்பின் படிப்பு) | 1,559,022 | 1,233,149 |
| பேராசிரியர் சுகுணசிரி புலமைப் பரிசில் நிதியம் | 205,941 | 201,225 |
| மஹகமசேக்கர புலமைப் பரிசில் நிதியம் | 290,931 | 290,972 |
| ஈட்டிய வருமான நிதியம் | 10,139,171 | 8,918,029 |
| கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக வணிக இணைப்பு | - | 1,242,870 |
| தி.தொ.க.மையத்தின் ஆராய்ச்சி மற்றும் வசதிகளை மேம்படுத்தல் | 1,909,280 | 1,088,685 |
| பட்டப் படிப்பு பீடத்தின் ஆராய்ச்சி மற்றும் வசதிகளை மேம்படுத்தல் | 217,001 | 44,996 |
| மாணவர் ஆக்கப் பணிகள் நிதியம் | 9,212 | - |
| சிசு சஹன புலமைப்பரிசில் அன்பளிப்புக்கள் நிதியம் | 1,524,532 | 1,081,133 |
| | **42,707,889** | **38,169,340** |

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**
**2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)**

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| **28** | **மீள் மதிப்பீட்டு இருப்பு** | | (மீளக் குறிப்பிடப்பட்டது) |
| | | ரூ. | ரூ. |
| | மீள் மதிப்பீட்டு மேலதிகம் | 2,121,757,473 | 2,121,757,473 |
| | மீள் மதிப்பீட்டு மேலதிகம் - வாகனங்கள் | 88,803,267 | 27,400,000 |
| | | **2,210,560,740** | **2,149,157,473** |

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| **29** | **நன்கொடைகள்** | | (மீளக் குறிப்பிடப்பட்டது) |
| | | ரூ. | ரூ. |
| | நன்கொடை - VAPA அச்சகம் | 91,200 | 400,795 |
| | நன்கொடை ( AHEAD ) | - | 2,696,350 |
| | | **91,200** | **3,097,145** |

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| **30** | **நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம்** | | (மீளக் குறிப்பிடப்பட்டது) |
| | | ரூ. | ரூ. |
| | நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் - CODL | 3,829,113 | 3,349,458 |
| | நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் - FGS | - | 88,000 |
| | | **3,829,113** | **3,437,458** |

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**
**2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**(புள்ளிவிபரங்கள் அண்மிய ரூபாய்க்கு சீர்செய்யப்பட்டுள்ளது)**

| | | | | |
|---|---|---|---|---|
| **31** | முந்தைய ஆண்டின் சீர்படுத்தல்கள் | | | |
| **31.1** | **திரட்டிய மீண்டெழும் நிதிக்கான முந்தைய ஆண்டின் சீர்படுத்தல்கள்** | | | |
| | 2024.01.01 ஆம் திகதியன்று மீதி | | | (134,809,037) |
| | **2023 ஆம் ஆண்டிற்கான முந்தைய ஆண்டின் சீர்படுத்தல்கள்** | **பேரேட்டுப் பதிவு** | | |
| i. | நடன அரங்கத்தின் பதிவு செய்தல் வருமானத்தை சரி செய்வதற்காக ரூ.185,000 இற்கு குறைவாக ஈட்டல், 2023 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எதிரான செலவுகள் | 392 | 185,000 | |
| ii. | பதிவு செய்தல் திட்டத்தை சரி செய்தல் பாரம்பரிய கருத்திட்ட வருமானத்தை ரூ.358,000 இற்கும் குறைவாக ஈட்டல், 2023 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எதிரான செலவுகளைக் குறைத்தல் | 391 | 358,000 | |
| iii. | 2023 ஆம் ஆண்டிற்கான நடன அரங்கத்தின் மீள் குறியீட்டை துரிதப்படுத்தல் | 392 | (185,000) | |
| iv. | 2023 ஆம் ஆண்டிற்கான திட்ட பாரம்பரிய திட்டத்தின் மீள் குறியீட்டை துரிதப்படுத்தல் | 391 | (358,000) | |
| v. | நுகர்வுக்காக குறைவான அளவில் ஈட்டலை சரி செய்தல் 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு - (குறிப்பு 31.5) | 305 | (28,287,108) | |
| vi. | 2023 ஆம் ஆண்டிற்கான காப்புறுதிச் செலவுகசள் அறிக்கைப்படுத்தலை சரி செய்தல் | 346 | (1,836,125) | |
| vii. | 2023 ஆம் ஆண்டு பெறப்பட வேண்டிய கணக்கிற்கு ருமடு கணக்குகளைத் தனித்தனியாகப் அறிக்கைப்படுத்தும் வகையில் பதிவு செய்தல் செலவை சீர் செய்தல் | 371 | 1,438,580 | |
| viii. | 2023 ஆம் ஆண்டில் VAPA அச்சகத்தின் BOC கணக்கின் வருமானத்தை VAPA ஊடக கணக்குகளைத் தனித்தனியாகப் அறிக்கைப்படுத்தும் வகையில் சரிசெய்தல் | 372 | (341,819) | |
| ix. | 2023 ஆம் ஆண்டில; VAPA தொலைக்காட்சி கணக்கிற்கு தனித்தனியாக வருமானத்தை | 373 | (182,625) | |
| x. | 2023 ஆம் ஆண்டில் VAPA TV இன் செலவுகளை VAPA TV கணக்குகளைத் தனித்தனியாக | 373 | 346,978 | |
| xi. | 2023 ஆம் ஆண்டில் வருகைதரு விரிவுரையாளருக்கு பணம் செலுத்துதல் | | (3,000) | |
| xii. | UBL கணக்குகளைத் தனித்தனியாக அறிக்கைப்படுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டில் UBL இன் வருமானத்தை சீர்படுத்தல் | 317 | (645,710) | |
| xiii. | 2023 ஆம் ஆண்டில் VAPA தொலைக்காட்சி கணக்குகளைத் தனித்தனியாக அறிக்கைப்படுத்தும் வகையில் VAPA தொலைக்காட்சி செலவுகளைத் தனித்தனியாக சீர்படுத்தல். | 318 | (593,689) | |
| xiv. | பட்டமளிப்பு வைப்புத்தொகைகளைப் பெறுதல் | | 614,889 | |
| xv. | சிறப்புக் கொடுப்பனவுகளில் சிறப்பு முற்பணங்களை அறிக்கைப்படுத்தலை சரிசெய்தல் | 307 | 3,211 | |
| xvi. | தொகை முழுமையாக்கலை சரி செய்தல் | | 25 | |
| xvii. | தொகை முழுமையாக்கலை சரி செய்தல் | | 18 | |
| xviii. | 2023 ஆம் ஆண்டில் VAPA அச்சகம் மற்றும் VAPA தொலைக்காட்சி கணக்குகளை தனித்தனியாக அறிக்கைப்படுத்தும் வகையில் VAPA அச்சகம் மற்றும் VAPA தொலைக்காட்சி செலவுகளை சீர்படுத்தல் | 335 | 197,315 | |
| xix. | IMAC கணினி பழுதுபார்ப்புக் கட்டணங்களை திருப்பிச் செலுத்தல் | | 281,413 | |
| xx. | 2023 கணக்காய்வு ஐய வினாவுக்கமைய 2023 இல் அறிக்கைப்படுத்தப்பட்ட புறத்தொதுக்குதலை சீர்படுத்தும் வகையில் 5326 பொருட்களை புறத்தொதுக்குதல். - (குறிப்பு: 31.4) | | 15,966,330 | (13,041,316) |
| | **2023.01.01 ஆம் திகதியன்று சீர்படுத்தப்பட்ட மீதி - மீளக் குறிப்பிடப்பட்ட** | | | **(147,850,353)** |
| **31.2** | **திரட்டப்பட்ட நிதி மூலதனத்திற்கான முந்தைய ஆண்டு சரிசெய்தல்கள்** | | | |
| | 2024.01.01 ஆம் திகதியன்று மீதி (அறிக்கைப்படுத்தப்பட்ட) | | | 2,473,768,355 |
| | **2023 ஆம் ஆண்டிற்கான முந்தைய ஆண்டின் சீர்படுத்தல்கள்** | | | |
| i. | மூலதன முற்பணங்களின் 'வற்' தொகையை அறவிடல் காரணமாக கட்டிடக் கணக்குகளை மூலதனமாக்குவதற்கான தேய்மானத்தை அறிக்கைப்படுத்தலை சரிசெய்தல் - (குறிப்பு: 31.3) | | (659,705) | |
| ii. | 2023 இல் புறத்தொதுக்கல் சரிசெய்தல் இழப்பு காரணமாக திரட்டப்பட்ட நிதி மூலதனத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் - (குறிப்பு: 31.4) | | (12,011,039) | (12,670,744) |
| | **01.01.2023 ஆம் திகதியன்று திருத்தப்பட்ட மீதி -மீளக் குறிப்பிடப்பட்ட** | | | **2,461,097,611** |

31.3 **கட்டிடங்கள் சொத்துக்கள் சீர்படுத்தல்கள்**

| விபரம் | கட்டிட சொத்துக் கணக்கு (குறிப்பு - ம) | மூலதன முற்பணக் கணக்கு (குறிப்பு ஊ) | | திரட்டிய நிதியம் - மூலதனம் துடு.332 | திரட்டிய தேய்மானம் துடு.395 |
|---|---|---|---|---|---|
| மூலதன முற்பணங்களின் வற் தொகையை அறவிடல் மற்றும் வட்டி மற்றும் நிலுவைத் தொகையை செலுத்துவதன் மூலமும் கட்டிடக் கணக்குகளை மூலதனமாக்குதல். | | | பேரேட்டுப் பதிவு | | |
| 1 பொது வசதிகள் மற்றும் சங்கீத பீடக் கட்டிடம் | 4,262,549 | (4,262,549) | JE/344 | - | |
| 2 கட்புலக் கலைகள் பீடக் கட்டிடம் | 2,714,204 | (2,714,204) | JE/342 | - | 649,384 |
| 3 கட்புலக் கலைகள் பீடக் கட்டிடம் | 10,273,477 | - | JE/355 | - | - |
| 4 சங்கீதம் கட்டம் IV நிலை II | (303,988) | 303,988 | JE/323 | - | - |
| 5 சங்கீதம் கட்டம் IV நிலை I & II | 20,357,659 | - | JE/355 | - | - |
| 6 சங்கீதம் கட்டம் IV நிலை I | 50,752 | (50,752) | JE/343 | - | - |
| 7 கட்டிடங்கள் புனரமைப்பு | - | (10,321) | | 10,321 | - |
| **மொத்தம்** | **37,354,652** | **(6,733,838)** | | **10,321** | **649,384** |

31.4 **Adjustment to the disposal of Fixed Assets - total item numbers 12570**

| விபரம் | அலுவலக உபகரணங்கள் | பொறித் தொகுதி மற்றும் இயந்திரங்கள் | ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | தளபாடங்கள் மற்றும் பொருத்துகை | நூலக புத்தகங்கள் | விளையாட்டு உபகரணங்கள் | நடன ஆடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கூட்டுக - முந்தைய ஆண்டின் புறத்தொதுக்குதல் - JE/377 | 77,491,605 | 583,053 | 143,079,045 | 53,791,589 | 714,670 | 697,417 | 9,050,341 | 285,407,719 |
| முந்தைய ஆண்டின் (2023) புறத்தொதுக்குதல் - JI | (1,989,059) | (48,053) | (3,114,453) | (7,105,899) | - | (697,417) | (14,825) | (12,969,705) |
| | **75,502,546** | **535,000** | **139,964,592** | **46,685,690** | **714,670** | **-** | **9,035,516** | **272,438,014** |
| | | | | | | | | |
| புறத்தொதுக்கலின் சேர்த்தலுக்கான முந்தைய ஆண்டின் தேய்மானம் - JE/378 | 72,585,199 | 583,053 | 140,534,757 | 45,412,241 | 714,670 | 697,417 | 8,819,037 | 269,346,374 |
| புறத்தொதுக்கலுக்கான முந்தைய ஆண்டின் தேய்மானம் - JE/376 | (1,904,731) | (48,053) | (3,111,831) | (7,097,833) | - | (697,417) | (14,825) | (12,874,690) |
| 2023 ஆண்டுக்கான புறத்தொதுக்கலின் சேர்த்தலுக்கான தேய்மானம் - JE/393 - | 5,129,639 | 373 | 3,665,280 | 3,019,347 | - | - | 196,400 | 12,011,039 |
| **திரட்டப்பட்ட தேய்மான மாற்றங்கள்** | **75,810,108** | **535,373** | **141,088,206** | **41,333,754** | **714,670** | **-** | **9,000,612** | **268,482,723** |
| 2023 ஆம் ஆண்டில் புறத்தொதுக்கலை சீர்செய்தல் காரணமாக திரட்டப்பட்ட நிதி மூலதனத்தில் மாற்றங்கள் | | | | | | | | 15,966,330 |
| 2023 ஆம் ஆண்டில் புறத்தொதுக்கலை சீர்செய்யாமையினால் திரட்டப்பட்ட நிதி மூலதனத்தில் மாற்றங்கள் | | | | | | | | 12,011,039 |
| **2023 ஆம் ஆண்டில் புறத்தொதுக்கலை சீர்செய்தல் காரணமாக திரட்டப்பட்ட நிதி மூலதனத்தில் தேறிய மாற்றங்கள்** | | | | | | | | **3,955,291** |

31.5

| **பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்** | **2023 அறிக்கைப்படுத்தப்பட்ட ரூ.** | **2023 (மீளக் குறிப்பிடப்பட்ட) ரூ.** | | **திருத்தப்பட்ட ரூ.** |
|---|---|---|---|---|
| 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்குத் தேவையான மொத்த நிதி ஏற்பாடு | 150,326,884 | 173,923,589 | | 23,596,706 |
| | 82,212,041 | 77,521,640 | JE/314 | |
| 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டில் இருக்கும் மொத்த நிதி ஏற்பாடு | | | | (4,690,402) |
| 2023.12.31 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாட்டின் கீழ் | 68,114,843 | 96,401,950 | | 28,287,107 |
| 2023 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகள் (தற்போதைய) | - | 20,612,340 | | |
| அடுத்தடுத்த காலகட்டத்துடன் தொடர்புடைய (தற்போதைய அல்லாத) | 150,326,884 | 153,311,250 | | |
| | 150,326,884 | | | |
| 2023.12.31 திகதியன்று நிதி ஏற்பாடு முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டது | | 173,923,590 | | |

31.6

| | |
|---|---|
| 2024.01.01 திகதியன்று திரட்டப்பட்ட நிதியம் (அறிக்கையிடப்பட்டது) | 65,913,655 |
| 2024 இல் திருப்பிச் செலுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பக் கட்டணங்களுக்கான சீர்படுத்தல் | 20,500 |
| 2024.01.01 திகதியன்று திரட்டப்பட்ட நிதி (மீள வெளியிடப்பட்ட) | 65,893,155 |

***31.12.2024 ஆம் திகதியன்று பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு***

**W O R K I N G S**

i மாத சம்பளம் =அடிப்படை சம்பளம் +வாழ்.செல.படி+கல்விசார் படி அல்லது MCA(பணிக்கொடையுடன் தொடர்புடைய சம்பளம்)
ii ஆளணி வருமானம் = பொருள் சாராத
iii வட்டி 11.47 % = திறைசேரி முறிகளுக்காக செலுத்தப்பட்ட வட்டி

| % வருடாந்த சராசரி சம்பள அதிகரிப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| | சம்பளம் | வாழ்க்கை செலவுப் படி | கல்விசார் படி மற்றும் MCA | மொத்தம் % | EAASI |
| கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணி | 2% | 1% | 1.50% | 4.50% | **0.045** |
| கல்விசாரா ஆளணி | 1.50% | 1% | 0.45% | 2.95% | **0.030** |
| கல்விசார் உதவி ஆளணி | 2% | 1% | 0.45% | 3.45% | **0.035** |

**வாய்ப்பாடு**

Past service*Salary*R^Future service/2

Where R = 1+%Expected Annual Average Salary Increament(EAASI)/1+% Adjusted Discount Rate

| ஆளணி வகைப்படுத்தல் | R | 1+EAASI% | 1+ITB% | R |
|---|---|---|---|---|
| கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணி | 1.045/1.1147 | 1.045 | 1.1147 | **0.9375** |
| கல்விசாரா ஆளணி | 1.030/1.1147 | 1.030 | 1.1147 | **0.9240** |
| கல்விசார் உதவி ஆளணி | 1.035/1.1147 | 1.035 | 1.1147 | **0.9285** |

***31.12.2024 ஆம் திகதியன்று பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு (பொழிப்பு)***

| | |
|---|---|
| கல்விசார் (நடனம் மற்றும் நாடகம்) | 74,356,033.51 |
| கல்விசார் (சங்கீதம்) | 72,779,663.61 |
| கல்விசார் (கட்புலக் கலைகள்) | 44,423,688.82 |
| கல்விசார் உதவி IT + ஏனைய ஆளணி | 23,062.06 |
| நிறைவேற்று தரம் | 12,147,361.57 |
| கல்விசார் உதவி - FM | 4,826,786.20 |
| கல்விசார் உதவி - FVA | 371,068.19 |
| கல்விசார் உதவி - FDD | 2,702,277.34 |
| எழுதுநர் மற்றும் துணை தரங்கள் | 20,121,940.49 |
| கனிட்ட ஆளணி | 7,271,668.44 |
| **2024.12.31ஆம் திகதியன்று மொத்த நிதி ஏற்பாடு** | **239,023,550.23** |

| | | | |
|---|---|---|---|
| 2024.12.31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான மொத்த நிதி ஏற்பாடு | | | **239,023,550.23** |
| 31/12/2023ஆம் திகதியன்று மீதி | | 173,923,589.37 | |
| **2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்(31.12.2024 வரை)** | | 15,745,372.68 | |
| ஐ.எஸ்.டயஸ் | 527,618.00 | | |
| கே.பீ.டி.குலதுங்க | 541,714.25 | | |
| கே.எம்.பீ.மதுரங்க | 619,886.25 | | |
| டி.டபிள்யூ.ஏ.ரங்கதேவ | 1,859,299.50 | | |
| டபிள்யூ.ஏ.ஏ.எம்.விக்கிரமசிங்க | 5,471,186.80 | | |
| எச்.எச்.லியனாராச்சி | 655,178.00 | | |
| டபிள்யூ.ஏ.கே.ஜே.வலஹபிட்டிய | 780,140.25 | | |
| கே.ஏ.எஸ்.பிரியலால் | 350,109.38 | | |
| ஆர்.ஏ.எஸ்.பீ.ரூபசிங்க | 1,483,416.00 | | |
| ஆர்.ஏ.குணபால | 3,456,824.25 | | |
| 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டில் இருக்கும் மொத்த நிதி ஏற்பாடு | | | 158,178,216.69 |
| ***2024.12.31 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் கீழ்*** | | | **80,845,333.54** |
| **2024 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது (நடைமுறை)** | | | **7,699,020.35** |
| **அடுத்தடுத்த காலத்துடன் தொடர்புடையது (நடைமுறை அல்லாத)** | | | **231,324,529.88** |
| | | | **239,023,550.23** |

HED/B/UVPA/2024/FA/02 2025 யூன் ஆந் திகதி

உபவேந்தர்
கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்

**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 1979 இன் 11 ஆம் இலக்க கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக விதப்புரையின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கிரயம் ரூபா 742,035,590 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு வழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இசை மற்றும் நடன பீட கட்டிடத்தின் நிர்மாணம் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 40,750,130 பல்கலைக்கழகத்தால் கட்டிடத்தின்கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிடக் கணக்கின் மீதி அப்பெறுமதி மற்றும் ஆண்டின் மிகை ரூபா 28,734,873 இனாலும் திரண்ட மிகை ரூபா 11,015,257 இனாலும் முறையே அதிகரித்தும் மற்றும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 சேமிப்புக் கணக்குகளின் மீதி ரூபா 17,562,844 ஆக இருந்த போதிலும் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அந்த மீதிகள் ரூபா 252,296,011 ஆனமையால் ரூபா 234,733,167 இணக்கமிக்கமின்மை காணப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்த்துவைக்கப்படாத மூலதன முற்பணக் கணக்கில் ரூபா 2,759,624 ஆன மீதிக்குரிய பட்டோலைகள் மற்றும் விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 பல்கலைக்கழகத்தின் 2024 இன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற பல்கலைக்கழகத்தின் 2024 இன் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

பல்கலைக்கழகத்தின் 2024 இன் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதன் பொருண்மையான பிழைகள் காணப்படுகின்றமையை நான் முடிவுசெய்தால் அதனைக் கட்டுப்படுத்தும் தரப்பினருக்கு அந்த விடயங்களை சரிசெய்வதற்காக தெரிவித்தல் வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத பிழைகள் காணப்படுமாயின் அவற்றை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு

செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை

இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை மன்றம் பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும் வேறு, எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது பல்கலைக்கழகத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதிருந்தது என.

| | சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| 9அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 103, 104 | 2023 யூன் மாதத்தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1,097,359 பெறுமதியான 3,940 நூலகப் புத்தகங்கள் தொலைந்தமை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 03/2020 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 03(Viii) ஆம் பந்தி | அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படாத நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்படுகின்ற ஒதுக்கீடுகள் நிறுத்தவேண்டியிருந்த போதிலும் அங்கீகாரம் இன்றி ஊழியர் நலன்புரி திட்டமொன்றாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஊழியர் மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,836,125 செலுத்தப்பட்டிருந்தது. |
| | | |
| இ | 2023 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் BD/HRD/126/214/19/ 2023 என்ற திறைசேரி செயலாளரால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சுற்றறிக்கைக் கடிதத்தின் 05 ஆம் பந்தி | பிணைமுறிகளை மீறுவதன் மூலம் திறைசேரிக்கு விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 970,068 திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க தொகுதியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) 2022 ஆம் ஆண்டில் நடன பீடத்திற்காக 03 வருடங்களுக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த கட்டிடமொன்றுக்காக 02 வருட வாடகையை உள்ளடக்கி ஏனைய ஆரம்பித்தல் செலவினத்துடன் கூட்டுமொத்தமாக ரூபா 116,845,984 தொகையும், அறைகளைப் பிரிப்பதற்காக (Partition), காபட் இடுதல் போன்ற கட்டிடத்தை பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவருவதற்காக ரூபா 28,726,084 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இந்த கட்டிடம் ஒரு வருட அளவிலான காலம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் பிரதேச வாசிகளினால் அதிக மேள சத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் காரணமாக 02 வருடங்களின் பின்னர் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் தேவை தொடர்பாக உரிய சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் இந்தக் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்ததன் காரணமாக செலவிடப்பட்ட ரூபா 28,726,084 செலவினம் சிக்கனமற்றதாக இருந்தது. இந்தக் கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட ரூபா 1,050,000 ஆன 27 Exhaust Fan பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய மாணவர் உதவித் தொகைக் கணக்கில் 2023 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,709,495 மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிவாரி பாடநெறி வருமானத்திற்காக பயன்படுத்தப்பட்ட நடைமுறைக் கணக்கில் வருட ஆரம்பத்தில் ரூபா 11,095,033 மீதி காணப்பட்டதுடன் வருட இறுதியில் அக் கணக்கின் மீதி ரூபா 22,102,236 ஆக இருந்த போதும் பொருத்தமான பிரகாரம் முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தாமல் விளைவற்று பேணிச்செல்லப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் போது ஏனைய செலுத்த வேண்டிய செலவினமாக இனங்காணப்பட்ட ரூபா 11,536,153 மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2023 ஆம் ஆண்டில் தெஹிவளை கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட 06 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஒப்பம்: ஜீ.எச்.டீ தர்மபால

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

සෞන්දර්ය කලා විශ්වවිද්‍යාලය
கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF THE VISUAL & PERFORMING ARTS
21, Albert Crescent, Colombo 07, Sri Lanka
Tel. : +94 112 033 710 Fax : +94 112 696 972
E-mail : info@vpa.ac.lk Web. : www.vpa.ac.lk

INTERNAL AUDIT DIVISION
21, Albert Crescent, Colombo 07, Sri Lanka
Tel. : +94 112 026 785 / 6
Fax : +94 112 696 972
E-mail : int.audit.uvpa@gmail.com

මගේ අංකය : ඔබේ අංකය : දිනය :

My No : UVPA/IA/NAO/2024 Your No. : Date : 2025.07.11

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்

**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) இலக்கம் 07 இற்கு மேலதிகமாக 2023.12.15 ஆம் திகதி இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு நியாயமான பெறுமதி பூச்சியமான சொத்துக்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு உரிய, தற்போதும் நியாயமான பெறுமதி பூச்சியம் “0” ஆக இனங்காணப்பட்டுள்ள விடயங்கள் தொடர்ந்தும் அவ்வாறே நியாயமான பெறுமதி “0” ஆக பேணிச் செல்லல் மற்றும் பேணிச்செல்லக்கூடியதாக இருந்தமையும் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மாத்திரம் போதியளவாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 742,035,590 ஆன நியாயமான பெறுமதி பூச்சியம் “0” ஆன சொத்துக்கள் தொடர்பாக குறிப்பு இலக்கம் 2.11.3 இன் கீழ் வெளிப்படுத்தல்களை மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெறுமதி பூச்சியம் அல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடா வருடம் மீண்டும் மீளாய்வு செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம (SLPSAS) இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 35 இல் சொத்தொன்றின் கிரயத்தை மதிப்பிடும் போதும், உரிய சொத்துக்களின் கிரயம் ''கொடுப்பனவுகள் சராசரி கடன் நிபந்தனைகளில் வேறுபடுமாயின் காசுக்கு கொள்வனவு செய்த விலை மற்றும் மொத்தக் கொடுப்பனவுக்கிடையிலான வேறுபாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம (SLPSAS) இலக்கம் 04 இன் பிரகாரம் மாற்று வழியை பயன்படுத்துவராயின் தவிர உரிய செலவினங்கள் வட்டி செலவினமாக இனங்காணப்படல் வேண்டும்'' அதன் பிரகாரம் எமது பல்கலைக்கழகத்தால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம (SLPSAS) இலக்கம் 04 இன் பிரகாரம் உரிய வட்டி செலவினம் வழங்கப்பட்ட மாற்று முறை பயன்படுத்தி ரூபா 40,750,130 ஆன செலுத்தப்பட்ட வட்டித் தொகை அந்த சொத்தின் கிரயமாக இனங்காணப்பட்டு கட்டிடத்தின் கிரயத்துடன் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வட்டித் தொகை ஒப்பந்த உடன்படிக்கையின் 14.6 பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்கு பல்கலைக்கழகத்தால் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் பொதுத்திறைசேரியின் நிதி உரிய பிரகாரம் கிடைக்காமையின் அடிப்படையில் இந்த தாமத வட்டிப் பணம் ரூபா 40,750,130 ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட இலக்கம் HED/D/UVPA/2024/FA/02 ஆம் இலக்க 2025.06.09 ஆம் திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த வட்டி செலவினம் ஏற்பட்ட ஆண்டிற்குரிய செலவினமாக 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிக தாக்கமளித்ததன் பிரகாரம் சீராக்கப்பட்டு வருமானத்திற்கு எதிராக பதிவழித்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கை கடித இலக்கம் 02/2019 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் சகல நடைமுறைக் கணக்குகளிலும் இரவு நேர முதலீட்டு உடன்படிக்கைகள் தொடர்பாக தொடர்புபடுத்தல் வேண்டும். மேலும் 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலம் உரிய நடைமுறைக் கணக்கின் மீதி முதலீடு தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு முதலீட்டுக்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் சகல நடைமுறைக் கணக்குகளுக்குரிய சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு பேணிச்செல்லப்படுவதுடன் உரிய முதலீட்டுக்காக கிடைக்கின்ற வட்டி வருமானம் மாத்திரம் சேமிப்பு கணக்குகளின் மீதிகளின் மூலம் வெளிப் படுத்தப்பட்டுள்ளது. எனினும் வங்கி உறுதிப்படுத்தல் கடிதங்களில் 2024.12.31 இல் உள்ளவாறு உரிய வட்டிக் கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகள் சேமிப்பு கணக்குகளில் மாற்றங்களின் பின்னரான மீதி காண்பித்து விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ரூபா 17,562,844 ஆன மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 சேமிப்புக் கணக்குகளின் மீதியாக இருந்ததுடன் வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அது ரூபா 252,295,414 ஆகும். மேலும் சகல சேமிப்புக் கணக்குகளுக்காகவும் தனித்தனியான இணக்க அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

(ஈ) ஏற்றுக்கொள்கின்றோம். இது மூலதன முற்பணம் 2009 முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் தற்போது உரிய மீதியைப் பரீட்சித்து சரிசெய்யப்பட்டுள்ளது.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

**2.2.2**

(அ) நூலக நுழைவு பதிவேடு 1953 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு பேணிச்செல்லப்படுகின்றது. (Book Accession Register) தற்போது நிலையம் பல நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு வரை 03 கிளை நூலகங்களில் காணப்பட்டதுடன் தற்போது பிரதான நூலகம் மற்றும் ஒரு கிளை நூலகம் உள்ளது. அதன் பிரகாரம் உரிய காணாமல் போனவைகள் தொடர்பாக பொறுப்புவாய்ந்தவர்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

தற்போது 2024 ஆம் ஆண்டிற்கான இருப்பு மதிப்பீடு UGC Commission Circular 01/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் மேலே கூறப்பட்ட கணப்பீடுகளில் காணப்பட்ட குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கும் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஆ) சகல அரசாங்க நிறுவனங்களிலும் ஊழியர்களுக்காக காப்புறுதி திட்டமொன்று அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படுவதுடன் பல்கலைக்கழகத்திற்காகவும் பல்வேறு நிதியங்கள் மூலம் காப்புறுதி மேவுகை வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த பல்கலைக்கழகத்திலும் தொடர்ச்சியாக பல்கலைக்கழக நிதியத்திற்கு பங்களிக்கின்ற தமது ஊழியர்களுக்காக மருத்துவக் காப்புறுதி திட்டமொன்று மேற்கொள்ளப் படுகின்றது. இதன் போது பல்கலைக்கழகத்தால் தவணைப்பணம் செலுத்துவதற்காக உழைக்கப்பட்ட நிதியம் பயன்படுத்தப்படுகின்றது. அந்த நிதியம் போதியளவில் இல்லாமையினால் ஏதாவது ஒரு சதவீதம் காப்புறுதி திட்டத்திற்கு பங்களிக்கின்ற ஊழியர்களால் வழங்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டின் போது காப்புறுதி திட்டத்திற்காக 59 சதவீத அளவு பல்கலைக்கழகம் பங்களித்திருந்ததுடன் மிகுதி 41 சதவீதம் ஊழியர்களினால் வழங்கப்பட்டிருந்தது. இது உழைக்கப்பட்ட நிதிய அளவின் பிரகாரம் முரண்படுகின்றது. 2020.08.28 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2020.10.13 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 07/2020 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் ஊழியர் மருத்துவக் காப்புறுதி வசதிகள் வழங்கப்படுகின்றது. கவனத்திற் கொள்ளப்படுகின்ற ஆண்டிற்காக பல்கலைக்கழக ஊழியர்களுக்கு மருத்துவக் காப்புறுதி வழங்கும் அரசாங்கத்தின் பெறுகை செயற்பாடுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்படுகின்றது.

இதற்காக பல்கலைக்கழகத்தில் உள்ள தொலைத்தொடர்பு கோரபு வழிகளிலிருந்து உழைக்கப்படுகின்ற வருமானங்கள் பயன்படுத்தப்படுகின்றது. இதற்காக உரிய பிரகாரம் நிதிக்குழு மற்றும் நிர்வாக சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 737 இன் "All receipts on a accounts of the violation of agreements and bonds shall be invested in interest earning asset such as fixed deposits and treasury bill and only the interest earn from such investment should be utilize for disbarment" பிரிவின் பிரகாரம் பிணைமுறியகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் வட்டி உழைக்கின்ற நிதியமொன்றில் வைப்புச் செய்து பேணிச்செல்லப்படல் வேண்டும். அதனால் மீளாய்வாண்டின் போது பிணைமுறிகளை மீறியதற்காக அறவிடப்பட்ட ரூபா 970,068 ஆன தொகை நிலையான வைப்புக்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**2.3 ஏனைய விடயங்கள்**

-----------------------------

(அ) நடனம் மற்றும் நாடக பீடத்தில் 400 மாணவர்கள் அளவில் போதியளவான கல்விசார் நடவடிக்கைகள் பேணிச்செல்லப்படுகின்ற கொஹுவல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்குரிய கட்டிடம் ஆகும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் அந்தக் கட்டிடத்தை மீண்டும் வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த கொஹுவல சட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுகிற கல்விசார் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான கட்டிடமொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நிருவாக சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் பல சந்தர்ப்பங்களின் போது கட்டிடம் ஒன்று வாடகை அடிப்படையில் அல்லது கொள்வனவு செய்வதற்கு பத்திரிகை அறிவித்தல் மூலம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. எனினும் அந்த சந்தர்ப்பங்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் காணப்படுகின்ற பிரமாணங்களுக்கு இணங்காமை, உரிய குறித்துரைத்த காலப்பகுதியில் உரிய ஆவணங்கள் காணப்படாமை, சட்ட ரீதியான உரித்தை உறுதிப்படுத்தும் போது அரச நிறுவனங்களினால் அவை பொருத்தமற்றதாகக் காண்பிக்கப்பட்டமை போன்றவற்றின் காரணத்தின் அடிப்படையில் இதற்காக பொருத்தமான நிலைமையில் கட்டிடமொன்றைத் தெரிவு செய்வதற்கான இயலுமை காணப்படவில்லை.

கொஹுவெல கட்டிடத்தில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு விரைவாக கையளிக்குமாறு அவ்வப்போது மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டமையால் 2021 ஆம் ஆண்டின் போது காணி மற்றும் கட்டிட முகாமைத்துவக் குழுவினால் மீண்டும் ஒரு தடைவ தேவை தொடர்பாக பரீட்சித்து சதுர அடி அளவு அதிகரித்து மீண்டும் ஒரு தடவை 2021 ஆம் ஆண்டின் போது பகிரங்கப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் மூலம் கூறுவிலை கோரப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட கேள்விகளுக்கிடையே பல்கலைக்கழகத்திற்கு மிகவும் பொருத்தமானது பரிந்துரை செய்யப்பட்ட கட்டிடம் பெறுகைக்குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது.

இந்த கட்டிடம் கல்விசார் நடவடிக்கைகளில் இரண்டு வருடங்களின் பின்னர் பேணிச்செல்ல முடியாமையின் காரணமாக மேலதிக அதிக வெப்பநிலையான காலநிலை மற்றும் சுற்றாடல் போதியளவில் இல்லாமை போன்ற நடைமுறையான காரணங்கள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் பயன்பாட்டின் போது ஏற்பட்ட நடைமுறைப் பிரச்சினையின் அடிப்படையில் ஆகும்.

நடனம் மற்றும் நாடக பீடத்தில் கல்விசார் நடவடிக்கைகளைப் பேணிச்செல்வதற்காக பொருத்தமான முறையில் ஒளி மீளமைக்கும் கட்டிடத்தை பிரித்து வழங்குதல் மற்றும் வளிப்பதனாக்கி இயந்திரங்களைப் பொருத்துவதற்கு கட்டிட உரிமையாளரிடம் விசாரணை செய்யப்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகள் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் நிறைவேற்றுவதற்கு கட்டிட உரிமையாளர் இணங்காமையினால் பல்கலைக்கழகத்தால் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் கல்விசார் நடவடிக்கைகளுக்கான தேவையான ஒளி மீளமைப்பு கட்டிடத்தில் பிரித்தல் நடவடிக்கை மேற்கொண்டு அந்த கட்டித்தில் இருந்து விலகும் போது அவற்றில் இருந்து அகற்றி ஏனைய வேறு நிலையத்திற்கு பொருத்தக்கூடிய வகையில் ஆகும். வளிப்பதனாக்கி இயந்திரத்தை பொருத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடு காணப்படாமையினால் அந்த சந்தர்ப்பத்தில் அதற்காக நிதியினை பெற்றுக்கொள் வதற்காக Exhaust Fan பொருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாடகை உடன்படிக்கை முடிவடைந்த பின்னர் பல்கலைகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அறைப் பிரிப்புக்கள் மற்றும் Exhaust Fan மீண்டும் பொருத்துவதற்கு முடியுமான பிரகாரம் பல்கலைகத்திற்கு கொண்டு வந்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பல்கலைகழகத்தின் பல்வேறு பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பு கோரிக்கை களுக்குரிய பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அந்தப் Partition பகுதி மீண்டும் பயன்படுத்தப்பட்டதுடன் மிகுதி அளவுகள் எதிர்காலத்தில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமையால் தெஹிவளை கட்டிடம் வாடகைக்கு பெற்றதன் காரணமாக ஒலி மீளமைப்பை பயன்படுத்தி வகுப்பு அறைகளை பிரித்தல் மற்றும் போன்ற காப்பட் இடல் போன்ற பணிகளுக்கான செலவும் சிக்கனமற்றதாக இருந்தது.

தெஹிவளை கட்டிடத்தில் பொருத்தப்பட்ட Exhaust Fan (30) முப்பது பராமரிப்பு பிரிவின் மூலம் கழற்றி பிரதான கட்டிடத்தின் களஞ்சியப் பிரிவு களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது வரையில் அதில் 03 கலைப்பீட கட்டிடத்தில் தேவையான பிரகாரம் பொருத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி அவற்றின் பல்வேறு பிரிவுகளில் இருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளின் பிரகாரம் பொருத்துவதற்காக பராமரிப்பு பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 4,799,495 ஆக மாணவர் உதவிக் கணக்கில் குறிப்பிடப்பட்ட தொகை உரிய மாணவர் உதவித் தொகை பெறவேண்டிய மாணவர்களை இனங்கண்டு உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இதில் குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கம் 84072227 என்ற கணக்கில் அனுப்புதல் பல்கலைக்கழத்தில் மேற்கொள்ளப்படுகின்ற விடுதி கட்டணம், மாணவர் பதிவுக் கட்டணம், மீளச்செலுத்தப்படாத கேள்வி வைப்புக்கள், வழங்குநர்கள் பதிவுக் கட்டணம் போன்ற பல்வேறு வருமானங்களை உள்ளடக்கி இருந்தது. அதன் பிரகாரம் கணக்கில் உள்ள மீதிகளும் மேற்கூறப்பட்ட இரவு நேரம் முதலீட்டு கணக்குகளுக்குரிய சேமிப்புக் கணக்கு இலக்கம் 86608388 ஊடாக முதலீடு செய்யப்படுகின்றது. மேலும் உரிய முதலீட்டின் மூலம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 862,167 வட்டி வருமானம் உழைக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது முதலீட்டுக் கணக்குகள் மீதியைப் பரீட்சித்து புதிய நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்ட ரூபா 11,536,153 ஆன கீழே குறிப்பிடப்படுகின்ற 07 கணக்குகள் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலுத்த வேண்டிய செலவினமாக காண்பிக்கப்பட்டுள்ளது.

| | ரூபா | |
|---|---|---|
| Bursary (Payable/Receivable) Account | 4,709,495 | ரூபா 4,709,495 ஆக மாணவர் உதவித் தொகை கணக்கில் குறிப்பிடப்பட்ட தொகைக்குரிய கிடைக்கவேண்டிய மாணவர்களை இனங்கண்டு உரிய சரிசெய்தல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| Research Symposium | 1,101,643 | செலுத்த வேண்டிய செலவினமாக காண்பிக்கப்பட்டுள்ள இந்த கணக்குகள் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகளுக்காகவும், மாநாடுகளுக்காகவும் வெளித் தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணமாகும். அதற்குரிய பணிகள் தொடர்பாக மேலும் செலுத்த வேண்டிய செலவினங்கள் காணப்படுகின்றதா என்பதை இனங்காண்பதற்கு உரிய பிரிவுகள் மற்றும் பீடங்களின் மூலம் உறுதிப்படுத்தல் கடிதம் தற்போது கோரப்பட்டுள்ளதுடன் உரிய கடிதம் கிடைத்த பின்னர் இது தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| ISME Conference | 579,610 | |
| ICFM Music Faculty | 169,143 | |
| ICH Research Symposium | 41,260 | |
| "Dead Men Don’t Lie" Short Drama | 244,600 | |
| Gratuity Payable | 4,690,402 | பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய திருமதி. K.L.C. பெரேரா அவர்களுக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக உரித்துடைய நலனாளிகளை இனங்காண்பதற்குரிய சட்டரீதியான நடவடிக்கைகள் முடிவடையும் வரை இந்த பணம் செலுத்த வேண்டியதாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

(உ) கொஹுவல கட்டிடத்தில் பயன்படுத்தப்பட்ட பழைய மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட வளிப்பதனாக்கி இயந்திரங்கள் தெஹிவளை கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுடன் அந்த வளிப்பதனாக்கி இயந்திரங்கள் தெஹிவளை கட்டிடத்திலிருந்து விலகியமையால் கம்பனி ஏனைய பொருட்களுடன் நடனம் மற்றும் நாடக பீடம் கொழும்பு வளாகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. இந்த பழைய வளிப்பதனாக்கி இயந்திரங்கள் தரப்பரிசோதனையின் படி செயற்படு நிலையில் காணப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்படடுள்ளது.

பேராசிரியர். ரொஹான் நெத்சிங்ஹ
உபவேந்தர்